**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**
**எட்டாவது பாராளுமன்றம்**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 119**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற
நிலையியற் கட்டளை இலக்கம் 128(5) இன் கீழ்
சமர்ப்பிக்கப்படுகின்ற

# பொது மனுக் குழுவின்
# 6 வது அறிக்கை

(ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்
2013.01.01 இருந்து 2015.06.26 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய
அறிக்கை
மற்றும் 8 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின்
2015.09.01 இருந்து 2016.08.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரியது)

பொது மனுக் குழுவின் தவிசாளர்

பாராளுமன்ற உறுப்பினர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க அவர்களால்**

சமர்ப்பிக்கப்பட்டது.

2016 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அச்சிடப்படுமாறு
கட்டளையிடப்பட்டது

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பாராளுமன்றத்தின் பொதுமனுக்கள் பற்றிய குழு | 1 |
| 2. | பொதுமனுக்கள் பற்றிய குழுவின் தோற்றமும் படிப்படியான வளர்ச்சியும் | 1 |
| 3. | குழுவின் உள்ளடக்கம் | 2 |
| 4. | பொது மனுக்கள் பற்றிய குழுவின் தத்துவங்கள் | 5 |
| 5. | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | 6. |
| 6. | பொது மனுக்கள் பற்றிய குழுவின் கடமைகள் | 7 |
| 7. | 1981 முதல் இற்றைவரையிலான காலப்பகுதியினுள் பொதுமனுக்கள் பற்றிய குழுக்களில் சேவையாற்றிய தவிசாளர்களும் ஏற்புடைய உத்தியோகத்தர்களும் | 9 |
| 8. | ஏழாவது பாராளுமன்றத்தில் அதாவது 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.06.26 ஆந் திகதி வரை பொதுமனுக்கள் பற்றிய குழுவின் நடவடிக்கைகள் | 12 |
| 9. | 2015.06.26 ஆம் திகதி முதல் 2015.09.01 ஆம் திகதி வரை பொதுமனுக்குழு மீதான குழுவின் நடவடிக்கைகள் | 13 |
| 10. | இக்காலகட்டத்தில் பொதுமனுக்கள் பற்றிய குழுப் பணியகத்தினால் எடுக்கப்பட்டுள்ள கொள்கைரீதியான தீர்மானங்கள் | 14 |
| 11. | பொதுமனுக்கள் பற்றிய குழுவின் 5 வது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் பற்றிய பின்ஆய்வு | 15 |
| 12. | ஏழாவது பாராளுமன்றத்தின் பொதுமனுக்கள் பற்றிய குழுவின் இலக்குகளும் விதப்புரைகளும் | 17 |
| 13. | ஏழாவது பாராளுமன்றத்தின் இலக்குகளுக்காக எட்டாவது பாராளுமன்றத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் | 18 |
| 14. | எட்டாவது பாராளுமன்றத்தின் பொதுமனுக் குழுவின் இலக்குகள் | 18 |
| 15. | 2013.01.01 தொடக்கம் 2015.06.26 வரையான காலப்பகுதியில் புலனாய்வுசெய்த மனுக்கள் பற்றிய பொழிப்பு | 19 |
| | (அ) பொதுமனுக்கள் பற்றிய குழுவுக்கு கிடைத்த மனுக்கள் பற்றிய பொழிப்பு | 19 |
| | (ஆ) வழங்கிய நிவாரணத்திற்கிணங்க பொழிப்பு | 20 |
| | (இ) மனுக்களின் புலனாய்வு மேற்கொள்ளப்பட்ட அமைச்சுவாரியான பொழிப்பு | 23 |
| | (ஈ) 6வது பாராளுமன்ற காலஎல்லையினுள் குழுவுக்கு கிடைத்து 2013.01.01 தொடக்கம் 2015.06.26 காலகட்டத்தினுள் விசாரிக்கப்பட்ட மனுக்கள் பற்றிய அமைச்சுவாரியான பொழிப்பு | 25 |
| | (உ) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மான்) ஏற்புடையதான மனுக்கள் பற்றிய பொழிப்பு | 26 |

## உள்ளடக்கம் .....


| | | |
|---|---|---|
| 16. | குழுவினால் நிவாரணம் வழங்கப்பட்ட ஒருசில மனுக்கள் சுருக்கமாக | 27 |
| 17. | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரால் விதந்துரைக்கப்பட்டு நிவாரணங்கள் கிடைத்துள்ள மனுக்கள் | 59 |
| 18. | குழுவினால் நிவாரணம் வழங்கப்படாத ஒருசில சந்தர்ப்பங்கள் | 60 |
| 19. | .எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின்போது 2015.09.01 தொடக்கம் 2016.08.31 வரையான காலப்பகுதியில் புலனாய்வுசெய்த மனுக்கள் பற்றிய பொழிப்பு | |
| | (அ) பொதுமனுக்கள் பற்றிய குழுவுக்கு கிடைத்த மனுக்கள் பற்றிய பொழிப்பு | 63 |
| | (ஆ) வழங்கிய நிவரணத்திற்கிணங்க பொழிப்பு | 63. |
| | (இ) மனுக்களின் புலனாய்வு மேற்கொள்ளப்பட்ட அமைச்சுவாரியான பொழிப்பு | 64 |
| | (ஈ) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மான்) ஏற்புடையதான மனுக்கள் பற்றிய பொழிப்பு | 66 |
| 20. | குழுவினால் நிவாரணம் வழங்கப்பட்ட எட்டு மனுக்கள் தொடர்பான கணிப்பு | 66 |
| 21. | குழுவினால் நிவாரணம் வழங்கப்படாத ஒருசில சந்தர்ப்பங்கள் | 69 |
| | நன்றி | 71 |
| | அட்டவணை 1 - மாதிரி மனுவொன்று | 72 |
| | அட்டவணை 2 - மனுவொன்று நிராகரிக்கப்படுதலுடன் தொடர்புடைய விடயங்கள் | 73 |
| | அட்டவணை 3 - E&O /AC /1/8/6 ஆம் இலக்க 2014.10.10 ஆந் திகதிய சுற்றிக்கை | 74 |
| | அட்டவணை 4 – பயிற்சித் தொடரொன்றுக்காக குழு அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களை ஆற்றுப்படுத்துமாறான கோரிக்கை | 75 |
| | அட்டவணை 5 – ஒம்புட்ஸ்மனின் விதப்புரைகள் சம்பந்தமான சனாதிபதியவர்களின் கடிதம் | 76 |
| | அட்டவணை 6 – அடிப்படை உரிமைகள் சம்பந்தமான 17/2005 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கை | 77 |

## கௌரவ தவிசாளரின் குறிப்பு

2013.01.01 முதல் 2015.06.26 வரையான காலப்பகுதிக்குள் குழு உறுப்பினராக பல குழுக் கூட்டங்களில் தற்காலிக தவிசாளராக பணிபுரிந்த நான், 2015.12.02 தொடக்கம் இன்று வரை பொதுமனுக்கள் பற்றிய குழுவின் அறிக்கை தொடர்பில் குழுவின் தவிசாளர் என்ற வகையில் என்னுடைய கருத்துக்களையும் சேர்க்க வாய்ப்பு கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அரச நிறுவனங்களின் செயற்பாடு காரணமாகவும் அவற்றின் உத்தியோகத்தர் களால் மேற்கொள்ளப்படுகின்ற முடிவுகள், தீர்மானங்களினாலும் ஒருசில சந்தர்ப்பங்களில் பாதிப்புக்குள்ளாகின்ற பொதுமக்கள் தமது மனக்குறைகளை முன்வைத்து நிவாரணம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பொதுமனுக்கள் பற்றிய குழு தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, சட்டவாக்க சபையினுள், பொதுமக்கள் தமக்கு நேர்ந்த அநீதிகளுக்காக நேரடியாக தொடர்பு கொள்கின்ற ஒரேயொரு குழு பொதுமனுக்கள் பற்றிய குழுவாகுமெனக் குறிப்பிடலாம். அதேபோன்று தற்போது பாராளுமன்றத்தின் பொது மனுக் குழு பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு அதிகரித்துள்ளதென்பதை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக ஆற்றுப்படுத்தப்படுகின்ற பெரும் எண்ணிக்கையான மனுக்களின் வாயிலாக அவதானிக்கலாம்.

2013.01.01 இலிருந்து 2015.06.26 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் தவிசாளர்களாக செயலாற்றிய,

- முன்னய பிரதி அமைச்சரான கௌரவ லலித் திஸாநாயக்க (2012 மார்ச் தொடக்கம் 2015 பெப்ரவரி வரை) மற்றும்
- கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே அவர்களுக்கும் கௌரவ) டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே அவர்களுக்கும் (2012 பெப்ரவரி தொடக்கம் 2015 ஜுன் வரை)

அக் காலப்பகுதியில் குழுவில் தற்காலிக தவிசார்களராக செயலாற்றிய,

- கௌரவ காமினி லொக்குகே
- கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன
- கௌரவ காமினி விஜித் விஜயமுணி சொய்சா
- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
- காலஞ்சென்ற கௌரவ எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்தன
- கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

8 ஆவது பாராளுமன்றத்தில் முதலாவது கூட்டத்தொடரில் 2015.09.01 முதல் 2016.08.31 வரை தவிசாளர்களாக பணிபுரிந்த

- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
- கௌரவ நிஹால் கலப்பத்தி
- கௌரவ பிமல் ரத்நாயக்க

ஆகியோர்களுக்கு குழுவின் அலுவல்களை முன்னெடுத்துச் செல்வதற்காக வழங்கிய பங்களிப்பு தொடர்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னய குழு உறுப்பினர்களும் அதேபோல் தற்போதைய குழு உறுப்பினர்களும் குழுவின் செயற்பாடுகளுக்கு செயற்பாட்டு ரீதியில் பங்களிப்பு வழங்கியது தொடர்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குழு உறுப்பினர் அல்லாத பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன அவர்கள் பல குழுக்கூட்டங்களில் கலந்துகொண்டு மனுவாளர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது பற்றி தமது கருத்துகளை வெளியிட்டது தொடர்பில் விசேடமாக ளனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல் எமது குழுக் கூட்ட செயற்பாடுகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இச் சந்தர்ப்பத்தில் நான் வரவேற்கின்றேன்.

2013.01.01 - 2015.06.26 திகதி வரையான கால எல்லைக்குள் பொது மனுக்குழு 96 கூட்டங்களை நடாத்தியன் ஊடாக 935 மனுக்களை விசாரித்துள்ளதுடன் அவற்றுள் 390 மனுக்கள் தொடர்பில் நிவாரண விதப்புரைகளை வழங்கியுள்ளது. வழங்கப்பட்ட விதப்புரைகளில் 92 மனுதாரர்களின் நிவாரண விதப்புரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமைச்சுகள் குழுவிற்கு அறிவித்துள்ளன.

8 ஆவது பாராளுமன்றத்திற்கான பொது மனுக்குழு 2015.11.14 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்டதுடன் அதன் முதலாவது கூட்டம் 2015.12.02 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளது. அன்று முதல் 2016.08.31 வரை 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 124 மனுக்கள் விசாரிக்கப்பட்டுள்ளன. அங்கு 70 மனுக்கள் தொடர்பில் நிவாரணங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 8 மனுதாரர்களுக்கு மட்டுமே விதந்துரைக்கப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். எஞ்சிய கோவைகள் தொடர்பில் நினைவூட்டப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய பொதுமனு குழுவிற்கு கிடைக்கும் மனுக்களை விசாரிப்பதற்காக நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கும் அனுப்பிவைக்க முடியும் என்பதுடன் அதற்கமைய இந்த அறிக்கை தொடர்புடைய 2013.01.01 திகதி முதல் 2016.08.31 வரை 216 மனுக்கள் விசாரிப்பதற்காக அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அம் மனுக்களை துரிதமாக விசாரித்து குழுவிற்கு ஒத்துழைத்த நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கும் அவரது பணியாட்டொகுதிக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றேன்.

அத்துடன், பொதுமனுக்கள் பற்றிய குழுவுக்கு வழங்கிய மற்றும் வழங்கிவருகின்ற ஒத்துழைப்புக்காக நிகழ்கால தவிசாளர் என்றவகையில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அவர்களின் பதவியணிக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதபட்சத்தில் குழுவினால் இப் பணிகளை ஆற்றியிருக்க முடியாது என்பதையும் தன்னடக்கத்துடன் கூறிக்கொள்கின்றேன். அப்போதைய தபால், நிதி மற்றும் திட்டமிடல், மின்வலு மற்றும் எரிசக்தி, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம், காணி மற்றும் காணி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சரவை நிருபங்களைச் சமர்ப்பித்து மனுதாரர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக முன்வந்தமையையும் நான் நன்றியுணர்வுடன் நினைவுகூர்கின்றேன். அத்துடன் பகிரங்க சேவைகள் ஆணைக்குழு, ஓய்வூதியத் திணைக்களம், தாபனப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகிய நிறுவனங்களும் குழுவுடன்

மிகுந்த ஒத்துழைப்புடன் செயலாற்றியமையையும் குறிப்பிடல் வேண்டும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுகின்ற எனினும் அரசியலமைப்பின் பிரகாரமும் அதன் செயல் நடைமுறை விதிகளுக்கமையவும் செயலாற்றுகின்றதொரு நிறுவனமாக அமைவதால் குழுவினால் கருணை அடிப்படையில் வழங்கப்படுகின்ற விதப்புரைகளை நடைமுறைப்படுத்த முற்படுகின்றபோது அவர்களுக்கு பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் பகிரங்க சேவைகள் ஆணைக்குழு தொடர்பிலான இப் பிரச்சினையும் நீதிச் சேவைகள் ஆணைக்குழு தொடர்பில் குழுவுக்கு உருவாகியுள்ள பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டியுள்ளதென்பதை குறிப்பிடுகிறேன்.

குழுவின் முன் தோற்றுகின்ற அனைவருக்கும் நிவாரணங்களை வழங்க இயலாதென்பதை நாமனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு, குழுவின் அங்கத்தவர்கள் என்றவகையில் மனுதாரருக்கு நிவாரணம் வழங்குகையில் அரசியலமைப்பினால் பொதுமனுக்கள் பற்றிய குழுவுக்கு கிடைத்துள்ள தத்துவங்களின் பிரகாரம் பரிந்துரைக்கின்ற நிவாரணங்கள் உத்தியோகத்தர்களால் செயற்படுத்தக் கூடியவையாக அமைந்திருத்தல் வேண்டுமென்பதை குழுவின் அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களே விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. செயற்படுத்த சிரமமான அநீதியான தீர்மானங்கள் குழுவினால் வழங்கப்படுவதில்லை என்பதோடு, அவ்வாறு வழங்கினால் நாமே குழுவினை கொச்சைப்படுத்துவதாக அமையுமென்பதாலும், அதனூடாக பாராளுமன்றத்தின் உன்னத தன்மையும் நம்பகத்தன்மையும் தொடர்பில் பிரச்சினை உருவாகுமென்பதாலும் அது தொடர்பில் குழு விசேட அக்கறையுடன் செயலாற்றுகின்றதென்பதைக் குறிப்பிடுகிறேன். எவ்வாறாயினும், குழு மனுதாரர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் பரிசீலனைசெய்து, பொது மனுக்கள் பற்றிய குழுவின் ஏற்பாடுகளுக்குள் அவர்களுக்கு இயலுமானவரை நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும், குழுவின் பணிகளை வெற்றிபெறச் செய்வதற்காக மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றுகின்ற பொதுமனுக் குழு அலுவலகத்தின் பதவியணிக்கும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் பிரிவுக்கும், ஏனைய பதவியணிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறேன்.

மேலும், பொதுமனுக்கள் பற்றிய குழுவின் பணிகளை வெற்றிபெறச் செய்யும் பொருட்டு அங்கத்துவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினரதும் ஒத்துழைப்பினை குழுவின் தவிசாளர் என்றவகையில் எதிர்காலத்திலும் நான் எதிர்பார்க்கிறேன்.

நன்றி

**சுஜீவ சேனசிங்க, பா.உ**

தவிசாளர் – பொது மனுக்கள் பற்றிய குழு

சர்வதேச வர்த்தகம் ராஜாங்க அமைச்சர்

2016.11.29

## 1. பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழு

அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சில சமயங்களில் அநீதியானதாக அமையலாமென்பதோடு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொது மக்களுக்கு இது தொடர்பான மனக்குறைகளை முன்வைக்கக்கூடிய முக்கியமான இடமாக பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழு விளங்குகின்றது.

இக்குழு,

(i) நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்பூட்சுமான்)

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(iii) பகிரங்க சேவைகள் ஆணைக்குழு

(iv) நிருவாக நியாய அதிகார சபை

ஆகிய, பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிறுவனங்களுக்கு மேலதிகமாக அல்லது அவற்றுக்கு சமாந்தரமாக செயற்படுகின்றது

## 2. பொது மனுக்கள் பற்றிய குழுவின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

1833 இல் அரசியலமைப்புத் திருத்தத்திற்காக இங்கு வருகை தந்த கோல்புறூக் பிரபுவினாலும் அதற்குப் பின்னர் வருகைதந்த டொனமூர் பிரபுவினாலும் 1947 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியலமைப்பிலும் 1946 இல் பாராளுமன்ற சபா மண்டபத்தில் அலுவல்களை ஒழுங்கான விதத்தில் பேணிவருவதற்காக தயாரிக்கப்பட்ட இலக்கம் 27-30 வரையிலான நிலையியற் கட்டளைகளிலும் பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதால், பிரித்தானிய பாராளுமன்ற மரபையொட்டி பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக செயலாற்றுவதற்கான குறிப்பிட்டதொரு வழிமுறை காணப்பட்டுள்ளதென்பதை கருதக்கூடியதாக உள்ளது. நிலையியற் கட்டளைகளுக்கு பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் இதற்கான ஏற்பாடுகள் உள்ளதோடு, அக்காலம் தொட்டு பொது மனுக்குழு தொடர்பிலான ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் இக்குழு செயற்பட்டு வந்த முறை பற்றிய தெளிவான தகவல்கள் காணப்படவில்லை. எவ்வாறாயினும் ஆரம்ப காலகட்டங்களில் குழுவின் தவிசாளராக கௌரவ சபாநாயகர் செயலாற்றியுள்ளமை 1981.11.12 ஆந் தேதிய ஹன்சாட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 74 ஆம் உறுப்புரையின் மூலம் பாராளுமன்ற அலுவல்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காகவும், பாராளுமன்ற கூட்டங்களின்போது ஒழுக்கத்தைப் பேணுவதற்காகவும் நிலையியற் கட்டளைகளை ஆக்குவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன் படி இலங்கைப் பாராளுமன்றத்தினால் அன்றுவரை இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் திருத்தப்பட்டு, 1979.05.01 ஆம் திகதி தொடக்கம் அமுலாகின்றதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்

ஆக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பொது மனுக் குழுவின் அலுவல்கள் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் குழுப் பணியகம் செயற்படவேண்டிய முறை பற்றி வரைவிலக்கணம் செய்யப்படாதுள்ளதால், பின்னர் 1981 நவெம்பர் மாதம் 03ஆம் திகதி நிலையியற் கட்டளைகள் இவ் விபரங்களை உள்ளடக்கியதாகத் திருத்தப்பட்டுள்ளன. அன்று தொடக்கம் இக்கட்டளைகளையும் குழுவினால் அடிக்கடி காலத்துக்கேற்றவாறு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விதிகளையும் பயன்படுத்தி பொது மனுக்கள் பற்றிய குழு பாராளுமன்ற குழுக்கள் பணியகத்தின் துணைக் குழுவொன்றாக அதன் நடவடிக்கைகளை ஒழுங்கான விதத்தில் மேற்கொண்டு வந்துள்ளது. பின்னர் இக்குழுவுக்குக் கிடைத்த மனுக்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்தனால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுகின்ற மனுக்களுடன் தொடர்புடைய செயலகப் பணிகள், பின்னாய்வு நடவடிக்கைகள், நினைவூட்டற் கடிதங்களை அனுப்புதல், ஆவணக் கோப்புகளையும் உரைகளையும் தயாரித்தல் ஆகியவற்றுக்கு குழுப் பணியகத்துக்கு மேலதிக அலுவலர்கள் தேவைப்பட்டதோடு, மேலும் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மனுவை முன்வைக்கும் உறுப்பினர்களும் அதேபோன்று மனுதாரர்களும் அடிக்கடி செயலகத்துடன் தொடர்புகொள்வதனாலும் இப் பணியகத்துக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைப் பழுவை செயற்றிறனுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக பொது மனுக்கள் தொடர்பில் தனியான ஓர் அலுவலகம் தாபிக்கப்படுதல் வேண்டும் என 1990ஆம் ஆண்டு பொது மனுக்குழுவினால் முன்மொழியப்பட்டது. 2000ஆம் ஆண்டு ஆரம்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற மனுக்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்ததோடு, தனியான ஓர் அலுவலகத்தை தாபிப்பதன் தேவைப்பாடு மீண்டும் 2007ஆம் ஆண்டு முன்மொழியப்பட்டது.

இம்முன்மொழிவுக்கு பணியாள் தொகுதி ஆலோசனைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர், 2008 ஒக்டோபர் 22ஆம் திகதி தனியான ஒரு பணியகமாக பொது மனுக்கள் பற்றிய குழுப் பணியகம் தாபிக்கப்பட்டு, பொது மனுக்கள் பற்றிய குழுவின் அலுவல்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3. <u>குழுவின் உள்ளடக்கம்</u>

பாராளுமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறு தெரிகுழுவினால் பெயரிடப்பட்ட பத்து உறுப்பினர்களைக் கொண்டதாகவும் மூன்று உறுப்பினர்களை கூட்ட நடப்பெண்ணாகவும் கொண்டு பொது மனுக்கள் பற்றிய குழு தாபிக்கப்பட்டுள்ளது.

1981 இற்குப் பின்னரான காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின் மூலம் அடிக்கடி அந்தந்தக் குழுக்களின் உறுப்பினர் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளதோடு, அதற்கமைய 2008.02.05 மற்றும் 2009.06.10 ஆகிய திகதிகளில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின் மூலம் பொது மனுக்கள் பற்றிய குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 31 ஆகவும் அதன் பின்னர் 33 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

<u>2013.01.01 தொடக்கம் 2015.06.26 வரையிலான காலத்தினுள் குழுவின் உள்ளடக்கம்</u>

(i) கௌரவ லலித் திசாநாயக்க, தவிசாளர் (2015.01.20 வரை)

(ii) கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே ( 2015.02.18 தொடக்கம் குழுவின் தவிசாளராக)

(iii) கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னியாரச்சி

(iv) கௌரவ காமினி லொக்குகே

(v) கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

(vi) கௌரவ குமார வெல்கம

(vii) கௌரவ முத்து சிவலிங்கம்

(viii) கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

(ix) கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க

(x) கௌரவ (திருமதி) நிருபமா ராஜபக்ஷ

(xi) கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன

(xii) கௌரவ காமினி விஜித் விஜயமுனி சொய்சா

(xiii) கௌரவ அசல ஜாகொடகே

(xiv) கௌரவ பாலித ரங்கே பண்டார

(xv) கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்த்தன (2013.05.31 வரை)

(xvi) கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

(xvii) கௌரவ பைஸல் காசிம்

(xviii) கௌரவ பொன் செல்வராசா

(xix) கௌரவ கயந்த கருணாதிலக

(xx) கௌரவ ஏ. வினாயகமூர்த்தி

(xxi) கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள

(xxii) கௌரவ அஜித் குமார

(xxiii) கௌரவ தயாசிறி ஜயசேகர (2013.07.29 வரை)

(xxiv) கௌரவ (வண.) அதுரலியயே ரதன தேரர்

(xxv) கௌரவ வசந்த அலுவிஹாரே

(xxvi) கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

(xxvii) கௌரவ சுஜீவ சேனசிங்க

(xxviii)கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

(xxix) கௌரவ ஹுனைஸ் பாறூக்

(xxx) கௌரவ அஜித் பீ.பெரேரா (2013.11.22 தொடக்கம்)

(xxxi) கௌரவ புத்திக பத்திரண (2013.11.22 தொடக்கம்)

8 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் 2015.11.14 ஆம் திகதி பொது மனுக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக இருக்க வேண்டுமென பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை மீண்டும் 2016.02.26 திகதியுடைய பிரேரணையின் ஊடாக 22 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

<u>2015.11.14தொடக்கம் 2016.02.26 திகதி வரையில் குழு</u>

(i) கௌரவ சுஜீவ சேனசிங்க

(ii) கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

(iii) கௌரவ டக்ளஸ் தேவானந்தா

(iv) கௌரவ சாலிந்த திசாநாயக்க

(v) கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

(vi) கௌரவ நிஹால் கலப்பத்தி

(vii) கௌரவ பிமல் ரத்நாயக்க

(viii) கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே

(ix) கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

(x) கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

(xi) கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

(xii) கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

(xiii) கௌரவ விதுற விக்கிரமநாயக்க

(xiv) கௌரவ கனக ஹேரத்

(xv) கௌரவ மயில்வாகனம் திலகராஜா

(xvi) கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

(xvii) கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

(xviii) கௌரவ சமிந்த விஜேசிறி

(xix) கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

(xx) கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

2016.07.22 ஆம் திகதி முதல் முற்குறிப்பிட்ட 20 குழு உறுப்பின்களுக்கு மேலதிகமாக கௌரவ வஜிர அபேவர்தன அவர்கள் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய இன்று 21 குழு உறுப்பினர்கள் குழுவில் பணிபுரிந்துவருகின்றனர்.

## 4. பொது மனுக்கள் பற்றிய குழுவின் தத்துவங்கள்

1981 நவம்பர் 03ஆம் திகதி நிலையியற் கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது திருத்தத்தின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல 25அ விதிக்கப்பட்டுள்ளதோடு, அதன் பிரகாரம் ஓர் உறுப்பினரால் மனு ஒன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு, நிலையியற் கட்டளை இல. 128 இன் பிரகாரம் தொடர் நடவடிக்கைகள் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பாராளுமன்ற (அதிகாரங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் சிறப்புரிமைகள் சட்டம் என அழைக்கப்படும்) 10ஆவது வாசகத்தின் பிரகாரம், எந்தவொரு நபரையும் குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கும், அவர் பொறுப்பில் அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள ஆவணம் எதனையும் பெற்றுக்கொள்வதற்குமான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மற்றும்/அல்லது அதனால் உரிய முறையில் தாபிக்கப்பட்டுள்ள குழுக்களுக்கு உள்ளதோடு, இச்சட்டத்தின் 12வது வாசகத்தின் பிரகாரம் வாய்மூல விசாரணை ஒன்றின் மூலம் இவர்களிடமிருந்து சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரமும் உண்டு. இவ்வதிகாரங்கள் நிலையியல் கட்டளை 128(7)இன் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் அடிப்படையில் பொது மனுக் குழுவின் அலுவல்கள் பேணிவரப்படுகின்றன.

நிலையில் கட்டளை 128 (4) மற்றும் (5)இன் பிரகாரம், குழு மனுக்கள் தொடர்பான தனது கருத்தையும் அந்த மனுக்கள் தொடர்பாக விதந்துரைப்பதற்கு பொருத்தமானதென தான் கருதுகின்ற ஏனைய கருத்துகளையும் காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட வேண்டும்.

சிறப்புரிமைகள் சட்டத்தின் 16 மற்றும் 17ஆம் வாசகங்களின் பிரகாரம், குழுவின் முன்னிலையில் சாட்சியங்கள் வழங்கும் ஆட்களும் சாட்சியங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் 14ஆம் வாசகத்தின் பிரகாரம், சாட்சியங்கள் வழங்கும் ஆட்களுக்கு கடப்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காரணங்களை அறிவிக்காது குழுக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காத மற்றும்/ அல்லது சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க நிராகரிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்திற்கான அட்டவணையின் “ஆ” தொகுதியின் கீழ் பாராளுமன்றத்தினால் அல்லது உயர் நீதி மன்றத்தினால் தண்டனை வழங்கப்படலாம்.

குழுவுக்கு விதப்புரைகளை மாத்திரம் செய்யமுடியும் என்பதுடன் இச்சிபாரிசுகளை செயற்படுத்தாமை தொடர்பாக மேலும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதென்பதனால் அதன் நடவடிக்கைகளை தரப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் செயற்படுத்துவது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் என்பதோடு, மேற்படி இணக்கப்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதை பின்னர் நிராகரிப்பதானது,

பாராளுமன்றத்தின் முன் பொய்யான கூற்றுகளைத் தெரிவிப்பதன் கீழ், சிறப்புரிமைகள் சட்டடத்தின் அட்டவணையின் "அ" தொகுதியின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கக்கூடியதொரு குற்றமாகும். அநேகமான சந்தர்ப்பங்களில் நிர்வாக ரீதியான தீர்வுகளின் கடுமையான தன்மையை தளர்த்துவதற்கு குழு செயற்படுவதோடு, இயலுமான வரை சட்டக் கட்டுக்கோப்புக்கு மட்டுப்படாது மனிதாபிமான ரீதியில் பிரச்சினைகளை நோக்குவதற்கு குழு முயற்சியெடுக்கின்றது. தரப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சியெடுக்கின்ற குழுவானது அதன்போது மத்தியஸ்தரின் பங்கையும் நிறைவேற்றுகின்றது. எவ்வாறாயினும், தரப்பினர்கள் இணக்கப்பாட்டுக்கு வராத பட்சத்தில் நியாயமென கருதுகின்ற பரிந்துரைகளை / கட்டளைகளை வழங்கவும் குழு தயங்குவதில்லை.

மனுக்களில் உள்ளடக்கப்படும் விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை என்பதோடு குழுவினால் பெறப்படும் எத்தகைய சாட்சியும் ஊடகங்களுக்கு வெளியிடப்படுவதில்லை.

மனுதார்களுக்கு தமது விடயங்களை உரிய விதத்தில் தொகுத்து குழுவின் முன் வெளிப்படுத்துவதற்கு சிரமமாயிருப்பின், அவர்களுக்கு பாதுகாவல் உத்தியோகத்தர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை குழு வழங்கியுள்ளதோடு, அவ்வாறு பாதுகாவல் உத்தியோகத்தரொருவருடன் வருவதை குழு ஊக்குவிக்காமைக்கான காரணம், அதனால் மனுதாரருக்கு மேலதிக செலவை ஏற்க நேரிடுமென்பதனாலாகும்.

குழு விசாரணைகளை நடத்துகின்ற நடைமுறையானது நெகிழ்வுத் தன்மையுடையதாகும் என்பதுடன் விசாரணையின் பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பில் விசேட காலவறையரை விதிக்கப்படுவதில்லையெனினும் இயன்றளவு துரிதமாக மனுக்களை விசாரித்து நியபாயமான விதப்புரைகளை வழங்குவது குழுவின் அபிலாசையாகும்.

## 5. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

இது தொடர்பான நடைமுறை நிலையியற் கட்டளை 25அ வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மனு கௌரவ சபாநாயகரை விளிப்பதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு, அதனை பாராளுமன்ற உறுப்பினரொருவர் மூலமாக அனுப்புதல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் மனுவின் மேல் கையொப்பமிடுதல் அவசியமாகும். மேலும், மனுதாரர் தனக்கு நேர்ந்துள்ள அநீதியைத் தெளிவாகவும் மிகச் சுருக்கமாகவும் மனுவில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு, தான் கோருகின்ற நிவாரணம் எத்தகையது என்பதை மனுவின் இறுதியில் குறிப்பிடுதல் வேண்டும். மனுதாரர் அல்லது மனுதாரர்கள் மனுவில் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, எழுத முடியாத ஒருவராயின் தனது பெருவிரல் அடையாளத்தை சாட்சியாளரொருவர் முன்னிலையில் இட்டிருத்தல் வேண்டும். மனுவொன்றின் மாதிரியொன்று அட்டவணை-1 இல் காணப்படுவதுடன் மனுவினை நிராகரித்தமைக்கான காரணங்கள் அட்டவணை-2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மனுவுடன் வேறு எத்தகைய ஆவணங்களையோ அல்லது சத்தியக் கடுதாசிகளையோ இணைத்தலாகாது.

இவ்வாறு கிடைக்கப்பெறும் மனுக்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தின் பொதுமனுக் குழு அலுவலகத்தினால் பரிசீலிக்கப்பட்டு, குறித்த மனுக்கள் ஏற்புடைய நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக இருப்பின், அவை பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் ஊடாக கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். கௌரவ சபாநாயகரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் சம்பந்தப்பட்ட உறுப்பினரால் மனுக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் கௌரவ சபாநாயகரினால் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக மீண்டும் பொது மனுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

பொது மனுக் குழுவுக்கு நாளாந்தம் பெருமளவில் மனுக்கள் கிடைக்கப்பெறுவதோடு, அத்தகைய மனுக்களில் சுமார் 25% ஐ நிலையியற் கட்டளைகளுக்கு ஏற்புடைமையின்மை மற்றும் குழுவினால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் காரணமாக நிராகரிக்க நேரிடும்.

## 6. <u>பொது மனுக்கள் பற்றிய குழுவின் கடமைகள்</u>

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் மனுவொன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விதமான முறையில் விசாரணை செய்யப்படும்:-

(அ) குழுவினால் விசாரணை செய்தல்

(ஆ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மான்) அனுப்பி அவரது முடிவுகளை பெற்று அம் முடிவுகளை பரிசீலனை செய்தல்

### (அ) <u>குழுவினால் விசாரணை செய்தல்</u>

மனுவை தொடர்புடைய அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தி அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் அவ்வறிக்கையின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி, மனுதாரருக்கு, அவரது கருத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்படும். மனுதாரரின் கருத்துகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் மனுவானது குழுவின் முன் விசாரணைக்கு தயாராக இருக்குமென்பதோடு, மனுதாரருக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கும், தொடர்புடைய உத்தியோகத்தர் களுக்கும் கூட்டத்திற்கு வருகைதருமாறு அறிவித்து அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படும். மனுவுடன் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் குறிப்பிட்ட தினத்தில் கூட்டத்திற்காக அழைத்து வருதல் அமைச்சுச் செயலாளரின் பொறுப்பாகும் என்பதோடு, அதன்போது ஆவணக் கோப்புகளை ஆராய்ந்து, உத்தியோகத்தர்களை குறுக்கு விசாரணை செய்வதன் மூலம் விடயங்களை தெளிவுபடுத்திக் கொண்டு, மனுவை விசாரணை செய்து மனுதாரருக்கு நிவாரணம் வழங்குவதற்காக தரப்பினர்கள் மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக குழு முயற்சியெடுக்கும் என்பதோடு, அவ்வாறு இணக்கப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதை செயற்படுத்தி மனுதாரருக்கு நிவாரணம் வழங்குவது அமைச்சுச் செயலாளரின் பொறுப்பாகும் என குழு கலந்தாலோசிக்கும்.

## (ஆ) <u>நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்ஸ்மானின்) முடிவுகளை பெற்றுகொள்ளல்</u>

அரச உத்தியோகத்தர்களினால் மற்றும் அரச சார்பான நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அத்தகைய ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் வேறு அநீதியான செயல்கள் பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுகளை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் கீழ்பட்ட விதத்திலும் விசாரணை செய்து அறிவிக்கும் பணியை மேற்கொள்வதற்காக நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மான்) பதவியை உருவாக்குவதற்காக பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 156 வது உறுப்புரையின் பிரகாரம், 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அதிமேதகு சனாதிபதியினால் நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மான்) நியமிக்கப்படுவதுடன் 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க ஒம்பூட்ஸ்மான் சட்டத்தின் 10 வது வாசகத்தின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு கிடைக்கப்பெறும் மனுக்களில் அவருக்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்களை விசாரணை செய்து அச்சட்டத்தின் 17 வது வாசகத்தின் பிரகாரம் ஒம்பூட்ஸ்மானின் முடிவுகளை அம் முடிவுகளுக்கான காரணங்களுடன் குழுவுக்கு வழங்குவார். இவ்வாறு கிடைக்கப்பெறுகின்ற முடிவுகள் தரப்பினர்களை அழைக்காமலே குழுவினால் மீண்டும் பரிசீலிக்கப்படுவதோடு மேற்படி முடிவுகளுடன் குழு இணங்குவதாயிருப்பின் அதனை அறிவித்தும் மேற்படி முடிவுகளை செயற்படுத்தும் படி அறிவித்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பணியகத்தின் மூலம் கடிதம் அனுப்பப்படும்.

ஒம்புட்ஸ்மானால் முடிவுகள் செய்யப்படாது அனுப்பப்படும் மனுக்களும், ஒம்புட்ஸ்மானின் முடிவுகளை மேலும் பரிசீலிக்க வேண்டுமென குழு கருதும் பட்சத்திலும் அத்தகைய மனுக்கள் சம்பந்தமாக குழு மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் மீண்டும் செயலாற்றும்.

1981 ஆம் ஆண்டு முதல் 2016.08.31 வரை பொது மனுக் குழுவுடன் ஒத்துழைத்துச் செயலாற்றிய/செயலாற்றுகின்ற ஒம்பூட்ஸ்மான்களின் பெயர்பட்டியல்,-

1. **திரு. சாம் விஜேசிங்க - 1982 — 1991**
2. **திரு. எல்.எச். அல்விஸ் - 1991 — 1993**
3. **திரு. ஜீ. அபேகுணசேகர - 1993 — 1995**
4. **பேராசிரியர் பி.ஈ.எஸ்.ஜே. பஸ்ரியன்பிள்ளை - 1995 — 2001**
5. **கலாநிதி ஆர்.பி. ரணராஜா - 2001 — 2010**
6. **திரு. எல்.ஏ. திஸ்ஸ ஏகநாயக்க - 2010 முதல்**

## 7. 1981 முதல் இற்றைவரையிலான காலப்பகுதியினுள் பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுக்களில் சேவையாற்றிய தவிசாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்

பொது மனுக்குழுவில் செயலாற்றிய/செயலாற்றுகின்ற தவிசாளர்களின் பெயர்பட்டியல் மற்றும் அவர்களைப் பிரேரித்த மற்றும் ஆமோதித்த கௌரவ உறுப்பினர்கள்,-உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **1. கௌரவ அல்ஹாஜ் அப்துல் பாகீர் மாக்கார்** | | **1983 – 1988** |
| 1983.03.10 | பிரேரித்தவர் | கௌரவ எம். சிவசிதம்பரம் |
| | ஆமோதித்தவர் | கௌரவ ஏ.எம்.ஆர்.பீ. அத்தனாயக்க |
| 1984.03.08 | பிரேரித்தவர் | கௌரவ டபிள்யு. தஹநாயக்க |
| | ஆமோதித்தவர் | கௌரவ மெரில் காரியவசம் |
| 1985.03.05 | பிரேரித்தவர் | கௌரவ டபிள்யு. தஹநாயக்க |
| | ஆமோதித்தவர் | கௌரவ ஆர்.பீ. விஜேசிறி |
| 1986.03.05 | பிரேரித்தவர் | கௌரவ மெரில் காரியவசம் |
| | ஆமோதித்தவர் | கௌரவ எம். ஹலீம் இஷாக் |
| 1987.02.25 | பிரேரித்தவர் | கௌரவ டபிள்யு. தஹநாயக்க |
| | ஆமோதித்தவர் | கௌரவ எம். ஹலீம் இஷாக் |
| 1988.03.01 | பிரேரித்தவர் | கௌரவ மெரில் காரியவசம் |
| | ஆமோதித்தவர் | கௌரவ ஈ. பீ. போல் பெரேரா |
| **2. கௌரவ ஸ்ரென்லி திலகரத்ன** | | **1989 -1990** |
| 1989.03.23 | பிரேரித்தவர் | கௌரவ மஹிந்த ராஜபக்ஷ |
| | ஆமோதித்தவர் | கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன |
| **3. கௌரவ சந்திரா ரணதுங்க** | | **1990 – 1994** |
| 1990.05.21 | பிரேரித்தவர் | கௌரவ ஸ்ரென்லி திலகரத்ன |
| | ஆமோதித்தவர் | கௌரவ மஹேன் குணசேகர |

| | | |
|---|---|---|
| 1991.05.16 | பிரேரித்தவர் | கௌரவ அதாவுத செனவிரத்ன |
| | ஆமோதித்தவர் | கௌரவ ஸ்ரென்லி திலகரத்ன |
| 1993.06.17 | பிரேரித்தவர் | கௌரவ அதாவுத செனவிரத்ன |
| | ஆமோதித்தவர் | கௌரவ சோமசார தசநாயக்க |
| **4. கௌரவ மஹிந்த விஜேசேகர** | | **1995 – 1999** |
| 1995.02.22 | பிரேரித்தவர் | கௌரவ சுரநிமல ராஜபக்ஷ |
| | ஆமோதித்தவர் | கௌரவ திருமதி சுமித்தா பிரியங்கனி அபேவீர |
| | பிரேரித்தவர் | கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க |
| 1996.08.19 | ஆமோதித்தவர் | கௌரவ திலக் கருணாரத்ன |
| **5. கௌரவ சமல் ராஜபக்ஷ** | | **1999 – 2001** |
| 1999.08.03 | பிரேரித்தவர் | கௌரவ சுரநிமல ராஜபக்ஷ |
| | ஆமோதித்தவர் | கௌரவ கேசரலால் குணசேகர |
| **6. கௌரவ ஹரீன்திர ஜே. கொரயா** | | **2001 - 2002** |
| 2001.05.10 | பிரேரித்தவர் | கௌரவ சந்திரசிறி கஜதீர |
| | ஆமோதித்தவர் | கௌரவ மகிந்தானந்த அழுத்கமகே |
| **7. கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன** | | **2002 – 2003** |
| 2002.03.05 | பிரேரித்தவர் | கௌரவ நிஹால் கலப்பத்தி |
| | ஆமோதித்தவர் | கௌரவ கே. வேலாயுதம் |
| 2003.12.15 | பிரேரித்தவர் | கௌரவ அஜித் குமார |
| | ஆமோதித்தவர் | கௌரவ நிஹால் கலப்பத்தி |
| **8. கௌரவ டியு குணசேகர** | | **2004 – 2005** |
| 2004.09.23 | பிரேரித்தவர் | கௌரவ பியசேன கமகே |
| | ஆமோதித்தவர் | கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா |

| | | |
|---|---|---|
| **9. கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன** | | |
| 2006.06.20 | பிரேரித்தவர் | கௌரவ (டாக்டர்) ராஜித்த சேனாரத்ன |
| | ஆமோதித்தவர் | கௌரவ டியூ குணசேகர |
| 2008.07.23 | பிரேரித்தவர் | கௌரவ வஜிர அபேவர்தன |
| | ஆமோதித்தவர் | கௌரவ சுசந்த புஞ்சி நிலமே |
| **10. கௌரவ ஜானக பண்டார** | | **2010 யூலை முதல் 2012 சனவரி** |
| 2010.07.03 | பிரேரித்தவர் | கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க |
| | ஆமோதித்தவர் | கௌரவ சுசந்த புஞ்சி நிலமே |
| **11. கௌரவ லலித் திஸாநாயக்க** | | **2012 மார்ச் முதல் 2015 பெப்ருவரி** |
| 2012.03.22 | பிரேரித்தவர் | கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன |
| | ஆமோதித்தவர் | கௌரவ காமினீ விஜித் விஜயமுனி சொய்ஸா |
| **12. கௌரவ (டாக்டர்) திருமதி சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே 2015 பெப்ருவரி முதல் 2015 யூன் வரை** | | |
| 2015.02.18 | பிரேரித்தவர் | கௌரவ அ. விநாயகமூர்த்தி |
| | ஆமோதித்தவர் | கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன |
| **13. கௌரவ சுஜீவ சேனசிங்க** | | **2015 திசெம்பர் முதல்** |
| 2015.12.02 | பிரேரித்தவர் | கௌரவ சுசந்த புஞ்சி நிலமே |
| | ஆமோதித்தவர் | கௌரவ நிஹால் கலப்பத்தி |

பாராளுமன்ற செயலாளர் நாயகம் பதவி வழியில் குழுவின் செயலாளராவார். அதன் பிரகாரம் 1981 முதல் முன்னாள் செயலாளர் நாயகங்களான திரு எஸ்.என். செனெவிரத்ன, திரு. பி.எஸ்.பி. தித்தவெல்ல, திருமதி பிரியாணி விஜேசேகர, திரு. தம்மிக கித்துல்கொட ஆகியோர் குழுவின் பணிகளை மேற்கொள்வதற்காக செயலாளரை பிரிதிநிதித்துவப்படுத்தி குழுவின் செயலாளராக பணியாற்றுகின்ற உதவிப் பணிப்பாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியிருப்பதோடு தற்போதைய பாராளுமன்ற செயலாளர் நாயகங்களும் திரு. டபிள்யூ.பி.டீ. தசநாயக்கவும் அவ்வாறு ஆலோசனை வழங்கி செயலாற்றி வருகின்றார். பிரதி செயலாளர் நாயகமும் உதவி செயலாளர் நாயகமும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி குழுவின் பணிகளை மேற்பார்வை செய்கின்றனர்.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணிப்புரையின் கீழ் பின்வரும் உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிகளில் பொது மனுக்குழுவின் செயலாளர்களாக கடமையாற்றியுள்ளார்கள்:-

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே.ரீ.என். த சில்வா | - 1981 |
| 2. | திரு. எம்.எஸ்.எம்.சீ.பீ சகலசூரிய | - 1985 |
| 3. | திரு. டபிள்யு. பல்லியகுருகே | - 1986 |
| 4. | திரு. ரொனால்ட் ஏ த சொய்சா | - 1987 |
| 5. | திரு. ரீ.எச்.ஏ.எல். த சில்வா | - 1991 |
| 6. | திரு. யூ. விஜேசிங்க | - 1995 |
| 7. | திரு. ஜே.ஆர். கஜவீர ஆராச்சிகே | - 2000 |
| 8. | திரு. ஜே. சமரவீர | - 2002 |
| 9. | திரு. என்.எஸ்.கே. வைத்தியரத்ன | - 2006 |
| 10. | திரு. டபிள்யு.எம்.பீ. த சில்வா | - 2008 |
| 11. | திருமதி. ரமணி ஜயவர்தன | - 2011 |
| 12. | திருமதி. ஷியாமா எம் பர்னாந்து | - 2013 முதல் |

## 8. ஏழாவது பாராளுமன்றத்தின் அதாவது 2013.01.01 முதல் 2015.06.26 வரை பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயற்பாடுகள்

2010.02.05 ஆம் திகதி ஆறாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 2010.04.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னர் தாபிக்கப்பட்ட ஏழாவது பாராளுமன்றத்தின் பொது மனுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட விசேட பிரேரணைக்கேற்ப ஆறாவது பாராளுமன்றக் காலத்தில் கிடைக்கப்பெற்று விசாரணைகளை முடிவுறுத்த முடியாதிருந்த மனுக்கள் ஏழாவது பாராளுமன்றக் காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டது. மேலும், விசாரணை செய்வதற்காக ஏழாவது பாராளுமன்றத்திற்கு கிடைத்த புதிய மனுக்களின் எண்ணிக்கையும் பெருந்தொகையாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக, குழுப் பணியகத்தின் முன்மொழிவுக்கேற்ப குழுக் கூட்டங்கள் நடாத்தப்படும் அனைத்து நாட்களிலும் மனுதாரர்களை அழைத்து மனுக்களை விசாரணை செய்து முடிவடைந்த பின்னர் குழுத் தீர்மானங்கள் அமுல்படுத்துவது

சம்பந்தமாக அன்றைய தினத்திற்குரிய அமைச்சுக்களிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஏற்கனவே குழுவினால் அவ்வமைச்சுக்கள் சம்பந்தமாக வினவப்பட்டுள்ள மனுக்கள் சம்பந்தமான இணக்கப்பாடுகள் நடைமுறைப்படுவதன் முன்னேற்றத்தை ஆராய்ந்தறிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்வாறாக ஒரு நாளில் 5 -10 மனுக்கள் வீதம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலுமாயிருந்ததால் வினைத்திறன் உயர்த்தப்பட்டுள்ளது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு ஆற்றுப்படுத்துகின்ற மனுக்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகையில் அது தொடர்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்களின் மூலமாக அறிவிக்கப்பட்ட போதிலும் அவ்வாறு அறிவிக்கப்படும் திகதியானது அவர்களுக்கு வசதியான திகதியாக இல்லாத பட்சத்தில் மனுவை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன. ஆகையால், தெலைபேசி மூலமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேரடியாகவே தொடர்புகொண்டு மனுவை சமர்ப்பிக்க அவர்களுக்கு வசதியான திகதியொன்றை ஒதுக்கிக்கொள்வதன் மூலமாக, மேற்படி தாமதங்களை குறைத்துக்கொள்ள குழுவிற்கு முடியுமாயிருந்தது.

பல்வேறு விதத்தில் அநீதிக்குள்ளாகின்ற பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் மனுக்களை துரிதமாகவும் திறமையான முறையிலும் தீர்ப்பதற்காக பொதுமனுக்கள் பற்றிய குழுவின் கௌரவ பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டதாக 2014.03.06 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்ட உப குழுவினால் இற்றை வரை 61 மனுக்களை விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 9. <u>2015.06.26 ஆம் திகதி முதல் 2015.09.01 திகதிவரை பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயற்பாடுகள்</u> :-

ஏழாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்ட 2015.06.26 ஆம் திகதி முதல் எட்டாவது பாராளுமன்றததின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்ட 2015.09.01 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பொது மனுக்கள் பற்றிய குழு பின்வரும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

**(i)** எதிர்காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், குழுவிற்கு முன்வைக்கப் பட்டுள்ள மனுக்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத காரணத்தால் மனுதாரருக்கு ஏற்படும் அநீதியைத் தவிர்ப்பதற்காக அவ்வாறான மனுக்களை விசாரிப்பதற்காக நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புஸ்மன்) முன்வைப்பது பொருத்தமானதென 2015.06.12 ஆம் திகதி நடைபெற்ற பொது மனுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டதுடன் 2015.06.26 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின் 100 மனுக்கள் விசாரிப்பதற்காக ஒம்புஸ்மன் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**(ii)** ஏழாவது பாராளுமன்றம் 2015.06.26 ஆம் திகதி கலைக்கப்பட்ட காரணத்தால் மனுக்கள் பற்றிய பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டதால் அதுவரை விசாரிக்கப்பட்டுவந்த மனுக்களுக்குப் பதிலாக புதிய மனுக்களை எட்டாவது பாராளுமன்றத்திற்கு முன்வைக்குமாறு மனுதாரர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது.

**10.** **<u>இக்காலகட்டத்தில் பொதுமனுக்கள் பற்றிய குழுப் பணியகத்தினால் எடுக்கப்பட்டுள்ள கொள்கைரீதியான தீர்மானங்கள்:-</u>**

(i) மனுக்களை சமர்ப்பிப்பதற்கான பொது மாதிரிப் படிவமொன்றை தயாரிப்பதற்கும் அதன்போது பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் விடயங்களை உறுப்பினர்களின் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்பதும்,

(ii) பொது மனுக் குழுவுக்கு மனுக்களை சமர்ப்பிக்கும் போது பொது மாதிரிப் படிவமொன்றின் கீழ் சமர்ப்பிப்பதற்கும் இம்மாதிரிப் படிவத்தை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கும், (முதலாவது அட்டவணையின் கீழ் மனுக்களை சமர்ப்பிக்கும் பொது மாதிரிப் படிவம் தரப்பட்டுள்ளது)

(iii) பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தொழில்நுட்ப ரீதியிலான காரணங்களினால் ஒரு தடவை நிராகரிக்கப்பட்டுள்ள மனுக்களினால் மனுதாரருக்கு தெளிவாகவே அநீதி ஏற்பட்டிருப்பின், குழு அத்தகைய மனுக்களை அமைச்சின் சாதகமான விதப்புரையுடன் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்த பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென்பதும்,

(iv) பொது மனுக் குழுவினால் முன்வைக்கப்படுகின்ற விதப்புரைகளுக்கு குழுவில் இணக்கம் தெரிவித்து பின்னர், அதனை மீறுகின்ற அமைச்சின் உத்தியோகத்தர்களினால் பொது மனுக்குழு கொச்சைப்படுத்தப்படுவதால் அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு எதிராக பாராளுமன்ற தத்துவங்கள், சிறப்புரிமைகள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் தண்டனைமுறைச் சட்டக் கோவையின் 190 ஆம் பிரிவின் கீழ் தண்டனை வழங்குவதற்கு வாய்ப்பிருப்பினும் இந்த வழிமுறை அந்நியமானதும் நடைமுறையில் செயற்படுத்துவதற்கு சிரமமானதுமாகும் என்பதை குழு அவதானித்தது. மேலும், உத்தியோகத்தர்கள் குழுவின் முன் இணங்கிய விடயங்களை அமுல்படுத்தும்போது அவர்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்ற சட்டரீதியான சிக்கல்களையும் திணைக்கள ரீதியிலான பிரச்சினைகளையும் கருத்திற்கொண்ட குழு அவ்வாறான பிரச்சினைகள் எழும்போது குழுவின் இணக்கத்தை மீண்டும் ஆராய்ந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவும் தீர்மானித்தது. எவ்வாறாயினும், இணக்கப்பாட்டிற்கு வரும்போது உத்தியோகத்தர்கள் இதனை விட பொறுப்புடன் செயற்படவேண்டுமென்பதும்,

(v) நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் விடயப் பரப்பினுள் வரும் மனுக்கள் சம்பந்தமான அறிக்கைகளை அனுப்புதல் மேற்படி ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதால் அது சம்பந்தமாக தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை அந்த மனுக்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்கும்,

(vi) சிறுவர்களை பாடாசலைகளின் முதலாம் ஆண்டிற்கு சேர்க்காமை சம்பந்தமாக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கும், (2011.06.08 ஆம் திகதிய குழுவின் தீர்மானம்)

(vii) மனித உரிமைகள் ஆணைக்குழு, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மான்) அல்லது பகிரங்க சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் முன்னே தற்போது விசாரணை செய்யப்படும் மனுக்களை அந்நிறுவனங்களின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கும்,

(viii) குழுவினால் தீர்மானம் வழங்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மனுக்கள் மேலும் நிவாரணங்களை பெற்றுத் தருமாறு கோரி சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை மீள் பரிசீலைனைக்கு உட்படுத்தாமல் இருப்பதற்கும்,

(ix) அரச கொள்கைகளுடன் முரண்படும் வகையிலான விடயங்களுடன் தொடர்புடைய மனுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை பற்றி மனுதாரை அழைக்காமலே குழு முன்னிலையில் கலந்துரையாடுவதற்கும்,

(x) முறையான பரிசீலனையில் நிரூபிக்கப்பட்ட, அரச நிதி நிறுவனங்களில் நடைபெற்ற நிதி மோசடிகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் மனுக்களை பரிசீலனை செய்யாமல் இருப்பதற்கும், ( 2012.11.20 ஆம் திகதிய குழுவின் தீர்மானம்)

(xi) குழு தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள நிலையியற் கட்டளைகளின் வலுவாக்கல் தன்மை தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாலும் இந்நிலைமையின் கீழ் பாராளுமன்றத்தின் பொதுமனுக்குழு பற்றிய பொதுமக்களின் நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்படுவதாலும் வலுவாக்கல்மிக்க கட்டளையொன்றை விடுப்பதற்கு இயலுமானவாறு நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கான பிரேரணைகள் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் தவிசாளருக்கு பிரேரிக்கப்பட்டுள்ளன.

(xii) குழுப் பணியகத்தின் பிரேரணைக்கு அமைய குழுவினால் ஒரு முறை விசாரிக்கப்பட்டு விதப்புரைகள் வழங்கப்பட்ட மனுவொன்றை மீண்டும் குழுவினால் ஆராய்வதற்கு முன் முதலாவது முறை குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றம் பற்றியும் ஆராய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## 11. <u>பொதுமனுக்கள் பற்றிய குழுவின் 5 ஆம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் பற்றிய பின்ஆய்வு</u>

(i) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மனுவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் இயலுமானவரை துரிதமாக மனுவின் விசாரணைகளை முடிவுறுத்தல்

(ii) மனுதாரருக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தல் தெடர்பாக பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கப்பாடுகளை கூடியளவு விரைவாக செயற்படுத்திக் கொள்ளல்

(iii) கடந்த பாராளுமன்றங்களின் போது இணக்கப்பாட்டுக்கு வந்து ஆயினும் இற்றை வரை அமைச்சுக்களினால் நிவாரணங்கள் வழங்கப்படாத மனுதாரருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல்

மேற்படி முன்று இலக்குகளையும் நிறைவேற்றுவதற்காக குழு மேற்கொண்ட வழிமுறையானது, மனுவொன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் அம்மனுவின் பணிகள் முடியும் வரை ஓர் உத்தியோகத்தரே அப்பணிகளை மேற்கொள்வதாகும். அதனால் குறிப்பிட்ட மனு தொடர்பான அனைத்து விடயங்கள்

தொடர்பாகவும் மனுவுடன் சம்பந்தப்பட்ட சாரார்கள் தொடர்பாகவும் குறுப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்ந்தும் அறிந்திருப்பதால் தேவையான இணக்கப்பாட்டுப் பணிகள் இலகுவாகியிருப்பதோடு இணக்கப்பாடுகளை கூடியளவு விரைவாக செயற்படுத்திக்கொள்ளல் அல்லது மனுவின் விசாரணைப் பணிகளை முடிவுறுத்தல் இதன் மூலமாக ஓரளவிற்கு வினைத்திறனடைந்துள்ளது.

மேலும், குழுவினால் மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு வழங்கப்படும் விதப்புரைகள் செயற்படுத்தப்படுவதில்லையென சனாதிபதியின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருப்பதால், சனாதிபதியின் செயலாளரால் 2014.10.10 ஆம் திகதிய E&O/AC/1/8/6 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டு மேற்படி விடயங்கள் தொடர்பாக அமைச்சரவையை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக குழுவின் விதப்புரைகள் செயற்படுத்தப்படுதல் சம்பந்தமாக தொடர்புடைய நிறுவனங்களின் கவனம் செலுத்தப்படுமென குழுவினால் எதிர்பார்க்கப்பட்டது. ( அட்டவணை 3)

(iv) பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஒரு தடவை பரிசீலித்து முடிக்கப்பட்ட, ஆயினும் குழுவின் பரிசீலனைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மனுக்கள் பற்றிய மேன்முறையீடுகளை மீண்டும் பரிசீலிக்கக் கூடிய விதத்தில் சட்டங்கள் தயாரித்தல்.

கௌரவ சபாநாயாரின் தலைமையில் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினதும் தலைவர் உட்பட உறுப்பினர்களினதும் குழுவின் தவிசாளர் உட்பட அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்கேற்பில் 2014.07.23 ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட மனுக்கள் சம்பந்தமாக குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துவதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அப்பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள இரு சாராரும் பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதோடு குழுவினால் மீள்பரிசீலனை செய்யும் படி கோரி அனுப்பப்படும் மனுக்கள் சம்பந்தமாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

(v) வெளிநாட்டு பாராளுமன்றங்களின் பொதுமனுக்கள் பற்றிய குழுக்களின் செயற்பாடுகளை பற்றி ஆராய்ந்து எமது குழுவின் வினைத்திறனை அதிகரித்துக்கொள்ள மேற்படி அனுபவங்களை உபயோகித்தல்

(vi) உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சி அமர்வுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெயரிடும்போது பொதுமனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகவும் கவனத்திற்கொள்ளும் படி குழுவின் தவிசாளரால் 2014.03.18 திகதியிடப்பட்டு கௌரவ சபாநாயகரிடம் கோரிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அட்டவணை 4 )

## 12. ஏழாவது பாராளுமன்றத்தின் பொதுமனுக்கள் பற்றிய குழுவின் இலக்குகளும் விதப்புரைகளும்

(i) மனுக்களை தீர்ப்பதற்காக காப்புறுதி ஒம்புட்ஸ்மானினதும் நிதி ஒம்புட்ஸ்மானினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்

(ii) இலங்கையில் மாகாண சபைகளில் செயற்படுத்தப்படுகின்ற பொதுமனுக்கள் பற்றிய குழுக்களோடு ஒத்தழைப்புடன் செயற்படுவதன் மூலமாக கூடுதலான மனுதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க இயலுமாவதால் அவ்வாறு செயலாற்றுதல்

(iii) 1981 முதல் 1990 வரையிலான காலத்துடன் தொடர்புடையதாக 1994 ஆம் ஆண்டில் பொதுமனுக்கள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அறிக்கையில் 1981/17 ஆம் இலக்க ஒம்புட்ஸ்மான் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் மூலமாக அவரது நீதித்துறைத் தத்துவம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதால் ஒம்புட்ஸ்மான் சட்டத்தின் மேற்படி பிரிவு திருத்தப்பட வேண்டுமா என்பதை ஆராய்வதற்கு ஒம்புட்ஸ்மானின் கருத்துக்களை பெற்று சட்டவரைஞருக்கு முன்மொழிவொன்றைச் செய்தல் வேண்டுமெனவும், மேலும் குறிப்பிட்ட அறிக்கையில் பிரேரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒம்புட்ஸ்மானால் ஆராயப்படும் மனுக்கள் சம்பந்தமாக மனுதாரருக்கு உண்மையாகவே நிவாரணம் கிடைத்துள்ளதா என்பதை மீள் பரிசீலனை செய்வதற்கும் ஒம்புட்ஸ்மானுக்கு தத்துவம் வழங்கப்பட வேண்டுமென விதந்துரைத்தல்,

(iv) ஒம்புட்ஸ்மான் சட்டத்தில் 1994/26 மூலம் திருத்தப்பட்ட 17 ஆவது பிரிவின் 4 (இ) பிரகாரம் விதப்புரை வழங்கப்பட்ட போதிலும் அவை அமுல்படுத்தப்பட்டு மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படும் ஒம்புட்ஸ்மானின் அறிக்கையை குழு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்ற போதிலும் அது தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கான வழிமுறை அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதால் அது தொடர்பாக தகுந்த நடவடிக்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென விதந்துரைத்தல்

(v) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை தொடர்புடைய நிறுவனங்களால் செயற்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அவ்வாணைக்குழுவினால் குறிப்பிட்ட சட்டமூலத்தின் 15 (8) பிரிவின் பிரகாரம் அவ்விடயம் பற்றி குறிப்பிட்டு கௌரவ சனாதிபதிக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் சனாதிபதி அலுவலகத்தினால் கௌரவ சபாநாயகருக்கு அனுப்பப்பட்டு அதன் மூலமாக பொதுமனுக்கள் பற்றிய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மேற்படி அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதே தவிர அது சம்பந்தமாக தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் காணப்படவில்லை என்பதால் அதற்குத் தகுந்த செயற்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென விதந்துரைத்தல்,

## 13. ஏழாவது பாராளுமன்றத்தின் இலக்குகள் தொடர்பில் எட்டாவது பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடபடிமுறைகள்

(i) காப்புறுதி ஒம்புஸ்மன் மற்றும் நிதி ஒம்புஸ்மன் அழைத்து கலந்தாலோசித்தல்.

(ii) மாகாண சபைகளின் பொதுமனு குழுக்களின் தவிசாளர்களையும் செயலார்களையும் அழைத்து கலந்தாலோசித்தல்.

(iii) நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் 17ஆம் பிரிவு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 15(8) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும் அறிக்கைகளை பாராளுமன்றத்தினால் குழுவிற்கு முன்வைக்கக்கூடியதாக சட்டங்களை அமுல்ப்படுத்துமாறு நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவிற்கு அறிவித்தல் மற்றும் அது பற்றிய அரசியல் அமைப்புச் சபையின் அரச சேவைகள் பற்றிய உப குழுவின் அறிக்கையில் சேர்த்தல் .

## 14. எட்டாவது பாராளுமன்றத்தின் இலக்குகள்

(i) அரசியல் அமைப்பில் சுயாதீன நிறுவனமொன்றான நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் தலையீடு தேவைப்படும் மனுக்கள் தொடர்பில் செயற்படவேண்டிய முறை பற்றி குழுவிற்கு தெளிவான கருத்துகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை என்பதுடன் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட வேண்டும்.

(ii) வெளிநாடுகளில் பொது மனுக்குழுக்களின் செற்பாடுகள் கண்காணிப்பதற்கான கல்வி சுற்றுலாவொன்றை மேற்கொள்வதற்காக அங்கீகாரத்தை கௌரவ சபாநாயகரிடம் கோரல்.

(iii) அமைச்சுடன் சேர்ந்து அலுவல்களை மேற்கொள்ளும்போது ஏற்படும் காலதாமதங்களை குறைத்துக்கொண்டு, பொது மனுக்குழுவின் அலுவல்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக மனுக்கள் தொடர்பான அலுவல்களை ஒருங்கிணைப்பதற்காக ஒவ்வொரு அமைச்சின் மட்டத்தில் உத்தியோகத்ரை நியமித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 15. 2013.01.01 முதல் 2015.06.26 வரையிலான காலகட்டத்தில் விசாரணை செய்யப்பட்ட மனுக்கல் பற்றிய சுருக்கம்

### (அ) பொதுமனுக்கள் பற்றிய குழுவிற்கு கிடைக்கப்பெற்ற மனுக்கள் பற்றிய சுருக்கம்

| | | |
|---|---|---|
| 1 | பொதுமனுக்கள் பற்றிய குழுவிற்கு கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | 1366 |
| 2 | நிலையியற் கட்டளைகளுக்கு இணங்கியொழுகாமையினால் குழுவினால் நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 334 |
| 3 | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 1061 |
| 4 | ஒம்புட்ஸ்மானுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 184 |
| 5 | குழு நடாத்தப் பட்ட தடவைகளின் எண்ணிக்கை | 96 |
| 6 | குழுவினால் விசாரிக்கப்ட்ட மனுக்கள் | |
| | 7 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 848 |
| | 6 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 87 |
| 7 | நிவாரணம் பெற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை | |
| | 7 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 85 |
| | 6 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 7 |
| 8 | விசாரணையின் பின்னர் ஒதுக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | |
| | 7 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 424 |
| | 6 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 16 |
| 9 | மேற்படி ஒதுக்கப்பட்ட மனுக்களில் குழுவின் ஆரம்ப விசாரணையின் பின்னர் நிவாரணம் வழங்க முடியாதென தீர்மானித்து, நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | |
| | 7 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 289 |
| | 6 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 9 |
| சில மனுக்கள் ஒரு தடவைக்கு மேல் குழுவில் பரிசீலிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குழுவில் பரிசீலிக்கப்பட்ட ஒட்டுமொத்த மனுக்களின் எண்ணிக்கை | | |
| | 7 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 1202 |
| | 6 வது பாராளுமன்றத்துடன் சம்பந்தப்ட்ட மனுக்களின் எண்ணிக்கை | 127 |

**(ஆ) வழங்கப்பட்ட நிவாரணங்களுக்குமைய பொழிப்பு**

| | **சம்பந்தப்பட்ட அமைச்சும் கோப்பு இலக்கமும்** | **நிவாரணம் கிடைத்துள்ள மனுக்கள்** |
|---|---|---|
| 1. | **மீண்டும் சேவையில் அமர்த்துதல்** | 13 |
| | கல்வி – (856) | |
| | சுகாதாரம் –(1946) | |
| | சட்டமும் ஒழுங்கும் – (627) | |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி – (1161, 1162) | |
| | இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி – (1552) | |
| | தபால் சேவைகள் - (214—311) | |
| | கமத்தொழில் –(166) | |
| | மின்வலு மற்றும் சக்தி – (1630) | |
| | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் – (1194, 1618) | |
| | நிதி, திட்டமிடல் – (1653) | |
| 2. | **பதவியுயர்வு வழங்குதல்/முனைப்பான சேவைக்காலத்தை வழங்கி பதவியுயர்வுகளை இற்றைப்படுத்துதல்** | 13 |
| | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம் – (1189) | |
| | கல்வி – (1013,1258,2071) | |
| | நிதி, திட்டமிடல் – (44,45,46,47, 802) | |
| | பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் – (887) | |
| | கமத்தொழில் -(1109) | |
| | சட்டமும் ஒழங்கும் - (901) | |
| | சுகாதாரம் -(1656) | |
| 3. | **உரிய ஓய்வூதியத்தை அல்லது நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்தை வழங்குதல்** | 11 |
| | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம் – (606) | |
| | கல்வி – (256, 677) | |
| | சுகாதாரம் –(621,622) | |
| | சட்டமும் ஒழங்கும் – (1221) | |
| | உயர் கல்வி –(779) | |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி –(921) | |
| | நிதி, திட்டமிடல் (2080) | |
| | மின்வலு மற்றும் சக்தி – (639) | |
| | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி (1298) | |

| | சம்பந்தப்பட்ட அமைச்சும் கோப்பு இலக்கமும் | நிவாரணம் கிடைத்துள்ள மனுக்கள் |
|---|---|---|
| **4. படியேற்றம்/நிலுவை சம்பளம் வழங்கல்** | | 5 |
| | கல்வி-(27,943) | |
| | வனசீவராசிக் வள பாதுகாப்பு- (725) | |
| | சட்டமும் ஒழுங்கும் – (2133) | |
| | நிதி மற்றும் திடடமிடல் - (1814) | |
| **5. நட்டஈடு வழங்கல்** | | 8 |
| | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம் – (469) | |
| | நிதி, திட்டமிடல்- (610,800,1736,2051) | |
| | வெளிநாட்டு வேலைவாய்ப்ப ஊக்குவிப்ப மற்றும் நலனோம்புகை- (1441) | |
| | போக்குவரத்து-(121) | |
| | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி – (110) | |
| **6. நிரந்தர சேவையில் அமர்த்தல்** | | 4 |
| | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி – (491,1099) | |
| | புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு-(1049) | |
| | விவசாயம்- (727) | |
| **7. பதவி உயர்வுகள்/நியமனங்கள் முன் திகதியிடல்** | | 1 |
| | நிதி, திட்டமிடல் - (1028) | |
| **8. புதிய நியமனங்களை வழங்கல்** | | 9 |
| | நிதி, திட்டமிடல் - (1274) | |
| | தபால் சேவைகள் -(208,769) | |
| | பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் -(1909 ) | |
| | கல்வி - (432,1190) | |
| | சுகாதாரம்- (1935,2204) | |
| | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி – (1139) | |
| **9. பதிலீட்டு நியமனங்களை வழங்குதல்** | | 2 |
| | தபால் சேவைகள் –(425) | |
| | போக்குவரத்து –(351) | |

| | சம்பந்தப்பட்ட அமைச்சும் கோப்பு இலக்கமும் | நிவாரணம் கிடைத்துள் ள மனுக்கள் |
|---|---|---|
| **10. இடமாற்றம் வழங்குதல்** | | 1 |
| | இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி – (1683) | |
| **11. உரித்துடைய கொடுப்பனவுகளை வழங்குதல்** | | 2 |
| | அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி – (541) | |
| | போக்குவரத்து –(1235) | |
| **12. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்தை வழங்குதல்** | | 1 |
| | நிதி, திட்டமிடல் – (604) | |
| **13. இலாபப்பங்கு மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை நிலுவையான வட்டியுடன் வழங்குதல்** | | 1 |
| | மின்வலு மற்றும் சக்தி – (1254) | |
| **14. மின்சார இணைப்பை பெற்றுக்கொடுத்தல்** | | 1 |
| | மின்வலு மற்றும் சக்தி – (1431) | |
| **15. காணி உறுதிகளை அல்லது உரிமங்களை வழங்குதல்** | | 3 |
| | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவம் – (282,1141) | |
| | சனாதிபதி செயலகம் – (114) | |
| **16. ஒழுங்கான வடிகாலமைப்பு முறைமையொன்றை வழங்குதல்** | | 1 |
| | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவம் – (1053) | |
| **17. சுற்றாடலுக்கு குந்தகம் விளைவிக்கும் கருத்திட்டங்களை நிறுத்துதல்** | | 1 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி – (1432) | |
| **18. பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக்கொடுத்தல்** | | 1 |
| | உயர் கல்வி அமைச்சு – (1101) | |
| **19. காப்புறுதி நன்மைகளை வழங்குதல்** | | 1 |
| | நிதி, திட்டமிடல்(1850) - | |
| **20. மாற்று பாதைகளை வழங்குதல்** | | 1 |
| | காணி மற்றும் காணி அபிவிருத்தி – (246) | |
| **21. கடனை செலுத்தித் தீர்க்கும் விடயத்தில் சலுகைகளை வழங்குதல்** | | 1 |
| | நிதி, திட்டமிடல் அமைச்சு – (1510) | |
| **22. மக்கள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தினை வலுப்பெறச்செய்தல்** | | 1 |
| | தனியார் போக்குவரத்து சேவைகள் – (437) | |
| | **மொத்தம்** | **82** |

## (இ) மனுக்கள் புலனாய்வு செய்யப்பட்ட அமைச்சிற்கேற்ப சுருக்கம்

| தொடர் இல | அமைச்சு | குழுவுக்கு கிடைத்துள்ள மனுக்களின் எண்ணிக்கை | குழுவினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழு நிவாரணம் வழங்குமாறு விதந்துரைத்த மனுக்களின் எண்ணிக்கை | அவ்விதப்புரைகளுக்கேற்ப நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | விதப்புரை செய்யப்பட்ட மனுக்களில் நிவாரணம் கிடைத்த வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் | 0 | 0 | 6 | 2 | 1 | 50 |
| 2 | கமத்தொழில் | 9 | 8 | 20 | 12 | 3 | 25 |
| 3 | புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் | 0 | 0 | 1 | 0 | 0 | - |
| 4 | சிவில் விமான சேவைகள் | 2 | 2 | 2 | 0 | 0 | - |
| 5 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம் | 5 | 5 | 16 | 8 | 3 | 38 |
| 6 | தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி | 2 | 1 | 2 | 2 | 0 | 0 |
| 7 | நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் | 4 | 2 | 7 | 2 | 0 | 0 |
| 8 | கலை, கலாசாரம் | 1 | 1 | **வி.வி** | 0 | 0 | - |
| 9 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 46 | 44 | 31 | 6 | 1 | 17 |
| 10 | பொருளாதார அபிவிருத்தி | 25 | 19 | 11 | 9 | 0 | 0 |
| 11 | கல்வி | 93 | 84 | 108 | 38 | 10 | 21 |
| 12 | சுற்றாடல் மற்றும் புதுப்பித்தக்கசக்தி | 5 | 4 | **வி.வி** | - | - | - |
| 13 | வெளிநாட்டலுவல்கள் | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 14 | நிதி, திட்டமிடல் | 196 | 44 | 98 | 44 | 17 | 26 |
| 15 | கட்றொழில், நீரக வளங்கள் | 3 | 2 | 4 | 0 | 0 | - |
| 16 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை | 2 | 2 | 1 | 1 | 1 | 100 |
| 17 | சுகாதாரம் | 34 | 33 | 46 | 26 | 6 | 23 |
| 18 | உயர் கல்வி | 5 | 4 | 6 | 2 | 2 | 100 |
| 19 | பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை | 16 | 14 | 14 | 4 | 0 | 0 |
| 20 | சுதேச மருத்துவம் | 6 | 4 | 5 | 2 | 0 | 0 |
| 21 | கைத்தொழில், வாணிப | 13 | 10 | 10 | 5 | 0 | 0 |
| 22 | நீர்ப்பாசனம், நீர் வள முகாமைத்துவம் | 17 | 15 | 24 | 14 | 3 | 21 |
| 23 | நீதி | 7 | 5 | 1 | - | - | - |
| 24 | தொழில் மற்றும் தொழில்சங்க உறவுகள் | 4 | 3 | 5 | 4 | 0 | 0 |

| தொடர் இல | அமைச்சு | குழுவுக்கு கிடைத்துள்ள மனுக்களின் எண்ணிக்கை | குழுவினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழு நிவாரணம் வழங்குமாறு விதந்துரைத்த மனுக்களின் எண்ணிக்கை | அவ்விதப்புரைகளுக்கேற்ப நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | விதப்புரை செய்யப்பட்ட மனுக்களில் நிவாரணம் கிடைத்த வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | காணி, காணி அபிவிருத்தி | 20 | 17 | 17 | 8 | 1 | 12 |
| 26 | சட்டமும் ஒழுங்கும் | 102 | 77 | 97 | 26 | 4 | 15 |
| 27 | கால்நடை, கிராமிய சமுதாய அபிவிருத்தி | 1 | 1 | 5 | 1 | 0 | 0 |
| 28 | மாகாண சபைகள், உள்ளூராட்சி | 42 | 36 | 45 | 22 | 8 | 36 |
| 29 | வெகுசனஊடகம், தகவல்கள் | 6 | 5 | 9 | 3 | 0 | 0 |
| 30 | சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 31 | தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் | 3 | 2 | 3 | 1 | 0 | 0 |
| 32 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 33 | பாராளுமன்ற அலுவல்கள் | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 34 | பெற்றோலியக் கைத்தொழில் | 4 | 4 | 1 | 1 | 0 | 0 |
| 35 | பெருந்தோட்டக் கைத்தொழில் | 4 | 1 | 1 | - | - | - |
| 36 | தபால் சேவைகள் | 21 | 18 | 34 | 17 | 5 | 29 |
| 37 | மின்வலு, சக்தி | 22 | 22 | 29 | 12 | 4 | 25 |
| 38 | தனியார் போக்குவரத்து சேவைகள் | 1 | 1 | 1 | 1 | 1 | 100 |
| 39 | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு | 0 | 0 | 1 | 0 | 0 | - |
| 40 | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் | 48 | 40 | 64 | 15 | 4 | 27 |
| 41 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு | 13 | 9 | 13 | 4 | 1 | 25 |
| 42 | சமூக சேவைகள் | 2 | 2 | 1 | 1 | 0 | 0 |
| 43 | விளையாட்டு | 1 | 1 | 2 | 0 | 0 | - |
| 44 | அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி | 2 | 2 | 5 | 2 | 1 | 50 |
| 45 | சீனிக் கைத்தொழில் | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 46 | தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | 1 | 1 | **வி.வி** | - | - | - |
| 47 | தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுடபம் | 1 | 0 | 9 | 5 | 0 | 0 |
| 48 | பாரம்பரிய கைத்தொழில்கள், சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி | 2 | 1 | **வி.வி** | - | - | - |
| 49 | போக்குவரத்து | 33 | 26 | 57 | 19 | 3 | 16 |
| 50 | நீர் வழங்கல். வடிகாலமைப்பு | 3 | 3 | 3 | 2 | 0 | 0 |
| 51 | இளைஞர் விவகாரம், திறன்கள் அபிவிருத்தி | 4 | 4 | 4 | 4 | 2 | 50 |
| 52 | சனாதிபதி செயலகம் | 1 | 1 | 6 | 2 | 1 | 50 |
| 53 | சட்ட மாஅதிபர் | 0 | 0 | 1 | 1 | 0 | 0 |
| 54 | இலங்கை பாராளுமன்றம் | 1 | 0 | 1 | 0 | 0 | - |
| | **மொத்தம்** | **838** | **585** | **827** | **328** | **82** | **25** |

**(ஈ) 6 ஆவது பாராளுமன்ற காலப்பகுதியில் குழுவுக்கு கிடைத்து 2013.01.01 - 2015.06.26 வரையிலான காலப்பகுதியில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட மனுக்கள் பற்றி அமைச்சிற்கேற்ப சுருக்கம்.**

| தொடர் இல | அமைச்சு | குழுவினால் விசாரணை செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | நிவாரணம் வழங்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | அவ்விதப்புரைக்கு அமைவாக நிவாரணம் வழங்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | விதந்துரைக்கப்பட்ட மனுக்களில் நிவாரணம் வழங்கப்பட்ட மனுக்கள் % |
|---|---|---|---|---|---|
| 1 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 2 | 2 | 1 | 50 |
| 2 | பொருளாதார அபிவிருத்தி | 1 | 0 | - | - |
| 3 | கல்வி | 2 | 2 | 0 | 0 |
| 4 | நிதி, திட்டமிடல் | 4 | 1 | 1 | 100 |
| 5 | சுகாதாரம் | 5 | 4 | 1 | 25 |
| 6 | நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை | 3 | 1 | 0 | 0 |
| 7 | கைத்தொழில் மற்றும் வாணிபம் | 2 | 2 | 0 | 0 |
| 8 | நீர்ப்பாசனம், நீர் வள முகாமைத்துவம் | 41 | 41 | 2 | 5 |
| 9 | காணி, காணி அபிவிருத்தி | 2 | 2 | 1 | 50 |
| 10 | சட்டமும் ஒழுங்கும் | 3 | 1 | 0 | 0 |
| 11 | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி | 1 | 0 | - | - |
| 12 | வெகுசனஊடகம், தகவல் | 1 | 1 | 0 | 0 |
| 13 | தபால் சேவைகள் | 3 | 2 | 0 | 0 |
| 14 | தபால், தொலைத்தொடர்புகள் | 1 | 0 | - | - |
| 15 | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் | 3 | 2 | 0 | 0 |
| 16 | போக்குவரத்து | 2 | 1 | 0 | 0 |
| 17 | இளைஞர் விவகாரம், திறன்கள் அபிவிருத்தி | 1 | 0 | - | - |
| 18 | இலங்கை பாராளுமன்றம் | 3 | 0 | - | - |
| | **மொத்தம்** | **80** | **62** | **6** | **10** |

**(உ) நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்குரிய (ஒம்புட்ஸ்மானுக்குரிய) மனுக்கள் பற்றிய சுருக்கம்.**

| | | |
|---|---|---|
| **2013.01.01 – 2015.06.26 வரையிலான காலப்பகுதியில்:-** | | |
| நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | | 184 |
| 2013.01.01 – 2015.06.26 வரையிலான காலப்பகுதியில் நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களில்:- | | |
| | குழுவினால் விசாரிக்கப்பட்ட 7 ஆம் பாராளுமன்றத்திற்குரிய மனுக்களின் எண்ணிக்கை | 21 |
| | குழுவினால் விசாரிக்கப்பட்ட 6 ஆம் பாராளுமன்றத்திற்குரிய மனுக்களின் எண்ணிக்கை | 7 |
| நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளரால் விதப்புரை செய்யப்பட்டு சலுகைகள் கிடைக்கப்பெற்றுள்ள மனுக்கள்- | | |
| | 7 ஆம் பாராளுமன்றத்திற்குரிய மனுக்களின் எண்ணிக்கை | 3 |
| | 6 ஆம் பாராளுமன்றத்திற்குரிய மனுக்களின் எண்ணிக்கை | 1 |
| நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளரால் தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | | 19 |

## 16. குழுவினால் சலுகைகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட மனுக்கள்

**(1) திரு.சீ.எம்.சந்திரதாச**

**வத்துவத்த, தும்மலசூரிய**

***சீஓஎம்/பீபீ/2012/1431***

தமது வர்த்தக நிலையத்திற்கு மொத்த மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய பணத்தொகையினைச் செலுத்தி 1 வருடமும் 09 மாதங்களும் கடந்துள்ளபோதிலும் மின்சார வசதி கிடைக்கவில்லையென்பதால் தமக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

குறித்த மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ள வகையில் பொது மனுக் குழுவினால் தொடுக்கப்பட்ட வினாவுக்குப் பதிலளித்து அவரது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

**(2) திருமதி. சந்திரலதா மாகமமுதலி**

**இலக்கம் 18, ஆட்டிகல இல்லம், கெஸ்பேவ, பிலியந்தல**

***சீஓஎம்/பீபீ/2011/606***

தாம் 1973.03.01 ஆம் திகதி ஆளணி மக்கள் தொடர்பு முகாமையாளர், பணிப்பாளர் சபைச் செயலாளர் மற்றும் பிரதான எழுதுனர் பதவிக்கு நியமனம் பெற்றதாகவும்,1980.12.24 ஆம் திகதிய 102/80 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தமது பதவியானது நிருவாக முகாமையாளராக மாற்றமடைய வேண்டியிருப்பினும் தமக்கு குறிப்பிட்ட பதவியோ சம்பளமோ வழங்கப்படவில்லையெனவும், தம்மை அதற்கு கீழுள்ள ஆளணி முகாமையாளராக அமயப் பதவியொன்றுக்கு நியமித்துள்ளனர் எனவும், ஓய்வுபெறுவதற்கு முன்னர் பெறப்பட்ட இறுதிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு தமது ஓய்வூதியப் பணிக்கொடையைச் செலுத்தி தமக்கு நீதியை நிலைநாட்டுமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரின் கோரிக்கை நியாயமானதென ஏற்றுக்கொண்டு மனுதாரருக்கு நிருவாக முகாமையாளர் பதவியை வழங்குவதற்கும், அவரது 34 வருட சேவைக்காலத்தைக் கருத்திற்கொண்டு பணிக்கொடை, நிலுவைச் சம்பளம் மற்றும் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் தண்ட வட்டியாக ரூபா 529,372.24 வழங்குவதற்கும் கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் பட்டுள்ளதெனவும், முதல் தவணையாக ரூபா 3 இலட்சம் பணமும் எஞ்சிய தொகையை 2 தவணைகளில் 2013 ஆம் ஆண்டு ஜுன் 01 ஆம் திகதியும் செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதியும் செலுத்துவதற்காக தீர்மானித்து ஏற்கனவே ரூபா 3 இலட்சம் க்கான காசோலையொன்றை மனுதாரருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**(3) திரு.ஏ.எம்.கிறேசன் அசோக**

**"சுமிஹிரி", கிம்பில்ல, சிலாபம்**

***சீஓஎம்/பீபீ/2012/1189***

மனுதாரர் தாம் தற்போது வட மேல் மாகாண சபையில் கூட்டுறவுச் சங்கப் பரிசோதகராக பணியாற்றுவதோடு 1996.01.01 ஆம் திகதி கூட்டுறவுச் சங்க பரிசோதகர் "அ" வகுப்புக்கு உள்ளீர்க்கப்பட்டதோடு அப்பதவியில் 10 வருடங்கள் பணியாற்றியிருப்பின் முதலாம் வகுப்பிற்கு பதவியுயர்தப்பட வேண்டியிருப்பினும் தமக்கான பதவி உயர்வு இதுவரை வழங்கப்படவில்லையென்பதால் தமக்குரிய பதவி உயர்வினைப் பெற்றுத்தந்து நியாயத்தை நிறைவேற்றுமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள வகையில் கூட்டுறவு மற்றும் உள்துறை வர்த்தக அலுவல்கள் அமைச்சின் செயலாளரது கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு முதலாம் வகுப்புக்கான பதவி உயர்வினை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(4) திரு.ரீ.சீ.டேரியஸ் த சா**

**இலக்கம் 85, ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம்**

***சீஓஎம்/பீபீ/2011/725***

வஸ்கமுவ, கிரிஓயா வீதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக பணம் செலுத்தாது நிறுவனத்தின் நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறுக்கு தம்மிடமிருந்து தாமதக் கட்டணம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் தாம் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் அது தொடர்பாக ICTAD நிறுவனத்திற்கு அறிவித்தாலும் தமக்கு நிவாரணம் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்து தமது பங்குகளுக்கான செலுத்தல்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகை மற்றும் தாமதக் கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை என்பவற்றை தமக்கு விடுவித்துத் தருமாறு கோரி மனுதாரரால் மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

குழுவானது மேற்படி மனுவினை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரினால் கோரப்பட்டுள்ள மேலதிக வேலைக் கட்டணமாக ரூபா 437,850.62 வும் தாமதக் கட்டணமாக ரூபா 845,916.00 வும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணமாக ரூபா 488,205.72 வும் விடுவிக்கப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**(5) திரு.டபிள்யூ.எச்.எஸ்.பர்னாந்து**

**174, மல்வத்தை வீதி, மாத்தளை**

***சீஓஎம்/பீபீ/2010/282***

நீர் விநியோகக் கருத்திட்டங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தேக்கம் காரணமாக மனுதாரரின் கல்லுடைத்தல் கைத்தொழிலை பேணிவருதல் தடை செய்யப்பட்டுள்ளதால் மேற்படி கைத்தொழிலின் நிமித்தம் தமக்கு பெற்றுத்தரப்பட்டுள்ள காணிக்கு கைத்தொழிலைப் பேணிவரும் பொருட்டு நீண்ட கால உரிமம் பெற்றுத்தருமாறு கோரி மனுதாரரால் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மனுவானது மேலதிக விசாரணைக்காக ஒம்புட்ஸ்மனுக்கு அனுப்பப்பட்ட பின்னர் குறித்த நீண்டகால உரிமத்தை வழங்குமாறு அவர் சிபாரிசு செய்துள்ளார். அதன் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் அங்கீகாரம் மற்றும் மஹாவலி அதிகார சபையின் சுற்றறிக்கைக்கு உட்பட்டதாக கைத்தொழிலைப் பேணிவருவதற்காக மனுதாரருக்கு வருடாந்த உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோடு அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின் பிரகாரம் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்டகால உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**(6) திருமதி. என். பிரியங்கிகா நில்மினி**

**இலக்கம் 333, ஜயந்தவத்த, களுத்துறை வடக்கு.**

***சீஓஎம்/பீபீ/2010/114***

களுத்துறை, நாகொடயில் அமைந்துள்ள பெம்புரூக் தொட்டக் காணியில் காணித்துண்டொன்றைக் கோரி முற்பணம் செலுத்தப்பட்டதோடு பொது மனுக் குழுவின் விதப்புரையின் பிரகாரம் தமக்குக் காணியில் 24.78 பேர்ச்சஸ் அளவினைப் பெற்றுத் தருவதற்கான சத்தியக் கடதாசிகள் பெற்றுக்கொள்ளப்பட்டாலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவானது இதுவரை தமக்கான காணியை ஒப்படைக்கவில்லையென்பதால் குறித்த காணியை குடியிருப்புக்காகக் கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், 2003 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி மனுதாரரால் செலுத்தப்பட்டதன் பின்னர் 4982 ஆம் இலக்க மற்றும் 2011.11.25 ஆம் திகதிய உறுதியை அவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(7) திருமதி. இந்திராணி கல்பாத**

**B/66 , கறுவாத்தோட்டம், அங்குறுவத்த , ருவண்வெல்ல**

***சீஓஎம்/பீபீ/2012/1099***

மனுதாரர் சுகாதாரத் திணைக்களத்தில் எழுதுனராக 26 வருடங்கள் பணியாற்றியுள்ள போதிலும் அவரது சேவை நிரந்தரமாக்கப்படாததன் காரணமாக ஓய்வூதிய உரித்தினை இழந்துள்ளார் என்பதுடன் தமது நியமனத்தை நிரந்தரமாக்கித் தருமாறு கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அவரது நீண்டகால சேவை தொடர்பாக கருணை அடிப்படையில் ஆராய்ந்து அவருக்கு மட்டும் தனிப்பட்டதாக அமையக்கூடிய வகையில் அவரது சுகாதார எழுதுனர் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு குழு வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் மனுதாரரின் 26 வருட நீண்ட மற்றும் சிறந்த சேவைக் காலத்தைக் கருத்திற்கொண்டு அவருக்கு மட்டும் தனிப்பட்டதாக அமையக்கூடிய வகையில் ஓய்வூதியம் தயாரிக்கும் பணிக்காக மட்டும் வரையறுக்கப்படும் வகையில் முதல் நியமனத் திகதியாகிய 1985.10.01 ஆம் திகதியில் சேவையை நிரநிதரமாக்கி சேவை முடிவுறுத்தப்பட்டிருப்பதனால் அதன் பிரகாரம் அவரை சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(8) திரு. டீ.ஜீ.விமலசேன**

**இலக்கம் 4218, சமகிபுர, விஹாரகல, சூரியவெவ**

***சீஓஎம்/பீபீ/2012/1141***

தமக்கு மஹாவலி காணிக் கச்சேரியின் மூலம் கிடைக்கப்பெற்ற காணியின் ஒரு பகுதியை பிறிதொரு நபர் அநீதியான முறையில் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்ற மனுதாரர் காணியின் முழு உரிமையினையும் தமக்கு சட்ட ரீதியாகப் பெற்றுத்தருமாறு கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

உரிமம் வழங்கப்படுதல் பற்றிய முன்னேற்றம் தொடர்பாக குழுவினால் ஆராயப்பட்டபோது ஒரே காணிக்காக இரண்டு உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதானது தவறென ஏற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள், மனுதாரருக்குப் புறம்பானதொரு காணித்துண்டைப் பெற்றுக்கொடுத்து நிலைமையை சீர் செய்து அவருக்குக் காணியின் உறுதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்தனர்.

**(9) திரு.என்.பீ.எஸ். ரத்நாயக்க**

**கொடகம, பெல்மடுல்ல**

***சீஓஎம்/பீபீ/2012/1053***

மனுதாரரின் புல்லந்த எனப்படும் காணிக்கு நீர் வழங்கிய *சிறித் எல* மற்றும் *போட்டாவ* என்பவற்றை தகர்த்து நீர் வழங்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளதால், தமக்கு நீதியை நிலைநாட்டித் தருமாறு கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக ஆராயும்போது ஒதுக்குப் பிரதேசத்தினைப் பாதுகாத்துக் கொள்வது பிரதேசத்தின் கிராம சேவகரினதும் பிரதேச செயலாளரினதும் கடமையென்பதால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதது அவர்களது கடமைகளை அவர்கள் புறக்கணித்துள்ளனர் என்பதாகுமென குழு அவதானித்தது. எனவே, குறித்த ஒதுக்குப் பிரதேசத்தை விடுவித்துக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் தனிப்பட்ட பேதங்களைத் தீர்த்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மனுதாரருக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அதேவேளை, பயிர்ச்செய்கைக்குத் தேவையான ஒத்துழைப்பினை மனுதாரருக்குப் பெற்றுக்கொடுக்குமாறு மேற்படி உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

**(10) திரு.ஐ.பீ.கே.எச்.கே. தர்மசிறி**

**இலக்கம் 576, பெல்பிட்டிய, எஹலியகொட**

***சீஓஎம்/பீபீ/2012/1274***

இலங்கை வங்கியினால் நடத்தப்பட்ட இலங்கை வங்கி பதவியணி உதவியாளர் (பயிற்சி) பதவிக்கான எழுத்து மூல பரீட்சையில் சித்தியெய்தி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மனுதாரர், தமக்கு அரச, தனியார் மற்றும் கூட்டுத்தாபன துறையில் சராசரியாக 3% தொழில் வாய்ப்புக்களை அங்கவீனமுற்றவர்களுக்கு ஒதுக்கி வைப்பதற்கான 04/0766/027/006 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் அமைந்துள்ள சலுகையைப் பெற்றுத்தருமாறு கோரி மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சலுகையை அங்கவீனமுற்றுள்ள மனுதாரருக்குப் பெற்றுக்கொடுக்குமாறு குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் மனுதாரர் 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் பயிலுநர் பதவிநிலை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

**(11) திரு.கே.லொக்குலியன**

**இலக்கம் 44/9, பன்சலை வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ.**

***சீஓஎம்/பீபீ/2011/779***

இந்த மனுதாரர் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தில் உள்ளகக் கணக்காய்வாளராகப் பணியாற்றியுள்ளதோடு அவர் 55 வயதைப் பூர்த்தி செய்யவிருந்த தருணத்தில் சேவையிலிருந்து விலகியுள்ளதோடு தமக்கு 3 மாத காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டியிருந்த சேமலாப நிதியத்திற்கான அனுகூலங்கள் 15 மாதங்கள் கழிந்த நிலையிலேயே செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். எனவே, தாமதமான காலப்பகுதிக்கு வட்டி செலுத்துமாறும் ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றுத்தருமாறும் கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக குழு விசாரித்து வழங்கிய விதப்புரையின் பிரகாரம் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் மனுதாரருக்கு கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளது.

**(12) திரு.கே.என்.ஜீ.என்.பெரேரா**

**இலக்கம் 225, ஸ்ரீ ஞானமோலி மாவத்தை, 11 ஆம் குறுக்குத் தெரு, மாகொல வடக்கு, மாகொல.**

***சீஓஎம்/பீபீ/2011/610***

எழுதுனராக சேவையில் இணைந்துள்ள இம்மனுதாரருக்கு பல வருடங்களில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லையென்பதோடு 17 வருடங்களுக்குப் பின்னர் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டதாகவும், அது தொடர்பாக தாம் அரசியல் பழிவாங்கல்கள் பற்றிய குழுவிற்கு மேன்முறையீடு மேற்கொண்டதாகவும், 1995.06.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 3 ஆம் தரத்தின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குமாறு விதப்புரை செய்யப்பட்டாலும் அது கிடைக்கப்பெறாமையினால் ஏற்பட்ட மன விரக்தியின் காரணமாக ஓய்வுபெற்றதனால் குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு தமக்கு நீதியை நிலைநாட்டுமாறு கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

குழுவில் கலந்துரையாடி மனுதாரருக்கு முதலாவதாக ரூபா 200,000.00 மற்றும் இரண்டாவதாக ரூபா 350,000.00 ஐ கருணை அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கத்துக்கு வரப்பட்டபோதிலும் மனுதாரர் அதனை ஏற்பதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே, மனுதாரருக்கு மட்டும் தனிப்பட்டதாக அமையும் வகையில் நிவாரணம் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதால் குழுவிற்கு மதிப்பளிக்கும் வகையில் கருணைக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளதனால் அத்தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டது.

**(13) திரு.ஏ.சிறிபால**

**இலக்கம் 363, தாகொன்ன, நீர்கொழும்பு ஊடாக**

***சீஓஎம்/பீபீ/2012/1221***

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவுக்கு உட்பட்டதாக தாம் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருப்பதாகவும், 2011.11.30 ஆம் திகதி தம்மைக் குற்றமற்றவரெனத் தீர்மானித்து விடுதலை செய்ததன் பின்னர் தமக்கு எதிரான வழக்கானது முடிவுக்கு வந்தபோதிலும், தமக்கு உரித்தான உப பொலீஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வினை வழங்கி வழக்கமான முறையில் ஓய்வுபெறச் செய்யப்படவில்லையென்பதால் தமக்கான ஓய்வூதியம் இழக்கப்பட்டு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் நிவாரணம் பெற்றுத்தருமாறுகோரி மனுதாரர் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவைப் பொது மனுக்குழு ஆராய்ந்ததன் பின்னர் வழங்கப்பட்ட ஆலோசனைகளின்படி மனுதாரரின் ஓய்வுபெறலை ஒரு பொதுவான ஓய்வுபெறலாகத் திருத்தி அவருக்கு உதவிப் பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(14) திரு. டபிள்யு.எஸ். பீரிஸ்**

**இல. 41/ ,1டி.எஸ். பொன்சேகா வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.**

***சிஓஎம்/ பிபி/ /2011 541***

மனுதாரர் தான் ஓய்வுபெற்றுள்ளதாகவும் 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு செலவுத்திட்டக் கொடுப்பனவில் 2005.08.01 தொடக்கம் 2008.07.01 ஆந் திகதி வரையிலான 36 மாத காலப் பணம் தனக்குக் கிடைக்க இருந்ததாகவும், அதன் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதாகவும், அந்தப் பணத்தின் மீதிப் பகுதியைப் பெற்றுத் தருமாறும் 2007 ஜுலை தொடக்கம் 2009 ஏப்ரல் மாதம் வரை ஊழியர் சேமலாப நிதியில் பயன்பெறும் உரிமை இருந்தபோதிலும் அந்தக் காலவரையறையில் இரண்டு மாதங்கள் தவிர்ந்த, நிறுவனத்தினால் அதன் மீதி உதவுத் தொகை செலுத்தப்படவில்லை என்றும் அந்தப் பணத்தைத் தமது சேமலாப நிதிக் கணக்கிற்கு வரவு வைக்குமாறும் கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

பொது மனுக் குழுவின் சிபாரின்படி மனுதாரர் தொடர்பான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதென்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மனுதாரரும் இதனை உறுதிப்படுத்திப் பொது மனுக் குழுவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

**(15) திரு. மத்துகமகே பிரேமரத்ன**

**இல. 344, தொடம்கும்புரவத்த, தொடம்கும்புர, அளவ்வ**

***சீஓஎம்/பீபீ /2011/ 856***

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியரான மனுதாரர் கொழும்பு 14, கிராண்ட்பாஸில், கொ/புனித ஜோசப் ஆண்கள் கல்லூரியில் பணியாற்றும்போது சுகவீனம் காரணமாகக் கடமைக்குச் சமூகமளிக்க முடியாதெனப் பாடசாலை அதிபரான அருட் தந்தைக்கு அறிவித்திருந்தும் பதவி விட்டு நீங்கியவராகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் தான் சேவையில் இல்லாத கால எல்லைக்காகச் சம்பளம் செலுத்துமாறு மீண்டும் கோரிக்கை விடுத்திருப்பினும், அவரை மீண்டும் சேவையில் அமத்துமாறு அறிவித்து லயக் கல்விப் பணிப்பாளரினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள 2012.03.28 ஆந் திகதியக் கடிதத்தின் 5வது நிபந்தனையான மீண்டும் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்ற நிபந்தனைகளுக்கு இணங்கி அவரினால் மீண்டும் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டது.

**(16) திருமதி எஸ்.ஏ.பேமலதா**

**இல. 95/ 15, காக்கெலேவத்த, பல்லேவெல**

***சீஓஎம்/பீபீ/2011/ 621***

அரசியல் காரணங்களினால் சேவையை இழந்த மனுதாரர் 1996.06.05 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 1978.08.10 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளபோதிலும் ஓய்வூதியத்தை கணிப்பிடும்போது முன்னைய சேவைக்காலம் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று கூறி மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

பொது மனுக்குழு மனுவை விசாரித்ததன் பின்னர் சேவையில் ஈடுபடாத காலத்தை ஓய்வூதிய கணிப்பீட்டில் சேர்த்து ஓய்வூதியத்தை தயாரிக்குமாறு ஓய்வூதிய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய ஆலோசனைக்கமைய, மனுதாரரின் ஓய்வூதியத்தை சரியான முறையில் கணித்து ஓய்வூதியம் செலுத்தப்பட்டது.

**(17) திருமதி K.சீலன்**

**இல. 68/42, நீலம்மஹர, புத்பிட்டிய.**

***சீஓஎம்/பீபீ/2011/622***

அரசியல் காரணங்களினால் சேவையை இழந்த மனுதாரர் 1996.06.05 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்துக்கமைய 1978.08.10 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளபோதிலும் ஓய்வூதியத்தைக் கணிப்பிடும்போது முன்னைய சேவைக்காலம் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று கூறி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

பொது மனுக்குழு மனுவை விசாரித்து சேவையில் இருக்காத காலத்தை ஓய்வூதியத்துக்காக கணக்கிட்டு ஓய்வூதியத்தைத் திருத்துமாறு ஓய்வூதியத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய ஓய்வூதியம் சரியான முறையில் கணிக்கப்பட்டு ஓய்வூதியம் செலுத்தப்பட்டுள்ளது.

**(18) திரு. H.M. விஜேரத்ன பண்டார,**

**இல.,62 ஹுலந்தாவ தெற்கு, மொனறாகலை.**

***சீஓஎம்/பீபீ/2010/311***

மொனறாகலை உப தபால் அலுவலகத்தில் தபால் பதிலீட்டாளராக தான் பணியாற்றும்போது தனது மனைவி மொனறாகலை தபால் காரியாலயத்தினால் நிர்வகிக்கப்படும் ஹுலந்தாவ தெற்கு உப தபால் அலுவலகத்தில் உப தபால் நிலைய பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றதனால் தான் அதே தபால் காரியாலயத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தகுந்ததல்ல எனக் கூறி வேறு தபால் அலுவலகமொன்றில் சேவையில் ஈடுபடுத்தாமல் பொய்க்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தனது தொழிலை இல்லாமல்

செய்தமையினால் இரத்துச் செய்யப்பட்ட தனது நியமனத்தை செல்லுபடியாக்கி, கடந்த காலத்துக்கான பதவி உயர்வினை பெயரளவில் வழங்கி தற்காலத்துக்கு உரித்தான பதவியை வழங்குமாறு கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பொது மனுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கருணை அடிப்படையில் மனுதாரரின் வயது தொடர்பாக கருத்தில் கொள்ளாமல் அவரை மொனறாகலை தபால் அலுவலகத்தில் சேவை முதிர்வு பட்டியலில் கடைசி நபராக கருதி பதிவு செய்யப்பட்டு பதிலீட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**(19) திரு. திசாநாயக்க பத்மசிறி**

**திசாநாயக்க ஸ்டோர்ஸ், ஜனபதய, நாக்கியா தெனிய**

***சீஓஎம்/பீபீ /2010/23***

இந்த மனுதாரர் காலி தபால் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிலீட்டுப் பதவியில் பணியாற்றும் போது அவரது கடமை இடைநிறுத்தப்பட்டுப் பின்னர் நடைபெற்ற முறையான ஒழுக்காற்று விசாரணையில் ஒழுக்காற்றுக் கட்டளையாகத் தனது பதிவு செய்யப்பட்ட பதிலீட்டு நிலைமை இரத்துச் செய்யப்பட்டமையால் ஏற்பட்ட அநீதிக்காகத் தன்னை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்திருந்தார்.

பொது மனுக்குழுவின் வேண்டுகோளுக்கமைய இந்த மனுதாரர் தொடர்பாகக் கருணை அடிப்படையில் ஆராய்ந்து அவருக்கு ஓய்வூதிய உரிமையில்லாமல் பதிவு செய்யப்பட்ட பதிலீட்டுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

**(20) திருமதி M.R.A. டயனாலி சுபாசினி பிரேமச்சந்ர**

**“சமன்பாய” புஸ்சல்ல, பரகடுவ**

***சீஓஎம்/பீபீ /2010/208***

தனக்குக் கிடைக்கவிருந்த புஸ்சல்ல - மில்லவிட்டிய பதில் உப தபாலதிபர் பதவிக்கான நியமனம் தடை செய்யப்பட்டதாகவும், மீண்டும் அந்தப் பதவியை வர்த்தமானியில் பிரசுரித்துள்ளதனால் தனக்கு அந்தப் பதவியைப் பெற்றுத்தருமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த நியமனத்தை வழங்க மீண்டுமொரு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதுடன் திருமதி ஜி. சுரேக்கா லக்மினி பெரேரா முதலாம் இடத்துக்குத் தெரிவானதுடன் அதன்படி அவருக்குப் புஸ்சல்ல - மில்லவிட்டிய உப தபால் அலுவலகத்தில் பதில் உப தபாலதிபர் பதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அவரும் இந்த மனுதாரர் ஆகிய இருவரும் பொது மனுக்குழு முன்னிலையில் தோற்றியதனால் நியமனம் வழங்கப்படவில்லை.

பின்னர் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய இரண்டாவது நேர்முகப்பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று அப்போது தனது அலுவலகத்தைத் தயார்படுத்தி வைத்திருந்த திருமதி G. சுரேக்கா லக்மினி பெரேராவுக்கு புஸ்சல்லாவ மில்லவிட்டிய பதில் உப தபாலதிபர் பதவியும், திருமதி M.R.A.D. சுபாசினி பிரேமச்சந்ரவுக்கு அந்த மாவட்டத்தில் தகுந்த இடமொன்றில் நியமனமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**(21) திருமதி G. சுரேக்கா லக்மினி பெரேரா**

**'வாசனா' புஸ்சல்ல, பரகடுவ**

***சீஓஎம்/பீபீ /2011/769.***

புஸ்சல்ல - மில்லவிட்டிய என்ற பெயரில் இயங்கிய உப தபால் நிலையத்தில், உப தபாலதிபர் பதவிக்காக நடத்தப்பட்ட பரீட்சையில் தான் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டதுடன் தனது நியனம் அமைச்சினால் அனுமதிக்கப்பட்டு வரும்வரை குருவிட்ட தபால் அலுவலகத்தில் தான் 11/2 வருடங்களாகப் பயிற்சி பெற்றதாகவும் தனது கணவருக்குரிய கடன் பணத்தைப் பாவித்துத் தான் தெரிவு செய்யப்பட்ட தபால் அலுவலகத்தை நவீனமயப்படுத்தியபோதிலும், அமைச்சினால் அந்தத் தபால் அலுவலகத்துக்கு வேறு நபரொருவர் நியமிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் மனுதாரர், தனக்கு நியாயம் வழங்குமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இரண்டாவது நேர்முகப் பரீட்சையிலும் திருமதி சுரேகா லக்மினி பெரேரா கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்த அடிப்படையில், அவர் இந்தப் பதவிக்கு மிகவும் தகுதிவாய்ந்தவர் என்பதாலும், மனுதாரர் தனது அலுவலகத்துக்காக தகுந்த இடமொன்றைத் தயார்படுத்தியுள்ளதாலும் அவருக்கு குறிப்பிட்ட பதவி வழங்கப்பட்டது.

**(22) திருமதி D.K.H. வசந்தா**

**இல. 7/19, கல்வலலந்த மாவத்தை, மக்குலுதுவை, பிலியந்தலை.**

***சீஓஎம்/பீபீ/2010/27***

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ள மனுதாரர், பின்னர் ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டதுடன், தனது முன்னைய சேவைக்காலத்தை ஓய்வூதியத்தில் சேர்க்குமாறும், தாபன விதிக்கோவையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரிவு 09ற்கு இணங்க சம்பள உயர்வு தருமாறும் கோரி மனுதாரர் மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

குழுவினால் இந்த மனு ஆராயப்பட்டதன் பின்னர், மனுதாரருக்கு நிவாரணம் வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன், மனுதாரர் ஆசிரியர் நியமனமொன்றைப் பெறும்போது, தாபன விதிக்கோவைக்கமைய சம்பள உயர்வு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**(23) திரு. P.P. தர்மதாச**

**போவத்த, மூகட்டுல, மாரவில.**

***சீஓஎம்/பீபீ/2010/256***

1977 பொதுத் தேர்தலின் பின்னர் தான் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானதாகவும் உயிர் பாதுகாப்புக்காக வெளிநாடு சென்று ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததாகவும், அதனால் தனது

ஓய்வூதியம் குறைந்ததாகவும் தெரிவித்துள்ள மனுதாரர், தான் நோயுற்றுள்ளதைக் கருத்திற்கொண்டு, அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைத் தனக்கும் வழங்குமாறு கோரி மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரின் ஓய்வூதியத்தைப் பொதுநிருவாகச் சுற்றறிக்கை 7/96 மற்றும் 7/96(1) இன் கீழ் திருத்தப்பட்ட ஓய்வூதியமாகப் பெற்றுக்கொடுக்குமாறு பொது மனுக்குழு சிபாரிசு செய்துள்ளதுடன், அதன்படி மனுதாரர் 60வயது வரை கடமையாற்றியதாகக் கருதி ஓய்வுபெறச்செய்து ஓய்வூதியம் திருத்தப்பட்டுள்ளது.

**(24) திரு. D.A. தயாபண்டார**

**"தஸ்கொன் செவன", கமகொட, களுத்துறை.**

***சீஓஎம்/பீபீ/2011/627***

பொலிஸ் கான்ஸ்டபிள்ளாக பணியாற்றியுள்ள மனுதாரர் திடீரென நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும், இது தொடர்பாக தனது நிறுவனத் தலைவருக்கு மூத்துமூலம் மற்றும் வாய்மூலம் அறிவித்தபோதிலும், பதவியைவிட்டு நீக்கியவராகக் கருதப்பட்டதால் மீண்டும் சேவையில் நியமித்து நிலுவைச் சம்பளம் வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

பொது மனுக்குழு இந்த மனுவை விசாரிக்கும்போது மனுதாரர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக மனுதாரர் மற்றும் உத்தியோகத்தர்கள் பொதுமனுக் குழுவுக்கு அறிவித்தனர்.

**(25) திரு. அனுர பி. பொல்வத்த**

**"ஸ்வசக்தி" வீடு, ஸ்ரீ குணபால திஸ்ஸ மாவத்தை, நேபொட.**

***சீஓஎம்/பீபீ/2012/1510***

களுத்துறை பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளை முகாமையாளராக சேவையாற்றியுள்ள மனுதாரர் வாடிக்கையாளர் ஒருவருக்கு உதவினார் எனத் தெரிவிக்கப்பட்டு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டு, அநீதியான முறையில் ஒழுக்காற்று விசாரணை நடத்தி, தொழில் இல்லாமல் செய்யப்பட்டதனால் மீண்டும் தனது தொழிலைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பொது மனுக்குழு இந்த மனுவை ஆராய்ந்தபோது மீண்டும் தொழில் வழங்க முடியாதெனத் தீர்மானித்தபோதிலும் அவரது கடன்தொகை சம்பந்தமாக ஏதேனும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வங்கிக்கு வழங்கிய சிபாரிசின்படி கடன்தொகையைச் செலுத்துதல் தொடர்பாக மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**(26) திருமதி எஸ்.எம். ரோஹினி தயாகாந்தி**

**இல./5 16, நாமல் தெனிய,**

**பரகடுவ.**

***சீஓஎம்/பீபீ/*2012/1161**

சப்ரகமுவ மாகாண சபையின் குருவிட்ட பெரடைஸ் அரச பொறுப்பேற்றல் சிறுவர் இல்லத்தில்“ மேட்ரன்” பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த மனுதாரர்கள் இருவரின் சேவை அவர்களது பராமரிப்பில் இருந்த ஒரு பிள்ளையின் மரணத்தால் இடம்பெற்ற விசாரணைகளின் விளைவாக முடிவுறுத்தப்பட்டதனால் அந்தப் பதவியில் பணியாற்ற மீண்டும் வாய்ப்பளிக்குமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார். பொது மனுக்குழு மனுவை விசாரித்த இரண்டாவது தடவையில் மனுதாரரை எந்த அடிப்படையிலாவது சேவையில் சேர்த்துக்கொள்ளுமாறு சிபாரிசு செய்தது. அதன்படி மனுதாரர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**(27) திருமதி ரி.எச். இந்ராணி ஜயசிங்க**

**இல.26 , மடல, எல்லகாவ.**

***சீஓஎம்/பீபீ/*2012/1162**

சப்ரகமுவ மாகாண சபையில் குருவிட்ட பெரடைஸ் அரச பொறுப்பேற்றல் சிறுவர் இல்லத்தில்“ மேட்ரன்” பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த மனுதாரர்கள் இருவரின் சேவை அவர்களது பராமரிப்பில் இருந்த ஒரு பிள்ளையின் மரணத்தால் இடம்பெற்ற விசாரணையின் விளைவாக முடிவுறுத்தப்பட்டதனால் அந்தப் பதவியில் பணியாற்ற மீண்டும் வாய்ப்பளிக்குமாறு கோரி மனுதாரர் மனுவைச் சமர்ப்பித்துள்ளார். பொது மனுக்குழு மனுவை விசாரித்த இரண்டாவது தடவையில் மனுதாரரை எந்த அடிப்படையிலாவது சேவையில் சேர்த்துக்கொள்ளுமாறு சிபாரிசு செய்தது. அதன்படி மனுதாரர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொளள்ளப்பட்டார்.

**(28) திரு. சி.கே. மண்டலவவத்த**

**இல. 76, மாளிகே வத்த, இஹல கிம்பிய, காலி**

**COM/PP/2011/552**

மனுதாரர் உள்ளிட்ட குழுவினர் இளைஞர் விவகார தொழில் திறமை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் தச்சு, ஒட்டுனர், மின்சார தொழில்நுட்பவியலாளர் போன்ற பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் 3 மாதங்களின் பின்னர் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும், தகைமைகள் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டதனால் மீண்டும் தொழில் தருமாறு கோரி மனுதார் இந்த மனுவைத் தாக்கல்

செய்துள்ளார். பொது மனுக்குழு இந்த மனுவை விசாரிக்கும்போது இவர்களின் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு அதன்படி வெளிக்கள உதவியாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

**(29) திரு. எம். கணேஸ்ராஜா**

**புளியவத்த தமிழ் மகா வித்தியாலயம், திக்ஓயா.**

**COM/PP/2014/2071**

மனுதாரர் வெளிநாட்டு பாடநெறியொன்றில் கலந்து கொண்டிருந்தபோது பாடசாலை அதிபர் சேவையில் முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்துவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகளிக்க முடியாமற் போனமையால் தாம் அந்தப் பதவியுயர்வை இழந்ததாகவும்,

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ள முடியாது போனதால் தான் மேற்படி பதவி உயர்வை இழந்ததாகவும் ஏற்புடைய நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பிறிதொரு தினத்தை தருமாறு தான் கோரியிருந்த போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை என குறிப்பிட்டு தனக்குரிய பதவி உயர்வை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து மேற்படி மனு தொடர்பாக அறிக்கை கோரப்பட்டுள்ளதோடு அதற்கு பதிலளித்துள்ள அமைச்சின் செயலாளர் மனுதாரருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**(30) திரு யூ. எஸ் எஸ் ப்ரனாந்து உள்ளிட்ட சிலர்**

**"சுரங்க", புனித சேவியர் வீதி, உல்ஹிட்டிய, வென்னப்புவ**

***சீஓஎம்/பீபீ*/2011/802**

இலங்கை வங்கியில் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற உத்தியோகத்தர் பயிற்சி பெறுவோர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் கட்டுரை மற்றும் பொது அறிவு வினாத்தாள் 2010/48 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்கு புறம்பானதென்பதால் தனக்கு குறித்த பதவி உயர்வை பெற முடியாமல் போனதால் நியாயமான தீர்வை பெற்றுத் தருமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் ஏற்புடைய பரீட்சையில் தோற்றி பதவி உயர்வு வழங்கப்பட்ட இதர வேட்பாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மனுதாரருக்கும் முன் திகதியிட்டு பதவி உயர்வு வழங்குமாறு குழு வழங்கிய சிபார்சுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(31) திரு டீ.டீ விஜேசேன.**

**இல 83/ஏ, பமுனுகம, அலுபோமுல்ல**

***சீஓஎம்/பீபீ/2010/469***

பண்டாரகம பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் சேவையாற்றியுள்ள மனுதாரருக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் செலுத்தப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்ட நிலுவைச் சம்பளம் மற்றும் இழப்பீட்டுத் தொகையை அவருடைய கூட்டுறவு சங்கம் செலுத்த மறுத்துள்ள காரணத்தினால் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் உத்தரவுக்கமைய கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளம் மற்றும் இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரருக்கு ஏற்புடைய கொடுப்பனவை வழங்குமாறு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்துக்கமைய செயற்படுவதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்ததற்கமைய மனுதாரருக்கு முழுத் தொகையும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**(32) திரு கே.எச். நிஹால்**

**பத்திரகொட, கனேகொட, அக்மீமன**

***சீஓஎம்/பீபீ/2011/491***

மனுதாரர் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சுமார் 17 ஆண்டுகள் அமைய அடிப்படையில் பணியாற்றிக்கொண்டிருப்பதாகவும் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு தனது சேவையை நிரந்தரமாக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மனுதாரரும் பங்கேற்ற நிலையில் முதற் தடவை விசாரணையின் போது குழு மனுதாரரை சேவையில் நிரந்தரமாக்குமாறு உத்தியோகத்தரர்களை அறிவுறுத்தியதன் பேரில் மனுதாரரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

**(33) திருமதி ஈ.எம் சந்தியா**

**48, இந்திகாலந்த உடவத்தகொட வீதி, களுத்துறை**

***சீஓஎம்/பீபீ/2012/1028***

குடித்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மனுதாரர் பிரசவ லீவு பெற்றிருந்த காலப்பகுதியில் அவருடைய சேவை நிறுத்தப்பட்டுள்ளதோடு அவர் சமர்ப்பித்திருந்த மேன்முறையீட்டுக்கமைய மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட போதிலும் தனது முன்னைய சேவைக்காலம் கவனத்தில் எடுக்கப்படாது நிரந்தரமாக்கப்பட்டதால் நேர்ந்துள்ள அநீதிக்காக நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

குழுவினால் மனு விசாரிக்கப்பட்டு எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய மனுதாரரின் நியமனம் முற்திகதியிடப்பட்டு அன்றைய தினத்திலிருந்து சம்பள ஏற்றங்கள் நிலுவைச் சம்பளமின்றி உரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஏற்புடைய சம்பள படிமுறையில் வைக்கப்பட்டுள்ளது.

**(34) திரு எம். ரீ. ஏ. மன்சூர்**

**277/ஏ, பிரதான வீதி, எஹலியகொட**

***சீஓஎம்/பீபீ/2011/677***

துணை ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த மனுதாரருக்கு ஏற்பட்ட மன நோய் காரணமாக சேவைக்கு சமுகமளிக்க முடியாமல் போயுள்ளதோடு தனது 18 ஆண்டு கால சேவையை கருத்தில் கொண்டு ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரருக்கு பதவி விட்டு நீங்கியதான உத்தரவு பிறப்பிக்கப்படாத காரணத்தினால் தாபனக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்காமையை மனுதாரருக்கு நிவாரணமளிப்பதற்கு வாய்ப்பாக கருதி ஓய்வூதியத்தை வழங்குமாறு குழு மேற்கொண்ட விதப்புரைக்கமைய மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(35) திரு வீ சுந்தரமூர்த்தி**

**79, ரின்ரட்ன் வே, ஹரோ, மிட்ல்செக்ஸ், HA2 ORZ, லண்டன், ஐக்கிய இராச்சியம்**

***சீஓஎம்/பீபீ/2011/800***

மக்கள் வங்கியில் கிளை முகாமையாளராக பணியாற்றியுள்ள மனுதாரர் பாதுகாப்பு கருதி சம்பளமில்லா லீவு பெற்று வெளிநாடு சென்றுள்ளதோடு ஓய்வளிக்குமாறு கோரப்பட்டாலும் அதற்கு பதில் கிடைக்காததால் ஓய்வூதியத்தை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

மனுதாரருக்கு பதவி விட்டு நீங்கியதான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் ஓய்வூதிய உரித்து அளிக்க முடியாதென்ற போதிலும் பொது மனுக்குழுவிற்கு மதிப்பளிக்கும் வகையில் மாற்று நிவாரணமாக ரூ 750,000/- தொகையை மனுதாரருக்கு செலுத்துவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

**(36) திரு எஸ் டபி ஏ கருணாசிறி**

**தல்பாவில, கெக்கணதுர**

***சீஓஎம்/பீபீ/2011/887***

மனுதாரர் முகாமைத்துவச் சேவையின் உயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து உள்ளதோடு பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் தனக்கு பதவி உயர்வு அளிக்கப்படாததால் நியாயமான தீர்வொன்றை பெற்றுத் தருமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இம் மனு தொடர்பாக அமைச்சிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதோடு கருணை அடிப்படையில் தனக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

**(37) திரு. எம். ஏ. ஜயரத்ன**

**67/2, தியகம, கிரிவத்துடுவ**

***சீஓஎம்/பீபீ/2012/1254***

இலங்கை மின்சார சபையில் சேவையாற்றியுள்ள மனுதாரர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதோடு நீதிமன்ற தீர்ப்புக்கமைய சேவை முறிவின்றி மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ள போதிலும் நீதிமன்ற தீர்ப்புக்கமைய தனக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் மேற்படி கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுக்குழுவினால் மேற்படி மனு விசாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சிபார்சின் பிரகாரம் நீதிமன்ற தீர்ப்புக்கமைய மனுதாரருக்கு அவருக்குரிய சகல கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

**(38) திரு. ஜே.எம்.பீ. பண்டார**

**"சங்க" ஹெட்டிஹெரலியகயவத்த, பல்லேபேருவ, ஹீல்ஒய, பண்டாரவளை**

***சீஓஎம்/பீபீ/2012/1258***

அதிபர் சேவையின் 2-1 தர உத்தியோகத்தரான மனுதாரர் 27 ஆண்டு கால சேவைக்காலத்துடன் அதிபர் I தரத்துக்கு நியமனம் பெறுவதற்கு தகைமைகளை பெற்றுள்ள போதிலும் தனக்கு அப் பதவி வழங்கப்படாததால் மேற்படி பதவி உயர்வை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சிடமிருந்து அறிக்கை கோரப்பட்ட போது மனுதாரர் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

**(39) திரு எம். டயிள்யு. சரணபால**

**20/3, பீரிஸ் மாவத்தை, மொரகஸ்முல்ல, இராஜகிரிய**

***சீஓஎம்/பீபீ/2013/1909***

58 வயதுடைய மனுதாரர் விவாகப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த அதேவேளை, மேற்படி பதவிக்கான தகைமையாக 60 வயதுக்கு குறைவாக இருக்க வேண்டுமென்பதால் தனது வயது 60 வயதுக்கு அண்மித்ததாக இருந்ததால் தனக்கு மேற்படி நியமனம் வழங்கப்படாததால் ஏற்புடைய பதவியை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்

இது தொடர்பாக பொது மனுக்குழு பொது நிருவாக அமைச்சிடம் அறிக்கை கோரிய போது மேற்படி நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளதோடு தனக்கு பதவி கிடைக்கப்பெற்றுள்ளதாக மனுதாரரும் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

**(40) செல்வி யூ.ஜீ.எல்.ரீ. நிரோஷனி**

**கந்தவத்தை, கரந்தன, இரத்தினபுரி**

***சீஓஎம்/பீபீ/2012/1049***

தகைமைகளின் அடிப்படையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நலன்புரி உத்தியோகத்தர் (I தர - அமைய) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள மனுதாரரை பதவியை நிரந்தரமாக்குவதற்கு உயரம் 1 1/2 அங்குலம் குறைவாக உள்ளதென குறிப்பிட்டு தான் நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், அது இப் பதவிக்கு ஏற்புடையதில்லை என்பதால் பதவியை நிரந்தரமாக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவை பத்திரமொன்றின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்று மனுதாரரின் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மனுக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரரின் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

**(41) திருமதி கே.ஆர். நிமலாவத்தி**

**நானவல, கோவின்ன**

***சீஓஎம்/பீபீ/2013/1946***

குடும்ப சுகாதார உத்தியோகத்தராக 15ஆண்டுகள் சேவையாற்றியுள்ள தான் பணி இடை நிறுத்தத்துக்குள்ளாக்கப்பட்டதாகவும், அச் சந்தர்ப்பத்தில் தனது நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் தன்னை மீள சேவையில் அமர்த்துமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதோடு மனுதாரருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று உத்தரவின் பிரகாரம் 04 நிபந்தனைகளுடன் அவர் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

**(42) திரு. சம்மி மனோஜ் டீ சில்வா**

**கட்டுகுகுருந்துகஹலந்த, பயாகல**

***சீஓஎம்/பீபீ/2012/1441***

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் ஊழியரான மனுதாரர் கடமை நேரத்தின் போது ஏற்பட்ட வாகன விபத்தொன்றினால் அங்கவீனராகியுள்ளதோடு தன்னை அமைய உத்தியோகத்தராக கருதி சம்பளம் அல்லது இழப்பீடு வழங்கப்படாததால் நிவாரணமளிக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

குழுவினால் விசாரிக்கப்பட்டதை தொடர்ந்து முழு அளவில் அங்கவீனராக உள்ள மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகை மற்றும் ஓய்வூதியத்தை வழங்குமாறு செய்யப்பட்ட சிபார்சுக்கமைய இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதோடு ஓய்வூதிய உரித்து தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(43) என். டீ. ஸ்வர்ணமாலி விஜேசூரிய**

**பின்னகொல்லவத்த, வெலிகொடபிட்டிய, பொல்கஹவல**

***சீஓஎம்/பீபீ/2013/1935***

துப்புரவேற்பாட்டு தொழிலாளியாக பணியாற்றியுள்ள மனுதாரர் கடமையின் போது ஏற்பட்ட சம்பவமொன்றினால் நோயுற்று மருத்துவனையில் தங்கி சிகிச்சை பெற்றதால் கடமைக்கு சமுகமளிக்க முடியாமல் போயுள்ளதோடு தொழிலின் பொறுப்பு மற்றும் பெறுமதி தொடர்பாக தான் தவறு இழைத்துவிட்டதை ஏற்றுக்கொள்வதால் தன்னை மீள சேவையில் அமர்த்துமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரருக்கு ஏற்பட்ட சிரமத்தை கருணை அடிப்படையில் அணுகி புதிய ஊழியராக நியமனம் வழங்குமாறு குழுவினால் செய்யப்பட்ட சிபார்சுக்கமைய இவர் கொழும்பு சொய்சா மகளிர் மருத்துவமனையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்

**(44) திரு. தனபால விஜயஹேவா**

**தினுஜய பிசிங் கம்பனி, இல 12, பாசல்வத்த, குருபாவில, வெலிகம**

***சீஓஎம்/பீபீ/2014/2051***

மீனவரான மனுதாரரின் பன்நாட்களம் அழிந்து விட்டதாகவும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்யப்பட்டுள்ள மேற்படி படகுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குதல் நிராகரிக்கப்பட்டதால் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரருக்கு உண்மையிலேயே பாதிப்பேற்பட்டுள்ளதாக தீர்மானித்த குழு இவருடைய படகுக்கு காப்புறுதி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென்ற சிபார்சுக்கமைய மனுதாரருக்கு ரூபா 33,10,000.00தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(45) செல்வி ஏ.பீ ஹர்ஷி தனுஜா**

**இல. 294, அக்போபுர, கந்தளாய்**

***சீஓஎம்/பீபீ/2011/432***

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் போது செல்லுபடியாக வேண்டிய 03 ஆண்டு தொடர்ச்சியான சேவைக்காலத்தை கொண்டிராததன் பேரில் பதவி நிரந்தரமாக்கப்படாத காரணத்தினால் தனது பதவியை நிரந்தரமாக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனுவை அவதானித்த குழு மனுதாரருக்கு நிரந்தர ஆசிரியர் பதவி வழங்க முடியாத காரணத்தினால் கல்விசாரா பணியாட்டொகுதியில் நியமனமொன்றை வழங்குமாறு கௌரவ கல்வி அமைச்சரிடம் கோரப்பட்டதோடு அதற்கு பதலளிக்கும் வகையில் மனுதாரருக்கு பாடசாலை அலுவலக உதவியாளர் நியமனமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(46) திரு பீ.கே குணரத்ன**

**"சந்தனி", நான்னபுராவ, பிபிலே**

***சீஓஎம்/பீபீ/2010/121***

மனுதாரர் மொனராகல டிப்போவில் சாரதியாக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது பிறிதொரு சாரதியின் தவறால் சேவை நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற நேர்ந்ததாகவும், அதற்கு நிறுவனத்திடமிருந்து எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை எனவும், அதற்கிடையே மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் தனது சேவை இழக்கச் செய்யப்பட்டுள்ளதோடு அங்கவீனராக உள்ள தனக்கு நிலுவைச் சம்பளம் மற்றும் உடல் ரீதியாக ஏற்பட்ட இழப்புக்கு மூன்று இலட்ச ரூபாய் இழப்பீடும் வழங்கப்பட வேண்டுமென கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

குழுவின் தீர்மானத்துக்கமைய மனுதாரருக்கு விபத்து இழப்பீட்டுத் தொகையாக ரூபா 250,000/- தொகையை தலா ரூபா 50,000/- வீதம் ஐந்து தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு இலங்கைப் போக்குவரத்து சபை இணங்கி அதன் பிரகாரம் (4) நான்கு தவணைகள் செலுத்தப்பட்டு விட்டதாகவும், இறுதி தவணையையும் செலுத்தி முடிப்பதாகவும் உத்தியோகத்தர்கள் குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

**(47) திரு என்.ஏ. பெரேரா**

**186 டீ, விவசாய குடியேற்றம், வத்துபிட்டிவல**

***சீஓஎம்/பீபீ/2011/921***

வத்துபிட்டிவெல ஆதார வைத்தியசாலையில் 1974ஆம் ஆண்டு முதல் அமைய தொழிலாளியாக மனுதாரர் சேவையாற்றிய போதிலும் சேவை நிரந்தரம் செய்யப்பட்ட 1988ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையில் மாத்திரம் சேவையாற்றியதாகக் கருதி ஓய்வூதியம் கணக்கிடப்பட்டுள்ளமையால், மிகவும் குறைந்த ஓய்வூதியத்தைப் பெறுவதன் காரணமாக, அதனை திருத்தி, உண்மையான ஓய்வூதியத்தை தயார் செய்து வழங்குமாறு கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைய சேவைக் காலத்தில் 2/3 ஐ ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்காக கருத்தில் கொண்டு திருத்தி, மாற்றப்பட்ட பணிக்கொடை மற்றும் திருத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**(48) திரு. எச்.எல். விரன்ஜித் லசந்த**

**" சமன் செவன" கருவலகஸ் வீதி, வல்கம, மாத்தறை**

***சீஓஎம்/பீபீ/2011/1101***

வெளிக்கள செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் ஒரு முறையியல் காணப்பட்டமையால், குறித்த பிரிவிலிருந்து மனுதாரருக்கும் பல்கலைக்கழக பாடநெறியொன்றில் சேர்வதற்கான இயலுமை காணப்பட்டபோதிலும், வெளிக்கள செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெற வேண்டிய புள்ளிகள் கிடைக்கப்பெறாமையால் தமக்கு அநீதி நேர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டு மனுதாரர் மனுவினை முன்வைத்துள்ளார்.

மனுதாரர் 2010/2011 கல்வியாண்டுக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பாடநெறிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**(49) திரு.எம்.டீ. நிவ்டன் பெரேரா**

**கட்டுதெனிய, போபிட்டிய**

***சீஓஎம் /பீபீ/2012/1432***

பன்னல, கட்டுதெனிய, முருகம்பல தோட்டத்தில் "நேம்" தனியார் கம்பனியினால் நடத்திச் செல்லப்படும் கற்குழி காரணமாக பிரதேசவாசிகளின் சொத்துக்கள் மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, குறித்த கருத்திட்டத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பிலான அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், மனுதாரர் உள்ளிட்ட தரப்பினர் தாக்கல் செய்த வழக்கில், கருங்கல் உடைப்பதை நிறுத்துவதற்கும், கருங்கல் அரைத்தல் மற்றும் தார் தயாரிப்பு பணிகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும், இந்நடவடிக்கைகளையும் இரண்டு வார காலத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்வதற்கும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதுடன், கருத்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருந்த உரிமப் பத்திரத்தின் காலம் முதிர்வடைந்திருந்தமை காரணமாக சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரரை வினவியபோதிலும் பதிலிருக்காததன் காரணமாக, அவர்கள் எதிர்பார்த்தவாறு கருத்திட்டத்தின் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக முடிவு செய்து மனு மீதான அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டன.

**(50) திரு.எச்.வீ. நந்தசிறி**

**தூவகொட, பொரவகம**

***சீஓஎம்/பீபீ/2010/166***

போத்தல மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தில் நிரந்தர தொழிலாளியாக சேவையாற்றியுள்ள மனுதாரர், திருட்டுச் சம்பவமொன்றுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கையில், பதவி விட்டு நீங்கியதாகக் கருதப்பட்டுள்ளமையால், மீள சேவையில் அமர்த்துமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரை மீளசேவையில் அமர்த்துமாறு வழங்கப்பட்டுள்ள குழுவின் தீர்மானத்தை அமுல்படுத்துமாறு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் மனுதாரரை மீளசேவையில் அமர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(51) திரு.ரீ.என்.டீ.எஸ்.வீரக்கொடி**

**இலக்கம் 08, பார்க் வீதி, கொழும்பு -05**

***சீஓஎம்/பீபீ/2013/1850***

தமது முச்சக்கர வண்டிக்கான கள்வர் காப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டிருக்கையில் தமக்கு உரித்தான காப்புறுதி உரிமையை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்காமையால் காப்புறுதிப் பணத்தொகை, நஷ்டஈட்டு உரிமை மற்றும் ஏனைய சலுகைகளை வழங்குமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவினை குழு இறுதியாக விசாரணை செய்தபோது மனுதாரரிடம் வாகனம் காணப்பட்டமையால், அதனை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு சட்டரீதியாக கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மனுதாரருக்கு ஏற்பட்ட நட்டமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ரூ.125,000.00 பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டது.

**(52) திரு.ஜே.எச்.சுமனசிறி**

**" சிறிசந்த" தலல்ல -தெற்கு**

***சீஓஎம்/பீபீ/2011/1013***

திறமை மற்றும் மூப்புரிமையைக் கருத்தில் கொண்டு அதிபர் சேவையில் வகுப்பு 1இற்கு பதவியுயர்த்துவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தபோதிலும், தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தபோதிலும் பதவியுயர்வினை வழங்காமையால் அதனைப் பெற்றுத்தருமாறு கோரி மனுவை முன்வைத்துள்ளார்.

வெற்றிடங்கள் காணப்படுவதை அவதானித்த குழுவானது, மனுதாரருக்கு பதவியுயர்வு வழங்குமாறு விதப்புரை செய்துள்ளதுடன், இதற்கமைய அவருக்கு அதிபர் சேவையில் வகுப்பு 1இற்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(53) திரு.ஆர்.ஏ.ரீ. ஹரிஸ்சந்ர**

**பொலிஸ் சாரதிப் பாடசாலை, இலங்கை பொலிஸ் கல்லூரி, களுத்துறை**

***சீஓஎம்/பீபீ/2014/2133***

இலங்கை பொலிஸ் கல்லூரியின் சாரதி பாடசாலையில் இணைந்து கடமையாற்றும் உபபொலிஸ் கான்ஸ்டபிளான மனுதாரர் தற்போது வலது குறைந்த நிலையில் காணப்படுவதுடன், 2000ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் சம்பள ஏற்றமொன்று கணக்கிடப்படாமையால் தமக்கு அநீதி நேர்ந்துள்ளதாக குறிப்பிட்டு தமது சம்பள ஏற்றத்தை தயார்செய்து தருமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பில் சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மனுதாரரது சம்பள ஏற்றங்களைத் தயார் செய்து நிலுவைப் பணத்துடன் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(54) திரு.கே.சீ. மாத்தறஆரச்சி**

**கொளவத்த, வேயன்கொடை**

***சீஓஎம் /பீபீ/2013/1630***

மின் அதிகாரியாக பணியாற்றிய மனுதாரரது சேவை தான்தோன்றித்தனமாக நிறுத்தப்பட்டமையால், சேவையை மீண்டும் பெற்றுத்தருமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குழு வழங்கிய விதப்புரைகளின் பிரகாரம் மனுதாரர் புதிய ஒரு ஊழியராக மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

**(55) திருமதி.பீ.வை.என். பெரேரா**

**இலக்கம் 1508, கொட்டாவ, பன்னிபிட்டிய**

***சீஓஎம்/பீபீ/2014/2204***

ரிஜ்வே சீமாட்டி அம்மையார் சிறுவர் வைத்தியசாலையில் தாதியாக பணியாற்றிய மனுதாரர், மகப்பேற்றின் பின்னர் தமக்கு முகம் கொடுக்க நேர்ந்த பல்வேறுபட்ட பிரச்சினைகள் காரணமாக சேவைக்கு சமூகமளிக்க இயலாதிருக்கையில், பதவி விட்டு நீங்கியதாக கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, மீள சேவையில் அமர்த்துமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

னுதாரர் புதிய ஒரு நியமனதாரியாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குழுவுக்கு தெரிவித்துள்ளது.

**(56) திரு. ஏ.என். ருவன்சிறி த அல்விஸ்**

**இலக்கம் 658/15, தன்னேவத்த வீதி, பாம்காடின், இரத்தினபுரி**

***சீஓஎம்/பீபீ/2013/1683***

மெதகமை தொழிநுட்பக் கல்லூரியில் காவலாளர் சேவையில் ஈடுபட்டிருக்கையில் தமக்கு கிடைத்த இடமாற்றல் காரணமாக பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்ததாகக் குறிப்பிட்டு, அநீதியான இடமாற்றலை நிறுத்தி, தமக்கு கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகளை வழங்கி தமக்கு வசதியான ஒரு இடத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப மனுதாரருக்கு வசதியான சேவை நிலையமொன்றை வழங்குமாறு குழுவில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மனுதாரருக்கு வரக்காபொல தொழிநுட்பக் கல்லூரிக்கு இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது.

**(57) திருமதி.பீ.எம்.வீ.எல். சமுத்ரா தேவி பண்டாரநாயக்க**

**பிரதேச செயலகம், மாத்தளை**

***சீஓஎம்/பீபீ/2013/1618***

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தரான தமக்கு எந்தவித காரணமுமின்றி குற்றச்சாட்டுப் பத்திரிகையொன்றை வழங்கி, ஒழுங்காற்று கட்டளையொன்றை பிறப்பித்ததாகவும், தாம் முகம் கொடுத்திருந்த அசௌகரியமான நிலமை காரணமாக சேவைக்கு சமூகமளிக்காதிருக்கையில் தாம் பதவி விட்டு நீங்கியதாகக் கருதியுள்ளமையால், மீள சேவையைப் பெற்றுத்தருமாறு கோரி மனுவினைச் சமர்ப்பித்துள்ளார்.

இது குறித்து கருணை அடிப்படையில் நோக்கிய குழுவானது, மனுதாரர் மேன்முறையீட்டை முன்வைப்பாரெனில், அவருக்கு நிவாரணம் வழங்குமாறு கோரியதையடுத்து, மனுதாரர் பதவி விட்டு நீங்கிச் சென்ற நாள் முதல் மீள சேவைக்கு சமூகமளிக்கும் நாள் வரையிலான சேவையில் காணப்படாத காலப்பகுதியை சம்பளமின்றிய லீவாகக் கருதி மனுதார் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

**(58) திரு.டீ.ரீ. சுராஜ் குமார**

**"சமீ", குணசேன த சில்வா மாவத்தை, திபுள்தூவ, குலீகொட**

***சீஓஎம்/பீபீ/2011/425***

குலீகொட தபால் அலுவலகத்தில் அமய ஊழியராக பணியாற்றியுள்ள மனுதாரர், பதிலீட்டு தபால் பணியாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தயாராக இருந்தபோதிலும், தமது பெயரில் காணப்பட்ட குறைபாடு காரணமாக தோற்றுவதற்கு முடியாமற்போனமையால், அமய தபால் பணியாளராக பணியாற்றும் தமக்கு பதிலீட்டு தபால் பணியாளர் பதவியைப் பெற்றுத்தருமாறு கோரி மனுவியைச் சமர்ப்பித்துள்ளார்.

இதன் பிரகாரம் மனுதாரர் கோரிய பதிவுப் பதிலீட்டை அவருக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(59) திரு.கே.சிறிபால**

**இகல மொரவத்தை, ருவன்வெல்ல**

***சீஓஎம்/பீபீ/2012/1235***

தமது 20 வருட சேவைக் காலத்துக்குக்கு உரித்தான ரூ.172,500/= பணிக்கொடையில் தமக்கு இதுவரையில் ரூ.120,542.50 மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் மனுதாரர், இதன் மீதிப் பணம் மற்றும் மிகைவட்டியை தமக்கு வழங்குமாறு கோரி மனுவினை முன்வைத்துள்ளார்.

போக்குவரத்துச் சபைப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் மனுதாரருக்கு உரித்தான பணிக்கொடையில் மீதிப் பணம் மற்றும் மிகைவட்டி செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு இது தொடர்பிலான ஆவணங்களை குழுவுக்கு சமர்ப்பித்தனர்.

**(60) திரு.ஆர்.எம்.நிமல் கருணாதிலக்க**

**இலக்கம் 122, சிங்ஹகம, அளுத்ஓய, ஹிங்குரக்கொட**

***சீஓஎம்/பீபீ/2010/351***

சுகவீனமுற்றிருந்த தமக்கு பதவி விட்டு நீங்கியதாக அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தாமும் தமது குடும்பத்தினரும் உள்ளாகியுள்ள துர்ப்பாக்கிய நிலையைக் கருத்தில் கொண்டு மீள சேவையை வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை முன்வைத்துள்ளார்.

மனுதாரரின் முன்னைய சேவைக் காலம் திருப்திகரமாக காணப்படாதபோதிலும், கருணை அடிப்படையில் அவருக்கு பதிலீட்டு நியமனமொன்றை வழங்குவதற்கு அமைச்சு உடன்பட்டுள்ளதுடன், குறித்த நியமனத்தை வழங்குமாறு குழு அறிவித்துள்ளதுடன், இதன் பிரகாரம் மனுதாரருக்கு பதிலீட்டு ஊழியர் நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(61) திரு.எஸ்.கே. பிறேமரத்ன**

**இலக்கம் 02, வெளிச்சுற்றுவட்டப் பாதை, கிரிவெவக்கு அண்மையில், புத்தளம்**

***சீஓஎம்/பீபீ/2012/1139***

தெளித்தல் உபகரண இயக்குனரர் (பதிலீட்டு அடிப்படையில்) பதவியிலான தமது நியமனம் நிரந்தரம் செய்யப்பட்டதன் பின்னர் வெளிநாட்டுக்கு பயணம் செய்ததாகவும், மீண்டும் வருகையில் தமது பதவியையும் தாம் சேர்த்த பணத்தையும் இழந்தமையால், சேவையில் இராத காலப்பகுதியை சம்பளமற்ற லீவாகக் கருதி மீள சேவையை வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவினைச் சமர்ப்பித்துள்ளார்.

வடமேல் ஆளுநர், மனுதாரரை புதிய ஒரு ஊழியராக சேவையில் அமர்த்தியுள்ளதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்ததுடன், இதன் பிரகாரம் மனுதாரின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டு அவருக்கு நிவாரணம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**(62) திருமதி. தந்திரிகே பிறேமவதி ருபேரு**

**சந்திரலேக்கா, ஜம்புரலிய, மடபாத்த**

***சீஓஎம் /பீபீ/2011/604***

தமது கணவர் திட்டமிடல் அமைச்சின் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றியதாகவும் அமைச்சில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து பக்கச்சார்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தமது கணவரது சேவை முடிவுறுத்தப்பட்டதாகவும் ()குறிப்பிட்டு தனது கணவர் காலமடைந்துள்ளமையால், தமக்கு விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மனுதாரருக்கு உரித்தான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தை கணக்கிட்டு, கொடுப்பனவுகளுக்காக கஸ்பேவா பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக ஓய்வூதிய பணிப்பாளர் குழுவுக்கு அறிவித்தார்.

**(63) திருமதி. யூ. வஜிராணி வெத்தசிங்க**

**இலக்கம் 05, சுதந்திர மாவத்தை 300 குடியிருப்பு, பதவி பராக்கிரமபுர**

***சீஓம்எம்/பீபீ/2013/1653***

நானாவித சேவைகள் உதவியாளராக சுமார் 8 வருடங்கள் இலங்கை வங்கியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய தமக்கு அக்காலப்பகுதியில் நாளாந்தம் ரூ.250/= பணத்தொகை மாத்திரம் செலுத்தப்பட்டதாகவும், 2010ஆம் ஆண்டில் அமய மற்றும் ஒப்பந்த ஊழியர்களது சேவை காரணமின்றி இடைநிறுத்தப்படுகையில் தமது சேவையும் இடைநிறுத்தப்பட்டதாக் குறிப்பிடும் மனுதாரர் தம்மை மீள சேவையில் அமர்த்தி தகுந்த பதவியில் நியமனத்தை நிரந்தரம் செய்யுமாறு கோரி மனுவினைச் சமர்ப்பித்துள்ளார்.

இதனை விசாரித்த குழுவானது இது தொடர்பிலான அறிக்கையினைக் கோருகையில், மனுதாரர் இலங்கை வங்கியின் பதவிநிலை உதவியாளராக நிரந்தர சேவையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார் என்பதை நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (நிருவாக மற்றும் மனித வள அபிவிருத்தி) அறிவித்தார்.

**(64) திரு.ஜே.எம். ஜயசுந்தர**

**இலக்கம் 453/5, மாகொல தெற்கு, மாகொல**

***சீஓஎம் /பீபீ/ 2010/110***

தமக்கான பதவியுயர்வுகள் உரிய திகதியில் கிடைக்கப்பெறவில்லை எனக் குறிப்பிடும் மனுதாரர், பதவியுயர்வுகளை உரிய திகதியில் வழங்குமாறும், தமது சேவை நீடிப்பு முடிவடையும் திகதியில் தம்மை ஓய்வில் அனுப்புமாறும், தமக்கு நிலுவைச் சம்பளம் வழங்குமாறும் கோரி மனுவினை முன்வைத்துள்ளார்.

முதலாம் தடவை மனுவை விசாரித்து, உகந்த ஒரு தீர்ப்பினை வழங்கும் பொருட்டு தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதுடன், அவரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின் பிரகாரம் பிணக்குத் தீர்வுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், பிணக்குத் தீர்வில் வழங்கப்பட்ட ரூ.250,000/= பணத்தொகைக்கு இருசாராரும் உடன்பட்டுள்ளதுடன், குறித்த பணத்தொகையை மனுதாரருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(65) திருமதி.எம். க்ளேரா பெரேரா**

**இலக்கம் 14, வில்பிறட் மாவத்தை, சிங்காரமுள்ள, களனி**

***சீஓஎம்/பீபீ/2013/1736***

தாம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்த பணத்துக்கான வட்டியை மாத்திரம் அடிக்கடி பெற்றுக்கொண்டதாகவும், வைப்புப் பணத்தை பெற்றுக்கொள்ளச் சென்றபோது அதனை அடிக்கடி பெற்றுக்கொண்டதாக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றை நிராகரித்து தமது வைப்பு பணத்தை பெற்றுக்கொடுக்குமாறு மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மனுதாரரினால் அவ்வப்போது பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்ற உத்தியோகத்தர்களின் கூற்றை உறுதி செய்வதற்கு ஆவணச் சாட்சியங்களை சமர்ப்பிக்க அவர்களால் முடியாமையினால் மனுதாரருக்கு கருணை அடிப்படையில் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற குழு விதப்புரைக்கு ஏற்ப இவருக்கு ரூ.100,000/- தொகையை செலுவதற்கு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(66) திருமதி.கே.எம்.ஐ.ஷிரோமனீ**

**"இந்துனில", ரத்மலே, மாத்தறை**

***சீஓஎம்/பீபீ/2013/1814***

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் 11 ஆண்டுகாலம் சேவையாற்றியுள்ள மனுதாரர் செய்யாத தவறுக்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டதுடன் பின்னர் தமது குற்றமற்ற தன்மையயின் அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டதாகவும் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்குரிய சம்பளம் கிடைக்கவில்லையெனவும் விண்ணப்பித்த எந்தவித பதவியுர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லையெனவும் கூறி கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுக்குமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குழுவினால் இம்மனு விசாரிக்கப்பட்டு மனுதாரருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டியிருப்பதால் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்குரிய சகல உரித்துக்களையும், சம்பளம் மற்றும் சிறப்புரிமைகளையும் இவருக்கு பெற்றுக்கொடுக்குமாறு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு குழு வழங்கிய அறிவுரைக்கு ஏற்ப வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு ஏற்ப செலுத்தப்படாத சம்பளத்தை செலுத்தவும் இக்காலத்திற்குரிய பங்களிப்பு பணத்தை உரிய நிதியத்திற்கு வரவு வைக்கவும் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(67) திரு.எம்.எல்.எஸ்.ஜினதாச**

**கொஸ்ஹேன, படல்கம**

***சீஓஎம்/பீபீ/2013/1656***

பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக சேவையாற்றிய மனுதாரரை பின்னர் வடமேல்மாகாண சபைக்கு இணைத்துள்ளதுடன் இவரது சேவை இலங்கை தொழில்நுட்ப சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்த போது விஷேட தரத்தில் நியமிக்க வேண்டியிருந்தமையால் விஷேட தரம் மற்றும் குறிப்பிட்ட சம்பள அளவீட்டை பெற்றுக்கொடுக்குமாறு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனுவை சமர்ப்பித்ததன் பெறுபேறாக தாம் எதிர்பார்க்கும் நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு வடமேல் மாகாண சபையின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதென அறிவித்துள்ளதுடன் மனுதாரர் குழுவிற்கும் அறிவித்துள்ளார்.

**(68) திருமதி.ஜீ.டப்ளியு.ஏ. சுஜாதா விஜேசிங்க**

**இலக்கம் 16, ருவன்பாய, கித்துலாவ, களுத்துறை தெற்கு**

***சீஓஎம்/பீபீ/2011/943***

1979 ஆண்டில் துணை ஆசிரியையாக சேவையில் இணைந்துள்ளதுடன் மனுதாரர் 2008.01.01 திகதி தொடக்கம் அதிபர் 2-1 தரத்திற்கு பதவியுயர்வு பெற்றுள்ளதாகவும் தாம் 2002 ஆண்டில் பெற்றுக்கொண்ட ஆசிரியர் சேவையில் 1 தர பதவியுயர்வு 2005/04 சுற்றறிக்கைக்கு ஏற்ப சரியானதல்ல எனவும் தமது பதவியுயர்வுக்குரிய சம்பளம் இற்றைவரை பெற்றுக்கொடுக்கப்படாமையால் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி தமது பதவியுயர்விற்குரிய சம்பளத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரி மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுவை விசாரணை செய்த போது மனுதாரரின் சம்பளத்தை குறைப்பதற்கு அடிப்படையாக இருந்திருப்பது ஆசிரியர் சேவையின் எஞ்சிய காலத்தை அதிபர் சேவையில் இணைத்துக்கொள்ள முடியாதென்ற காரணமென உத்தியோகத்தர்கள் கூறிய போதிலும், இது நியாயமான வாதமல்லவென அவதானித்த குழு மனுதாரரின் சம்பளத்தை சரி செய்து நிலுவை சம்பளத்துடன் செலுத்துமாறு குறித்த தரப்பினருக்கு கொடுத்த அறிவுரைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(69) திருமதி.ஷீலா ரம்முனி**

**இலக்கம் 266 டீ, திப்பெத்த, பானந்துறை**

***சீஓஎம்/பீபீ/2012/1194***

காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட எழுது வினைஞராக சேவையாற்றியுள்ள மனுதாரர் அங்கீகரிக்கப்பட்ட லீவின் கீழ் வெளிநாடு சென்றுள்ளதுடன் அப்போது இடம்பெற்ற வளைகுடா யுத்தம் காரணமாக சேவைக்கு சமுகமளிக்க முடியாமை காரணத்தால் யுத்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்த போதிலும், தாம் பதவி விட்டு நீங்கிச் சென்றதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறி, 19 ஆண்டுகால சேவை காலத்தை கருத்திற்கொண்டு ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட காலத்தில் மீண்டும் இலங்கைக்கு வருகை தர முடியாது போயுள்ளமையானது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இடம்பெற்ற சம்பவத்தால் என்பதால் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைக்கு ஏற்ப பகிரங்க சேவைகள் ஆணைக்குழு மனுதாரருக்கு விடுக்கப்பட்டுள்ள பதவி விட்டு நீங்கியமைக்கான அறிவிப்பை நீக்கி 4 நிபந்தனைக்களுக்கு உட்பட்டவாறு இவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(70) திருமதி.வை.ஆர். ஜீவனீ வாசனா**

**"சமன் செவன", டப்ளியு 4 பண்ணை, வனாதவில்லுவ, புத்தளம்**

***சீஓஎம்/பீபீ/2012/1190***

1998.09. 23 ஆம் திகதி தொடக்கம் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றிய தாம் 2005 இல் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தேவையான தகைமைகளுடன் தோற்றிய போதிலும் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்படாமையினால் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருந்த தமக்கு அநீதி இழைக்கப்பட்டதுள்ளதென கூறி உதவி ஆசிரியர் நியமனத்தை பெற்றுத்தருமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் தமது சேவைக் காலத்தை உறுதி செய்து சமர்ப்பித்துள்ள ஆவணங்களை கருத்திற்கொண்டு குழு இவ்வாவணங்களின் சரியான தன்மையை சோதித்து மனுதாரருக்கு உதவி ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொடுப்பதற்கு தகைமை பெறுவாராயின் இந்நியமனத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விதப்புரைக்கு ஏற்ப உதவி ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(71) திரு.டப்ளியு. கே. உபாலி குலரத்ன**

**இலக்கம் 03, காஞ்சனாபுரம், குளியாபிட்டி**

***சீஓஎம்/பீபீ/2014/2080***

தமது ஊழியர் சேமலாப நிதி மோசடி செய்யப்பட்டமை/செலுத்த தவறியமை/ உண்மைக்குப் புறம்பான கணப்பீட்டினால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதென கூறி மனுதாரர் மனுவை சமர்ப்பித்திருந்தார்.

மனுவை விசாரித்த போது மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் கூறியவாறு இலங்கை மத்திய வங்கயின் ஊழியர் சேமலாப நிதியத்தினால் தொழில் ஆணையாளர் அனுப்பும் நலன்களை செலுத்த வேண்டுமென்ற தீர்மானக் கடித்தத்தின் படி, குறிப்பிட்ட தகவல் உறுதி செய்யப்பட்ட பின்னர் மனுதாரருக்கு சட்டப்படி உரித்தாக வேண்டிய நலன்கள் அவருக்கு செலுத்தப்பட்டுள்ளன.

**(72) திரு.ஆர்.ஆர்.எஸ். கமகே**

**இலக்கம் 48/1, மண்டாடுவ, வீரகெட்டிய**

***சீஓஎம்/பீபீ/2011/901***

பொலிஸ் சேவையில் கடமையாற்றும் மனுதாரர் பற்றி விசாரிக்கப்பட்டுவந்த வழக்கொன்றின் காரணமாக தமக்கு உரித்தான பதவியுயர்வுகள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், தாம் பகுதியளவு சம்பளத்தின் கீழ் சேவையாற்றியதாகவும் சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்படவில்லை எனவும் ஓய்வு பெற்ற பின்னர் தமக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்த போதும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படவில்லையெனவும் கூறி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

குழு வழங்கிய விதப்புரைக்கு அமைவாக மனுதாரருக்கு குறித்த சம்பள அதிகரிப்புடன் திருத்திய சம்பளத்திற்குரிய நிலுவை சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(73) திரு.எஸ்.டீ. நந்தசேன**

**அடப்பாகொடவத்த, மஹஹேகொட, பூஸ்ஸ**

***சீஓஎம்/பீபீ/2010/246***

மனுதாரருக்கு சொந்தமான காணியின் ஊடாக இவருக்கு சொந்தமான கட்டிடமொன்றையும் உடைத்து தனியார் வீதியொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக கூறி அதனை நிறுத்துமாறு மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரின் காணியின் ஊடாக வீதியொன்றை நிர்மாணிப்பதற்கு உள்ளூர்வாசிகளுக்கு பிரவேசத்திற்கான உரிமை கிடையாதென்பதால் கையகப்படுத்தப்பட்ட காணியை பாராதீனப்படுத்துமாறும், உள்ளூர்வாசிகளுக்கு மாற்று வழியொன்றை 3 மாதங்களுக்குள் விரைவாக உருவாக்கிக்கொடுக்குமாறும் கோரும் குழு விதப்புரைக்கு அமைவாக மனுதாரரின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(74) திரு.எம். பரமேஸ்வரன்**

**இலக்கம் 10, பட்டுகட்டார் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு**

***சீஓஎம்/பீபீ/2012/1109***

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் வடக்கு கிழக்கு கடலோர சமூக அபிவிருத்தி கருத்திட்டத்தின் சேவை ஏற்புடையதாக்கிக்கொள்ளப்படாமையின் காரணமாக விவசாய சேவை III தரத்திற்கான பதவியுயர்வை இழந்தமையால் இதனை பெற்றுக்கொடுக்குமாறு கோரி மனுவை சமரப்பித்துள்ளார்.

இம்மனுவை விசாரித்த குழு மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை அவதானித்த குழு ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு பதவியுயர்வு பெற்றுக்கொடுக்கப்பட்ட திகதி தொடக்கம் பதவியுயர்வை பெற்றுக்கொடுக்குமாறு செய்த விதப்புரையின் படி பதவியுயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(75) திரு.ஆர்.பீ.சந்திரபால**

**அரசாங்க நெல் பண்ணை, அம்பலாந்தொட்ட**

***சீஓஎம்/பீபீ/2011/727***

மனுதாரர் அம்பலாந்தொட்ட அரச நெல் பண்ணையில் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிபப்டையில் பணியாற்றிய தமது சேவை நிரந்தரமாக்கப்படாத போதிலும் 2571 நாட்கள் பணியாற்றிய ஊழியர்களை நிரந்தரமாக்கியுள்ளமையால் தமது சேவையையும் நிரந்தரமாக்குமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி ஆராய்ந்த அமைச்சு குழுவின் விதப்புரையையும் கருத்திற்கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மனுதாரர் சேவையாற்றியுள்ள நாட்களின் வரிசைக்கிரமத்திற்கு ஏற்ப 2719 நாட்கள் சேவையாற்றியுள்ளமையால் தகைமைகளை பூர்த்தி செய்த வேளையில் மனுதாரரின் சேவையை நிரந்தரமாக்குவதாக விடுத்த அறிவித்தலின் படி சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

**(76) திரு. ஈ.ஏ.ஜீ. சரத் பெரேரா**

**இலக்கம் 681/30, கே.ஜே.பீரிஸ் மாவத்தை, கண்டி வீதி, களணி**

***சீஓஎம்/பீபீ/2010/44***

தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர்/ நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக சேவையாற்றும் மனுதாரர் பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்குமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி வழங்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் படி மனுதாரருக்கு மிகை ஊழியர் அடிப்படையில் பிரதி பணிப்பாளர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பதவியை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் மிகை ஊழியர் அடிப்படையில் மனுதாரருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**(77) திரு. டப்ளியு.எச்.பீ.டப்ளியு. வீரசிறி**

**இலக்கம் 135/6, அரலிய மாவத்தை, மெலேகம, வாத்துவ**

***சீஓஎம்/பீபீ/2010/45***

தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர்/ நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக சேவையாற்றும் மனுதாரர் பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்குமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி வழங்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் படி மனுதாரருக்கு மிகை ஊழியர் அடிப்படையில் பிரதி பணிப்பாளர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பதவியை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் மிகை ஊழியர் அடிப்படையில் மனுதாரருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**(78) திருமதி.ஐ.ஏ.எம்.பர்னான்ந்து**

**இலக்கம் 27, பிலீஷியா மாவத்தை, ஹப்புகொட, கந்தான**

***சீஓஎம்/பீபீ/2010/46***

தொகைமதிப்பீட்டு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர்/ நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக சேவையாற்றும் மனுதாரர் பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்குமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி வழங்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் படி மனுதாரருக்கு மிகை ஊழியர் அடிப்படையில் பிரதி பணிப்பாளர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பதவியை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் மிகை ஊழியர் அடிப்படையில் மனுதாரருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**(79) திரு. பீ.எம்.ஆர். பர்னான்ந்து**

**இலக்கம் 291/C, சமகி மாவத்தை, கொஸ்வத்த, தலங்கம**

***சீஓஎம்/பீபீ/2010/47***

தொகைமதிப்பீட்டு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர்/ நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக சேவையாற்றும் மனுதாரர் பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்குமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி வழங்கப்பட்ட குழுவின் தீர்மானத்தின் படி மனுதாரருக்கு மிகை ஊழியர் அடிப்படையில் பிரதி பணிப்பாளர் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பதவியை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் மிகை ஊழியர் அடிப்படையில் மனுதாரருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**(80) திரு. டப்ளியு.வீ.எவ். விஜேவீர**

**இலக்கம் 45, கிராமிய மத்தியநிலையம், மொரகெட்டிய, எம்பிலிபிட்டி**

***சீஓஎம்/பீபீ/2011/639***

மனுதாரரின் ஆற்றுப்படுகை அபிவிருத்திச் சபையில் 22 ஆண்டு கால சேவைக் காலத்தையும், இலங்கை மின்சார சபையின் சேவைக் காலத்தையும் சேர்த்து ஓய்வூதியம் செலுத்துமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இம்மனு குழுவினால் ஆராயப்பட்டுள்ளதுடன் இதன் போது மனுதாரரின் சேவைக் காலங்கள் இரண்டையும் சேர்த்து இவருக்கு ஓய்வூதியத்தை செலுத்துமாறு குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரையின் படி மனுதாரருக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டுள்ளது.

**(81) திரு. லசத் பிரதீப் ஹெட்டிவத்த**

**இலக்கம்394/6, தங்கெதர,காலி**

***சீஓஎம்/பிபி/2011/437***

தீயினால் சேதமடைந்த தனது 40 ஆசனங்களைக் கொண்ட காலி-கொழும்பு சொகுசு வசு வண்டிக்கு பதிலாக 29 ஆசனங்களைக் கொண்ட சொகுசு வசு வண்டியொன்றை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் அனுமதி கோரப்பட்டபோதிலும் அனுமதி வழங்கப்படாத காரணத்தால் 42 ஆசனங்களைக் கொண்ட வசு வண்டியொன்றை காலி-கொழும்பு போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு அனுமதியளிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு புதிய வசு வண்டியொன்றை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் கடந்துள்ளபோதிலும் குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வலுப்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கமைய வசு வண்டிகள் பதிலீடு செய்யப்பட்டுள்ளதுடன் தாமத கட்டணமான தண்டப் பணத்தை 10 தவணைகளில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(82) மேஜர் எஸ்.எஸ்.யு. ஹெட்டிஆரச்சி**

**12 விஜயபா ரெஜிமன்ட், இலக்கம் 05, வெகுணகொட, காலி**

***சீஓஎம்/பிபி/2012/1298***

வலது குறைந்த நிலையிலிருக்கும் இராணுவ உத்தியோகத்தரான தனக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டின் பேரில் வழங்குத் தொடரப்பட்டதால் தனக்குரிய பதவி உயர்வு வழங்கப்படவில்லையெனவும் மருத்துவ சபைக்கு அனுப்பிவைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதால் ஓய்வூதியமும் வழங்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டு, பதவி உயர்வு மற்றும் ஓய்வூதியம் பெற்றுத்தறுமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மனு தொடர்பில் அழைக்கப்பட்ட அமைச்சின் அறிக்கைக்கு அமைய மனுதாரரின் தகாத ஒழுக்காற்று விசாரணை அறிக்கைக்கு ஏற்ப பதவி உயர்வுகளை வழங்க முடியாதுள்ளதாகவும், மனுதாரரை மருத்துவ சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டபின் அதன் சிபாரிசுக்கு அமைய அவருக்கு ஒய்வூதிய உரிமை வழங்கப்படடுள்ளதாகவும் குழு அவதானித்தது.

## 17. நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளரினால் சிபாரிசு செய்யப்பட்டு நிவாரணம் கிடைத்துள்ள மனுக்கள்

**(1) திரு டி.எம். அபேரத்ன**

**கரவிலகெட்டிய, அராவ, பதுளை**

***சீஓஎம்/பிபி/2010/213***

இலங்கை மின்சார சபையினால் ஆந்தாஉல்பத்த – மீகஹகிவுல அதிஉயர் அழுத்த மின் கம்பி இணைப்பு பொருத்தப்பட்டதன் காரணமாக தாம் பயிர் செய்த மிளகுப் பயிர்செய்கைக்கு பாரியளவில் சேதம் ஏற்பட்டதனால் அதற்கு இ.மி.ச.யிடமிருந்து கிடைத்த தொகை போதியதாக இல்லாமையினால் இந்த மனுதாரர் சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கைத் திணைக்களத்திடமிருந்து விலைமதிப்பீடொன்றைப் பெற்றுக் கொண்ட போதிலும், அதனை மின்சார சபை ஏற்றுக் கொள்ளாமை காரணமாக அரசாங்க விலை மதிப்பீட்டாளர் திணக்களத்திடமிருந்தும் விலைமதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதுவும் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக தமது பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்ட இழப்புக்கு நியாயமான நட்டஈட்டைப் பெற்றுத் தருமாறு கோரி மனுதாரர் மேற்படி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து கிடைத்துள்ள சிபாரிசின் அடிப்படையில் ரூபா 36,000 தொகையை மனுதாரருக்குச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(2) திரு ஈ.எம். சந்திரதாச பண்டா**

**டி 20 எல, ஆர்.பீ. 01, ஹிங்குரக்கொடை**

***சீஓஎம்/பிபி/2010/352***

விவசாய அபிவிருத்தி அதிகார சபையில் நிரந்தர சாரதியாக சேவையாற்றிய மனுதாரர் மேற்படி அதிகார சபை மூடப்பட்ட பின்னர் விவசாயத் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார் என்றும், அவ்வாறாயினும் தமது சம்பள ஏற்றம் அல்லது தொழிலின் நிரந்தரத்தன்மை வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு விவசாய திணைக்களத்தின் நிரந்த சாரதி சேவைக்கு இணைப்புச் செய்யுமாறு கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவை நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் ஆற்றுப்படுத்திய பின்னர் கிடைக்கப்பெற்ற சிபாரிசுக்கமைய, கமத்தொழில் அமைச்சின் பதவி செல்லுபடியற்றதானதன் காரணமாக திணைக்களம்சார் சாரதிப் பதவிகள் இரண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மனுதாரருக்கு விவசாயத் திணைக்களம்சார்ந்த சாரதிப் பதவி கிடைத்துள்ளதென்பது அவரிடம் தொலைபேசி மூலம் உறுதி செய்துகொள்ளப்பட்ட பின்னர் மனுதாரருக்கு நிவாரணம் கிடைத்துள்ளதனால் மனுவின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன.

**(3) திரு ஏ.கே.டி.என். சுமனசிங்க**

**இல. 16, கெமுனு மாவத்தை, கனுவன, குருந்துவத்த, ஏக்கல.**

***சீஔஎம்/பிபி/2013/2000***

கொழும்பு மாநகர சபையின் தொழில்நுட்ப சேவை அலுவலர் பதவியில் நிரந்தர ஊழியரான தமது சேவை குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பிக்காது மற்றும் அது பற்றிய விசாரணைகளை நடாத்தாது அநீதியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதனால் சகல கொடுப்பனவுகளுடனும் மீண்டும் சேவைக்கு அமர்த்துமாறு கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவை நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் ஆற்றுப்படுத்திய பின்னர் கிடைக்கப்பெற்ற சிபாரிசுக்கமைய, இது தொடர்பாக 2013.11.04 ஆம் திகதியன்று மனுதாரர் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் என்று தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் குழு வினவிய போது அறிக்கையிட்டுள்ளார்.

## 18. குழுவினால் நிவாரணம் வழங்கப்படாத சில சந்தர்ப்பங்கள்

இக்காலப்பகுதிக்குள் பொதுமனுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான உதாரணங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**(1) தொடர்ச்சியாக சீரற்ற சேவை அறிக்கையைக் கொண்ட மனுதாரரை மீண்டும் சேவைக்கு அமர்த்துமாறு கோரல்**

**திரு. வீ. ரத்னசிறி பெரேரா - *சீஔஎம்/பிபி/2011/649***

மனுதாரரின் சீரற்ற வருகை பற்றிய அறிக்கைக்கு அமைய நன்னடத்தைக் காலம் நீடிக்கப்பட்டிருந்த நிலையில் அடிக்கடி பதவி நீங்கியிருப்பதுடன், ஒன்றுக்கொன்று முரணான காரணங்களைக் குறிப்பிட்டு மீண்டும் சேவையைக் கோரி மேன்முறையீடு செய்துள்ளார் என்பதுடன், மீண்டும் சேவையில் அமர்த்தி மனுதாரருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக குழு இந்த மனுவை நிராகரித்தது.

**(2) நிறுவனத்தில் நிலவுகின்ற சட்ட ரீதியான சட்டகத்திற்கு அமைய நிவாரணம் வழங்க முடியாத சந்தர்ப்பங்கள்**

**திருமதி விமலா குமாரிஹாமி - சீஔம்/பிபி/2012/1123**

மனுதாரரை மின்சார சபைக்கு இணைப்புச் செய்ய முன்னர் தபால் திணைக்களத்தில் பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் உள்ளூராட்சிச் சேவையில் எழுதுவினைஞராக சேவையாற்றியுள்ள போதிலும் இவரை மின்சார சபைக்கு இணைப்புச் செய்யும் போது புதிய ஊழியராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

மின்சார சபையில் 16 வருடமும் 03 மாதங்கள் மாத்திரம் இவர் சேவையாற்றியுள்ளார் என்பதுடன், பாராளுமன்ற சட்டத்தினால் நிருவகிக்கப்படுகின்ற மின்சார சபையின் ஓய்வூதியப் பயன்களைப் பெறுவதற்கு 20 வருட சேவைக் காலம் அவசியமாவதனால் மனுதாரருக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்க குழுவிற்கு ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக மனு நிராகரிக்கப்பட்டது.

**திரு எச்.எம். ராஜா தர்மவீர - சீஔம்/பிபி/2011/560**

மனுதாரர் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நிரந்தர தொழிலாளியாக சேவையாற்றியதுடன், நோய்வாய்ப்பட்டதன் காரணமாக சேவைக்கு அறிக்கையிட முடியாது போனதனால் பதவி நீங்கியதாகக் கருதப்பட்டுள்ளதனால் மீண்டும் சேவை அல்லது ஓய்வூதியம் பெற்றுத் தருமாறு கோருகின்றார்.

1975.02.15 ஆம் திகதி தொழிலாளி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள மனுதாரர் பதவி நீங்கியதாக கருதப்பட்ட திகதிக்கு 10 வருட சேவை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக அவருக்கு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகள் குழுவிற்கு இல்லாமையினால் மனு நிராகரிக்கப்பட்டது.

**(3) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, நிருவாக மேன்முறையீட்டு அதிகாரசபை ஆகிய இரண்டு நிறுவனங்களினாலும் நிராகரிக்கப்பட்டு உத்தேச நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லாமை**

**கலாநிதி டபிள்யு.எல்.டி.எஸ்.ஜி. பெரேரா - சீஔம்/பிபி/2011/775**

ஆசிரியர் கல்வி பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளராக சேவையாற்றியுள்ள மனுதாரர் சேவை நிலையத்திலிருந்து முறையாக விடுவிப்பதற்கான கோரிக்கையைச் சமர்ப்பித்து திறந்த பல்கலைக் கழகத்தில் சேவையாற்றி வந்த போது, பதவி நீங்கியதாகக் கருதி தொழில் இழக்கச் செய்யப்பட்டமையால் நியாயத்தை நிலைநாட்டுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

ஆசிரியர் கல்விச் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முரணாக மனுதாரர் செயற்பட்டுள்ளமை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிவாரணம் வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் இவரின் மேன்முறையீட்டை மேன்முறையீட்டு நிருவாக அதிகார சபை நிராகரித்துள்ளமை, இவர் தாக்கல் செய்துள்ள மனு உச்ச நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளமை ஆகிய விடயங்களைக் கவனத்தில் கொண்ட குழு மேற்படி நிறுவனங்கள் வழங்கியுள்ள தீர்மானத்திற்கு மாற்றமான தீர்மானத்தை மனுதாரருக்கு இந்தக் குழுவினால் வழங்க முடியாமை காரணமாக மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

**(4) மனுதாரருக்கு அநீதி இழைக்கப்படாமை காரணமாக நிவாரணம் வழங்க முடியாத சந்தர்ப்பங்கள்**

**திரு எம். சந்திரன் -சீஔம்/பிபி/2011/845**

பொது நிருவாக சுற்றறிக்கை 15/91 மற்றும் சேவை மூப்புப் பட்டியலுக்கு அமைய தமக்கு உரித்தாக வேண்டிய அரசாங்க சுகாதார பரிசோதகர் முதலாவது தரம் தொடர்பான பதவி உயர்வைப் பெற்றுத் தருமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையாது 1 ஆம் வகுப்பு கிடைக்காத மனுதாரரை விட சேவை மூப்பு உள்ள அலுவலர்கள் இருப்பதை அவதானித்த குழு மனுதாரருக்கு தமது பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான காரணிகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக பதவி உயர்வு கிடைக்கவில்லை என்றும், அதற்கமைய அவருக்கு அநீதி இழைக்கப்படவில்லை என்றும் அவதானித்த குழு இந்த மனுவை நிராகரித்துள்ளது.

**(5) மனுதாரர் தமது கருத்துக்களை வெளியிடாமை மற்றும் மனு தொடர்பில் அவரின் ஊக்கம் இல்லாமை**

திரு. நாவுலகே ரஞ்ஜித் - சீஔம்/பிபி/2011/709

இந்த மனு தொடர்பாக போக்குவரத்து அமைச்சிடம் கோரப்பட்ட அறிக்கை மனுதாரருக்கு அவரின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர் அதற்குப் பதில் அனுப்பாமை காரணமாக மனு தொடர்பில் மனுதாரர் ஊக்கம் கொள்ளவில்லை எனக் கருதிய குழு மனுவை நிராகரித்தது.

## 19. எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் 2015.09.01 ஆம் திகதி முதல் 2016.08.31 ஆம் திகதி வரை விசாரிக்கப்பட்ட மனுக்களின் பொழிப்பு

### (அ) பொது மனுக்கள் குழு அலுவலகத்திற்குக் கிடைத்த மனுக்கள் பற்றிய பொழிப்பு

| | | |
|---|---|---|
| 1. | பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | 1406 |
| 2. | நிலையியற் கட்டளைகளுக்கு இணங்கியொழுகாமையினால் குழுவினால் நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 377 |
| 3. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 1029 |
| 4. | ஒம்புட்ஸ்மானுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 32 |
| 5. | குழு நடாத்தப் பட்ட தடவைகளின் எண்ணிக்கை | 14 |
| 6. | குழுவினால் விசாரிக்கப்பட்ட மனுக்கள் | 123 |
| 7. | நிவாரணம் பெற்றுக்கொண்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | 8 |
| 8. | குழுவின் ஆரம்ப விசாரணையின் பின் நிவாரணம் வழங்க முடியாதென தீர்மானித்து நீக்கப்பட்ட மனுக்கள் | 31 |

### (ஆ) வழங்கப்பட்ட நிவாரணங்களுக்குமைய பொழிப்பு

| | சம்பந்தப்பட்ட அமைச்சும் கோப்பு இலக்கமும் | நிவாரணம் கிடைத்துள்ள மனுக்கள் |
|---|---|---|
| 1. மீண்டும் சேவையில் அமர்த்துதல் | | 1 |
| | துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் – (162) | |
| 2. பதவியுயர்வு வழங்குதல் | | 1 |
| | கமத்தொழில் -(216) | |
| 3. இடமாற்றங்களை இரத்துச் செய்தல் | | 1 |
| | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகம்– (520) | |
| 4. காணி மற்றும் சொத்துக்கள் பிணக்குகளை தீர்த்துவைத்தல் | | 2 |
| | அரச தொழில்முயற்சி அபிவிருத்தி(314) – | |
| | காணி – (34) | |
| **5.** மகாபொல புலமைப்பரிசில் மாணவர் உதவித்தொகை வழங்கல் | | 1 |
| | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் – (185) | |
| 6. உரித்துடைய பதவிக்கு நியமித்து படிஏற்றங்களை வழங்கல் | | 1 |
| | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி – (2) | |
| 7. சிரேட்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவை வழங்கல் | | 1 |
| | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை – (298) | |
| | மொத்தம் | 8 |

## (இ) மனுக்கள் புலனாய்வு செய்யப்பட்ட அமைச்சிற்கேற்ப சுருக்கம்

| தொடர் இல | அமைச்சு | குழுவினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழு நிவாரணம் வழங்குமாறு விதந்துரைத்த மனுக்களின் எண்ணிக்கை | அவ்விதப்புரைகளுக்கேற்ப நிவாரணம் வழங்கப்பட்டுள்ள | விதப்புரை செய்யப்பட்ட மனுக்களில் நிவாரணம் கிடைத்த வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 1 | விவசாயம் | 15 | 1 | 1 | 1 | 100 |
| 2 | நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் | 9 | 3 | 3 | **மே.வி.** | |
| 3 | பாதுகாப்பு | 46 | 12 | 3 | **மே.வி.** - | |
| 4 | அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் | 3 | - | - | - | - |
| 5 | கல்வி | 70 | 7 | 3 | **மே.வி.** | |
| 6 | நிதி | 8 | 1 | 1 | **மே.வி.** | |
| 7 | கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி | 3 | - | - | - | - |
| 8 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 5 | 3 | 3 | **மே.வி.** | |
| 9 | சுகாதாரம்,போசனை மற்றும் சுதேச மருத்துவத்துறை | 33 | 5 | 3 | **மே.வி.** | |
| 10 | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் | 23 | 4 | 4 | 1 | 25 |
| 11 | உள்நாட்டு அலுவல்கள் | 26 | 3 | 0 | - | - |
| 12 | வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு | 5 | 1 | 1 | **மே.வி.** | |
| 13 | கைத்தொழில் மற்றும் வாணிப | 16 | 3 | 3 | **மே.வி.** | |
| 14 | உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | 1 | 1 | 0 | **மே.வி.** | |
| 15 | நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவம் | 10 | - | - | - | - |
| 16 | நீதி | 4 | - | - | - | - |
| 17 | தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 6 | 2 | 1 | **மே.வி.** | |
| 18 | காணி | 39 | 3 | 2 | 1 | 50 |
| 19 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி | 83 | 6 | 3 | **மே.வி.** | |
| 20 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் | 15 | 1 | 0 | - | - |
| 21 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி | 8 | 4 | 4 | **மே.வி.** | |
| 22 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | 6 | 2 | 0 | - | - |

**மே.வி. - மே**ம்பாடு பற்றி **வி**னவப்பட்டுள்ளது

| தொடர் இல | அமைச்சு | குழுவினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | குழு நிவாரணம் வழங்குமாறு விதந்துரைத்த மனுக்களின் எண்ணிக்கை | அவ்விதப்புரைகளுக்கேற்ப நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | விதப்புரை செய்யப்பட்ட மனுக்களில் நிவாரணம் கிடைத்த வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 23 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகம் | 12 | 3 | 3 | 1 | 33 |
| 24 | பெற்றோலிய வள அபிவிருத்தி | 1 | - | - | - | - |
| 25 | பெருந்தோட்டக் கைத்தொழில் | 6 | 5 | 2 | **மே.வி.** | |
| 26 | துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் | 4 | 2 | 1 | 1 | 100 |
| 27 | தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் | 19 | 5 | 2 | **மே.வி.** | |
| 28 | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி | 26 | 5 | 4 | 1 | 25 |
| 29 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,மீள குடியமர்த்தல் மற்றும் இந்துமத அலுவல்கள் | 12 | 4 | 1 | **மே.வி.** | |
| 30 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 39 | 14 | 12 | **மே.வி.** | |
| 31 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவம் | 36 | 6 | 4 | **மே.வி.** | |
| 32 | அரச தொழில்முயற்சி அபிவிருத்தி | 28 | 11 | 3 | 1 | 33 |
| 33 | கிராமிய பொருளாதாரம் | 1 | 1 | 1 | **மே.வி.** | |
| 34 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி | 2 | 1 | 1 | **மே.வி.** | |
| 35 | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை | 8 | 1 | 1 | 1 | 100 |
| 36 | நிலைபெருதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் | 2 | - | - | - | - |
| 37 | தொலைதொடர்புகள் மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் | 6 | - | - | - | - |
| 38 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் | 31 | - | - | - | - |
| 39 | ஜனாதிபதி செயலாளர் | 3 | 1 | 0 | - | |
| | மொத்தம் | 670 | 121 | 70 | 8 | 11 |

**மே.வி. - மேம்பாடு** பற்றி **வினவப்பட்டுள்ளது**

**(ஈ) நிருவாக அலுவல்கள் பற்றிய ஆணையாளருக்கு (ஒம்புஸ்மன்) சம்பந்நதப்பட்ட மனுக்களின் பொழிப்பு-**

| **2015.09.01-2016.08.31 காலப்பகுதிக்குள்:-** | |
|---|---|
| நிருவாக அலுவல்கள் பற்றிய ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 32 |
| அவ்வாறு அனுப்பப்பட்ட மனுக்களுள் நிருவாக அலுவல்கள் பற்றிய ஆணையாளரால் விசாரிக்கப்பட்டு குழுவிற்கு அறிக்கையிடப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 5 |
| நிருவாக அலுவல்கள் பற்றிய ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மனுக்களில் பொதுமனுக்குழு விசாரித்த மனுக்களின் எண்ணிக்கை | 2 |
| நிருவாக அலுவல்கள் பற்றிய ஆணையாளரின் மனுக்களில் நீக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 1 |

## 20. குழுவினால் நிவாரணம் வழங்கப்பட்ட 8 மனுக்கள் தொடர்பான விசாரணை

(1) **திரு. கே.ஜி.விக்கிரமசிங்க**

**அரசாங்க அச்சகத் திணைக்களம்,கொழும்பு 08.**

**சீஓஎம்/பீபீ/2016/520**

தனக்கு 59 வயதாக இருக்கின்றபோது தான் பணிபுரிந்துவரும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் பதவி வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் வழங்கப்படும் சிறப்புரிமைகளைக் கவனத்தில் கொள்ளாது தனக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், தான் ஓய்வுபெறும்வரை தனது அலுவலகததில் பணிபுரிவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை முன்வைத்துள்ளார்.

குறிப்பிட்ட மனுவை விசாரித்த குழுவின் சிபாரிசுக்கு அமைய மனுதாரரின் இடமாற்றத்தினை இரத்துச் செய்யுமாறு அரசாங்க அச்சகத் தலைவரினால் ஒருங்கிணைந்த சேவையின் பணிப்பாளர் நாயகத்திற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(2) **செல்வி கே.பி.எஸ்.பிரசந்திகா**

**இல.02, கஹட்டகஸ்வத்த, கொடகந்த, காலி.**

**சீஓஎம்/பீபீ/2015/185**

ருகுனு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் சமுர்த்தி பெறுநரும் குறைந்த வருமானமுடைய குடும்ப அங்கத்தவருமான மனுதாரர் தான் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிவருவதாகக் குறிப்பிட்டு தனக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்குமாறு கோரி மனுவை முன்வைத்துள்ளார்.

குறிப்பிட்ட மனு தொடர்பில் குழு அறிக்கை கோரியபோது மனுதாரர் மகாபொல புலமைப்பரிசில் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவரென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதுடன் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் மாணவர் உதவித்தொகை 4000/- ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதன் ஊடாக மனுதாரர் திருப்தியடைந்துள்ளதால் மனு விசாரணை பூர்த்தி செய்யப்பட்டது.

(3) **திரு.கே.டபிள்யூ ஆனந்த திஸாநாயக்க**

**இல.287/2, கபுவெலிகந்த , நாபாவல, அவிசாவலை**

***சீஓஎம்/பீபீ/2015/162***

தான் இலங்கை துறைமுக அதிகார சபையில் பணிபுரிந்தபோது தன்னை நிரந்த சேவையில் அமர்த்தும் சந்தர்ப்பத்தில் தான் பொய்யான கல்விச் சான்றிதழ்களை முன்வைத்துள்ளதாகக் கூறி பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் அப்போது தனது கல்விச் சான்றிதழ்களில் தவரற்ற நிலையை விளக்குவதற்கு முயற்சி செய்தபோதிலும் தனக்கு அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையெனவும் தனக்கு மீண்டும் தொழில் வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை முன்வைத்துள்ளார்.

குழு அது பற்றிய விசாரணையின்பொது மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தீர்மானித்து நிலுவை சம்பளத்துடன் அவரை மீள சேவையில் அமர்த்துமாறு செய்யப்பட்ட விதப்புரைக்கு அமைய, மனுதாரர் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். நிலுவை சம்பளம் வழங்குவது பற்றி விசாரிப்பதற்கு குழு தீர்மானித்தது.

(4) **திரு.என்.ஏ.வீரசூரிய**

***சமந்தி, நெஹின்ன, தொடங்கொட.***

***சீஓஎம்/பீபீ/2015/314***

காணித்துண்டையும் வீட்டையும் குத்தகைக்கு வைத்து தான் பிராந்திய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகையும் வட்டியுமான ரூபா 3,12,000/- செலுத்தப்பட்டுள்ளபோதிலும் 4,50,000/- ரூபா தொகையை வங்கிக்கு செலுத்தி காணியையும் வீட்டையும் மீட்டுக்கொள்ளுமாறு வங்கி வாய்மூலம் தனக்கு அறிவித்துள்ளதாகவும் அது தொடர்பில் இழைக்கப்பட்டுள்ள ஊழலை தீர்த்துவைக்குமாறு கோரி மனுதாரர் மனுவை முன்வைத்துள்ளார்.

குறிப்பிட்ட மனு பற்றி அமைச்சினால் விசாரிக்கப்பட்டபோது, மனுதாரருக்கு வட்டி சலுகை வழங்கப்பட்டு சொத்தை மீட்டுக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்துக்கு அமைய ஒழுகி மனுதாரரால் சொத்து மீட்கப்பட்டுள்ளது.

(5) **திரு.ஆர்.எம். பத்தமசிறி**

**இல.67, பாடசாலை வீதி, எத்தலபிட்டிய, பண்டாரவெல**

***சீஒஎம்/பீபீ/2015/2***

இலங்கை மின்சார சபை ஊழியரான தனக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டினை முன்வைத்து தண்டனை வழங்கப்பட்டதாகவும், தனது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படட உள்ளக விசாரணைக்கு அமைய தான் குற்றமற்றவரென தெளிவானபோதிலும் நிவாரணம் வழங்கப்படாததால் தன்கது நியாயமளிக்குமாறு கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மனுவை விசாரித்த குழு, மனுதாரர் குறிப்பிட்ட பிரச்சினையை எதிர்நோக்காதவிடத்து அவர் இருக்கவேண்டிய பதவியில் நியமித்து அவரிடமிருந்து தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்குமாயின் அத்தொகையையும் படி ஏற்றங்களையும் சரியான முறையயில் வழங்கி அவரை சேவையில் அமர்த்துமாறு வழங்கப்பட்ட விதப்புரைக்கு அமைய மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

(6) **செல்வி கே.சுஜாதா ரமனி பெரேரா**

**இல.71, முதலாவது ஒழுங்கை, மத்திய வெலிகட வீதி, ராஜகிரிய.**

***சீஒஎம்/பீபீ/2015/298***

தந்தையின் பின் தாய் பெற்றுக்கொண்ட ஓய்வூதியத்தை அவர் இறந்தபின் இழந்ததாக கூறும் மனுதாரர் தான் தொழில்புரிய முடியாது நிர்க்கதியான நிலையில் இருப்பதை அவதானித்து மாதாந்த கொடுப்பனவொன்றை கோரி மனுவை முன்வைத்துள்ளார்.

குறிப்பிட்ட மனுவை விசாரித்த குழு, மனுதாரர் 70 வயதை பூர்த்தி செய்தவராக இருப்பதால் அவருக்கு முதியோருக்காக 2000/- ரூபா கொடுப்பனவை வழங்குமாறு வழங்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய அவருக்கு அக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

(7) **திரு குணபால விதாரண**

**இல.181, பண்டாரநாயக்க இடம், காலி**

***சீஒஎம்/பீபீ/2015/216***

விவசாய திணைக்களத்தில் பணிபுரிந்த பொது தனக்கு கிடைத்த புலமைப்பரிசிலுக்கு அமைய தான் வெளிநாடு சென்று திரும்பும்போது தான் பணிபுரிந்த பிரிவு பிறிதொரு திணைக்களமாக மாற்றப்பட்டிருந்ததாகவும் அதன் தலைவர் தனக்கு பதவி உயர்வுகளை தரவில்லையெனவும், தனக்கு உரிய பதவி உயர்வினை தகுந்த காலத்தில் பெற்றுத்தருமாறும் நிலுவை சம்பளம் வழங்குமாறும் கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் குழு விசாரித்து வழங்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய மனுதாரருக்கு 1977.05.01 ஆம் திகதி முதல் வலுப்பெறும் வகையில் அரச சேவையின் மத்திய மட்ட தொழில்நுட்ப இணைந்த சேவை தரம் ii "அ" வகுதிக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(8) **திரு.டபிள்யூ.பீ.தயாரத்ன**

**இல.405/பீ,ரிட்டிகலஹேன, மாவத்தகம, பாதுக்க**

***சீஓஎம்/பீபீ/2015/34***

தான் வதியும் காணி அனுமதிப்பத்திரம் தனது தந்தையின் பெயரில் இருந்ததாகவும் அதில் பதிலியாக தனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தந்தையின் பின் காணி உரிமை தனது தாய்க்கு கிடைத்தபின் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்திலிருந்து தனது பெயர் நீக்கப்படடுள்ளதாகவும் அது தொடர்பில் நியாயமளிக்குமாறும் கோரி மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் குழு அமைச்சிடம் வினவியபோது, காணியின் அனுமதிப்பத்திரதாரியான மனுதாரரின் தந்தை பெயர் குறிப்பிட்ட மனுதாரருக்கு சொத்தின் உரிமை இருப்பதாகவும், நோயில் இருக்கும் முதியவரான மனுதாரரின் தாய் அவரின் பின் உரிமையை மனுதாரருக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அமைச்சினால் அறிக்கையிடப்படடுள்ளது.

## 21. குழுவினால் நிவாரணம் அளிக்கப்படாத சில சந்தர்ப்பங்கள்

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பொது மனுக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட சில மனுக்கள் குழுவினால் விசாரிக்கப்பட்டபின் நீக்கப்பட்டன. மனுதாரருக்கு அரசாங்க உத்தியோகத்தரால் அநீதி இழைக்கப்பட்டில்லையென தெளிவாதல், நிறுவனத்தின் வலுவிலுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய நிவாரணம் வழங்க முடியாத நிலை, எதிர்பார்க்கப்படும் நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லாமையால் அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் நிருவாக மேல்முறையீட்டு நியாயாதிக்க அதிகார சபை ஆகியவற்றால் நிராகரிக்கப்படல், மனுதாரருக்கு மனு தொடர்பில் ஊக்கமின்மை, மனுதாரரின் பதில் இன்மை ஆகிய காரணங்களால் பின்வரும் மனுக்கள் நீக்கப்படடுள்ளன.

**திரு.எச்.டபிள்யூ பிரியந்த- மனு இலக்கம் சீஓஎம்/பீபீ/2015/130**

பொலிஸ் கான்ஸ்டபிலாக பணிபுரிந்தபோது திருமணமாகுவதற்காக தனக்கு பொறுப்பான பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகரிடமிருந்து அனுமதி கோரப்பட்டபோது பதிலளிக்கப்படவில்லையெனவும் பயிலுநராக இருக்கும் காலத்தில் திருமணமாகுவது தவறென தான் அறிந்திருக்கவில்லையெனவும் கூறி தன்னை மீள சேவையில் அமரத்துமாறு மனுதாரர் கேரியுள்ளார்.

மனுதாரர் முறையாக அனுமதி பெறாது திருமணமானது பொலிஸ் திணைக்களத்தின் வலுவிலுள்ள கட்டளைகளுக்கும் ஆட்சேர்ப்பு நடபடிமுறைக்கும் முரணானதாக இருப்பதால் மனுதாரரரை மீள சேவையில் அமர்த்த முடியாததால் குறிப்பிட்ட மனு நீக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.டி.எஸ். மனோகர - *சீஓஎம்/பீபீ/*2015/110**

வீட்டில் ஏற்பட்ட விபத்து காரணமாக லீவு கோரி கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் வேலையை விட்டுச் சென்றதாகக் கருதி செயற்பட்டுள்ளதால் மீள சேவையில் அமர்த்துமாறு கோரி முன்வைக்கப்பட்ட மனு

மனுதாரர் முன்வைத்துள்ள வைததிய அறிக்கையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டிருத்தல், அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த மேல் முறையீடு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முன்வைக்கப்படாமை காரணத்தால் நிராகரிக்கப்பட்டிருத்தல், நிருவாக நியாயாதிக்க சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்த மேல் முறையீட்டில் தொடர்ந்து மூன்று தடவைகள் சமூகமளிக்கத் தவறுதல் காரணமாக மனு நீக்கப்பட்டிருத்தல் போன்ற காரணங்களை அவதானித்த பொது மனுக்குழு மனுவை நீக்கியுள்ளது.

**திரு. ரீ.எம்.டி.எஸ்.டபிள்யூ முணசிங்க- *சீஓஎம்/பீபீ/*2015/113**

கிராம உத்தியோகத்தராக பணிபுரிந்துள்ள மனுதாரர் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 2/7 பிரிவின் கீழ் ஓய்வுபெற்று மீண்டும் சேவையில் சேர்ந்து மீண்டும் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளுமபோது தனக்கு குறைவாக ஓய்வூதியம் செலுத்தப்படுவதாகவும் அதனை திருத்துமாறும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மனுதாரர் தனது முதலாவது சேவையின்போது அறவிடப்படாத ஓய்வூதியத்தையும் அவரது இரண்டாவது சேவையின்போது அறவிடப்பட்ட ஓய்வூதியத்தையும் ஒப்பிட்டு நோக்கி தனக்கு குறைந்தளவு ஓய்வூதியம் வழங்கப்படுவதாக தவறாக புரிந்துகொண்டுள்ளதால் பிணக்கு எழுந்துள்ளதாக அவதானித்த பொது மனுக்குழு அவரது ஓய்வூதியம் சரியான முறையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவதானித்ததால் மனுவை நீக்கியுள்ளது.

# நன்றி

1. ஆரம்ப குழுவினதும், அதன் பின்னர் இதுவரைகாலம் செயற்பட்டு வந்த குழுக்களினதும் அங்கத்தவர்களான கௌரவ உறுப்பினர்கள்,
2. குழுவின் தவிசாளராக செயலாற்றிய சகல கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள்,
3. எம்முடன் செயலாற்றிய சகல ஒம்பூட்சுமான்மார் மற்றும் அவர்களின் பணியாட்டொகுதியினர்,
4. குழுவை நடாத்திச் செல்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் அறிவைப் பெற்றுக் கொடுத்து செயலாற்றிய பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம், பணியாடொகுதியன் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமும் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம்,
5. குழுவில் அடையப்பெற்ற இணக்கப்பாடுகளை அமுல்படுத்தி மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு உதவிய சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அவர்களின் பணியாட்டொகுதியினர்,
6. குழுவின் கோரிக்கையின் பிரகாரம் அமைச்சரவை நிருபங்களைச் சமர்ப்பித்து அதன் மூலம் தமது ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கிய அமைச்சர்கள் மற்றும் மேற்படி அமைச்சரவை நிருபங்களுக்கு அங்கீகாரம் வழங்கிய அமைச்சரவை மற்றும் அதற்குப் பங்களிப்பு வழங்கிய சகல அலுவலர்கள்,
7. குழுப் பணியகத்தில் துணைக் குழுவொன்றாக பொது மனுக்கள் பற்றிய குழுவை நடாத்திச் சென்று பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் சார்பாக செயலாற்றிய முன்னாள் சகல பொது மனுக்கள் பற்றிய குழுக்களினதும் செயலாளர்கள் மற்றும் அவர்களின் பணியாட்டொகுதியினர்,
8. இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக அறிவு மற்றும் உழைப்புப் பங்களிப்பை வழங்கிய தற்போதைய பொது மனுக்கள் பற்றிய குழுப் பணியகத்தின் சகல அலுவலர்கள் உட்பட சகல பாராளுமன்ற பதவினருக்கும்

ஆகியோருக்கு எட்டாவது பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழு தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

*[5 ஆம் பிரிவு]*

## <u>அட்டவணை 1</u>

மனுவின் மாதிரியமைப்பு

| |
|---|
| கௌரவ சபாநாயகர் அவர்களே,<br>பின்வரும் மனுவை நான் சமர்ப்பிக்கின்றேன்<br>(பாராளுமன்ற உறுப்பினரின் பெயர்,<br>கையொப்பம்,<br>திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை) |

மனுதாரரின் பெயரும், முகவரியும்
திகதி

கௌரவ சபாநாயகர் அவர்கள்,
பாராளுமன்றம்,
கோட்டே.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

இடம்பெற்றுள்ள அநீதி

.....................................................................................................................................

கோரப்படுகின்ற நிவாரணம்

.....................................................................................................................................

மனுதாரரின் ஒப்பம் அல்லது கைவிரல் அடையாளம்.

## *அட்டவணை 2*

*மனு நிராகரிக்கப்படுவதற்கு அடிப்படையாக அமையக்கூடிய விடயங்கள்*

*கீழே பகுதி "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் மனுவில் இருப்பின் அவற்றைச் சீர் செய்து மீண்டும் மனுக் குழுவுக்கு சமர்ப்பிக்கலாம்.*

### *பகுதி "அ"*

(1) *மனு கௌரவ சபாநாயகருக்கு முகவரியிடப்படாமை.*

(2) *மனுவின் மேல் பகுதியில் "கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த மனுவைச் சமர்ப்பிக்கின்றேன்" என்று குறிப்பிடப்பட்டு, தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கைச்சாத்திடப்படாதுள்ளமை. (உறுப்பினர் மனுவில் கைச்சாத்திடாது முகப்புக் கடிதம் மூலம் ஆற்றுப்படுத்துதல் போதுமானதல்ல)*

(3) *மனுவில் உள்ளடங்கும் விடயங்கள் மிகச் சுருக்கமாகவும் (இரண்டு பக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையில்), தெளிவாகவும் சமர்ப்பிக்கப்படாமை.*

(4) *கோரிநிற்கும் நிவாரணம் தொடர்பான வேண்டுதலுடன் நிறைவு செய்யப்படாமை.*

(5) *மனுதாரர் மனுவில் கைச்சாத்திடாது / பெருவிரல் அடையாளமிடாதுள்ளமை.*

(6) *மனுவின் மூலப் பிரதி அனுப்பப்படாமை (கையொப்பம் நிழற் பிரதியொன்றாக இருத்தலாகாது என்பதுடன் மனுவின் பிரதியை அல்லது வேறு இணைப்புகளை அனுப்புவது அவசியமற்றது)*

(7) *பின்வரும் நிறுவனங்களின் முன்னிலையில் தற்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளமை.*

- I. *நீதிமன்றம்,*
- II. *ஒம்பூட்சுமான்,*
- III. *மனித உரிமைகள் ஆணைக்குழு*
- IV. *பகிரங்க சேவைகள் ஆணைக்குழு*

*பின்வரும் "ஆ" பகுதியின் ஒரு விடயமேனும் மனுவின் குறைபாடாக இருப்பின் மனு நிராகரிக்கப்படும் என்பதுடன், இதனை மீண்டும் சமர்ப்பிக்க முடியாது.*

### *பகுதி "ஆ"*

(1) *அரச அல்லது சமமான வேறு நிறுவனமொன்றின் அலுவலர் ஒருவரினால் அடிப்படை உரிமை மீறல் அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படாமை.*

(2) *அமைச்சரவைத் தீர்மானத்தை மாற்றியமைக்குமாறு கோரல்.*

(3) *நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை மாற்றியமைக்குமாறு கோரல்*

(4) *ஒரு தடவை பொது மனுக்கள் பற்றிய குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ள விடயமொன்றுடன் சம்பந்தப்பட்டுள்ளமை.*

(5) *பொது மனுக்கள் பற்றிய குழுவினால் ஒரு தடவை நிவாரணம் வழங்கப்பட்டுள்ள விடயமொன்று தொடர்பாக மேலதிக நிவாரணங்களை எதிர்பார்த்து மீண்டுமொரு முறை சமர்ப்பித்துள்ளமை.*

(6) *முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பானதாக இருத்தல்.*

(7) *2007.05.24 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானவர்கள் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சிபாரிசு செய்யப்பட்ட நிவாரணங்களை அமுல்படுத்துமாறு கோரல்.*

**[11 (iii) வாசகம்]**

# <u>அட்டவணை 3</u>

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

**எனது இலக்கம்** E&O/AC/1/8/6

2014 **ஒக்தோபர் 10 ஆம் திகதியன்று**

**சகல அமைச்சு செயலாளர்களுக்கும்,**

**<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது மனுக் குழு மற்றும் நிருவாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) இனால் வழங்கப்படுகின்ற சிபார்சுகள் நடைமுறைப்படத்தப்படாமை தொடர்பாக அமைச்சரவையை விழிப்புணர்வூட்டல்</u>**

அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு நிறுவன ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சனைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் பணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது மனுக் குழு மற்றும் நிருவாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) இனால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி நிறுவனங்களினால் குறித்த பிரச்சனைகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற பல சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாதேனுமொரு உத்தியோகத்தருக்கு மேற்படி சிபார்சுகளை நடைமுறைப்படுத்திவதில் சிரமமேதும் இருப்பின் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஊடாக அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அமைச்சரவையை அறிவுறுத்த வேண்டுமென அதி மேதகு சனாதியினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது மனுக் குழு மற்றும் ஒம்புட்ஸ்மன் ஆகிய தரப்புகளினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பாக இனி வருங் காலங்களில் தாங்கள் அறிவுறுத்தப்படுவதோடு, அதன் பொருட்டு மேற் குறிப்பிட்ட மூன்றாவது பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தாங்களின் கீழ் உள்ள நிறுவனங்களையும் அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

லலித் வீரதுங்க

சனாதிபதி செயலாளர்

1. பிரதிகள்1 நிருவாக அலுவல்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் - தகவலுக்காக
2. தவிசாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - தகவலுக்காக
3. பொது மக்கள் மனுக் குழு, இலங்கைப் பாராளுமன்றம் - தகவலுக்காக

*(மூல ஆவணத்தின் மொழிபெயர்ப்பு)*

**[11(V) வாசகம்]**

## <u>அட்டவணை 4</u>

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.

මහජන පෙත්සම් කාරක සභා කාර්යාලය
பொதுமனுக் குழு அலுவலகம்
**PUBLIC PETITIONS COMMITTEE OFFICE**

දුරකථන / தொலைபேசி / Telephones: 2777100, 2777302, 2777282, Ext.:5247, 6477
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 2777558

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව / இலங்கை பாராளுமன்றம் / **Parliament of Sri Lanka**
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ / ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே / Sri Jayewardenepura Kotte

2014. 03. 18

**கௌரவ சபாநாயகர்,**

**இலங்கை பாராளுமன்றம்.**

**<u>உள்நாட்டு/ வெளிநாட்டு பயிற்சி செயலமர்வுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெயரிடும்போது பொது மனுக்குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களையும் கவனத்தில் கொள்ளுமாறு முன்வைக்கப்படும் வேண்டுகோள்</u>**

மக்கள் பிரதிநிதிகள் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் மனுக்களை ஆராய்வதற்கு உங்களால் நியமிக்கப்பட்ட 29 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பொது மனுக்குழு அரசநிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக மக்களுக்கு ஏதேனும் அநீதி மற்றும் நீதி வழங்காமை இடம்பெற்றிருப்பதாக மனுக்களை விசாரிக்கும் போது தீர்மானித்தலில் அந்த அநீதியை நீக்குவதற்காக சிபாரிசுகளை வழங்கி மனுதாரர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதுடன் அந்த சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படாத போது அவற்றை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து மற்றும் ஏற்பாடுகள் இல்லாத போது கருணை அடிப்படையிலாவது மனுதாரர்களுக்கு நிவாரணங்களை வழங்க முயற்சித்து அதற்காக நடவடிக்கைகளை எடுப்பதுடன் அதன் மூலம் அவர்கள் பாராளுமன்றம் தொடர்பாக மக்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதாக நான் கருதுகின்றேன்.

பொது மனுக்குழுவின் முன்னாள் மற்றும் தற்போதைய அங்கத்துவ உறுப்பினர்கள் ஆளுங்கட்சி, எதிர்கட்சி வேறுபாடுகளின்றி மிகவும் அக்கறையுடன் குழுவின் நடவடிக்கைகளை வெற்றியடைய செய்வதற்காக தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளதுடன் அதன்படி ஏழாவது பாராளுமன்றக் காலவரையறைக்குள் இதுவரை மனுதாரர்கள் சுமார் 150 பேருக்கு நிவாரணம் வழங்க முடிந்துள்ளமையை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். எனது கடமைப்பளு அதிகமாக இருந்த சந்தர்ப்பங்களில் ஏனைய உறுப்பினர்களுள் திருமதி. தலத்தா அத்துகோரளை, டாக்டர். சுதர்சினி பெர்னாந்து பிள்ளை, சுஜிவ சேனசிங்க ஆகியோர் தலைமை பதவியை ஏற்று செயலாற்றியதுடன் கௌரவ உறுப்பினர்களான சரத் வீரசேகர, விநாயகமூர்த்தி முரளிதரன், பொன் செல்வராசா ஆகியோர் அந்த பணிகளில் தமது நேரடி பங்களிப்பினை வழங்கி செயற்பட்டிருக்காவிடின் பொது மனுக்குழுவின் நோக்கமான **"குழுவின் முன்வருகின்ற மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்கல்"** என்பது வெற்றியடையாதிருந்திருக்குமென உங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

பொதுமனுக்குழுவின் உறுப்பினர்கள் மக்களுடன் இணைந்து மனுக்களை ஆராயும் போது அவர்களது விடய அறிவு விரிவடைந்திருத்தல் அவசியம் என்பதுடன் அவர்களது விடய அறிவு மற்றும் அனுபவம் அதிகரிப்பதன் மூலம் அவர்களுக்கு தமது பணிகளை மிகவும் திறமையுடனும் பயனுள்ளவாறும் நிறைவேற்றுவார்கள் என்று எனக்கு தனிப்பட்ட முறையில் நம்பிக்கை இருப்பதனால் நேரடியாக பொதுமனுக்குழுவின் பணிகளில் ஈடுபடும் மேற்கூறிய அங்கத்துவ உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய அனைத்து உறுப்பினர்களையும் உள்நாட்டு / வெளிநாட்டு செயலமர்வுகளில் கலந்து கொள்ள பெயர் குறிப்பிடுவது தகுந்ததென பொது மனுக்குழுவின் தலைவர் என்ற வகையில் நான் மிகவும் கௌரவத்துடன் உங்களுக்கு அறிவிக்கின்றேன்.

உங்களுக்காகவும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்காகவும் தமது நேரத்தை அர்ப்பணித்து தமது கடமையை நிறைவேற்றும் பொதுமனுக்குழுவின் உறுப்பினர்களுக்கு அவ்வாறு உள்நாட்டு / வெளிநாட்டு புலமை பரிசில்களை வழங்குவதன் மூலம் அவர்களது கடமைகள் பெரிதும் மதிப்பிடப்படுவதுடன் அதனூடாக அவர்கள் பெரும் அர்ப்பணிப்புடன் பொது மனுக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுவார்களென நான் திடமாக நம்புகின்றேன்.

இங்ஙனம் நம்பிக்கையுள்ள

லலித் திசாநாயக்க, பா.உ
தலைவர்
பொது மனுக்குழு
(சுகாதார பிரதி அமைச்சர்)

*(மூல ஆவணத்தின் மொழிபெயர்ப்பு)*

## அட்டவணை 5

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: சீபீஏ/ 6 / ஓஎம் பீ/1/9

1996 ஒக்டோபர் 12

எனது அன்பார்ந்த அமைச்சர் அவர்களுக்கு,

**ஓம்புட்ஸ்மனின் (நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்) விதப்புரைகள்**

எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டிற்கான ஒம்புட்ஸ்மனின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் எனது அக்கறைகளை செலுத்த வேண்டியுள்ளது. அவருக்கு முன் வைக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலான அவரின் விதப்புரைகளை அதிகமான சந்தர்ப்பங்களில் அரசாங்க நிறுவனங்கள் கருத்திற் கொள்ளவில்லையென அவர் தெரிவித்திருந்தார்.

அவரின் குறைபாடுகளைத் தீர்க்கின்ற பொறிமுறைகளை, குறிப்பாக நிறைவேற்று செயல்கள் தொடர்பானவற்றை நாம் வலுப்படுத்துவோம் என்பது மக்களுக்கு நாம் வழங்கிய எமது அர்ப்பணிப்புக்களுள் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அர்ப்பணிப்பை நிறைவேற்றும் முகமாக, ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தொடர்பான சட்டங்களை நாம் திருத்தி, நேரடியாக அவரிடம் பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்படுவதை சாத்தியமாக்கினோம். இருப்பினும், மிகவும் கவனமான கலந்தாராய்வுகளின் பின்னர், ஒம்புட்ஸ்மன் மேற்கொள்கின்ற விப்புரைகளை அரசாங்க நிறுவனங்கள் பொருட்படுத்தாமல் இருக்குமேயானால் எமது நோக்கம் பயனற்றதாகிவிடும்.

சம்பந்தப்பட்ட சகல விதப்புரைகளையும் விசாரித்த பின்னரே ஒம்புட்ஸ்மன் தனது விதப்புரைகளை மேற்கொள்கிறார். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொள்கை தொடர்பான பரிசீலனைகள், நிதிரீதியான தாக்கங்கள் உள்ளடங்கலாக, சகல விடயங்கள் தொடர்பான தமது கருத்துக்களை அவரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு உண்டு. சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பிலான சகல அம்சங்களையும் ஆராய்ந்து சுதந்திரமான தீர்மானத்தினை ஒம்புட்ஸ்மன் எடுப்பார் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே, ஒம்புட்ஸ்மனினது தீர்மானங்கள் கட்டாயமாகவில்லாவிடினும் கவனமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அரசின் ஏதேனும் முக்கிய காரணங்களால் ஏதாவது விதப்புரைகள் நடைமுறைப்படுத்த முடியாமல் போனால், அது தொடர்பில் கூட்டுத் தீர்மானமொன்றை மேற்கொள்ளும் முகமாக, சம்பந்தப்பட்ட அமைச்சர் அமைச்சரவையின் முன் அதனை சமர்ப்பித்தல் வேண்டும்.

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள, ஒம்புட்ஸ்மன் தனது தீர்மானங்களை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அறிவித்தல் வேண்டும் என்பது தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்க மற்றும் இந்தத் தீர்மானங்களுக்கு உரிய கவனம் செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் ஏதேனும் பிரச்சினையான விடயங்கள் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குமான சந்தர்ப்பத்தை இந்நடைமுறை தங்களுக்கு அளிக்கின்றது.

தன் விருப்பப்படியான, பக்கசார்பான அல்லது நியாயமற்ற நிறைவேற்றுச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக ஒம்புட்ஸ்மன் நிறுவனம் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவது எமது கடமை என்பதை நான் மீள்வலியுறுத்துகிறேன்.

உண்மையுள்ள
ஒப்பம் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் - தகவலுக்காக

*(மூல ஆவணத்தின் மொழிபெயர்ப்பு)*

## அட்டவணை 6

**பொது நிருவாக சுற்றிக்கை : 17/2005**

எனது இலக்கம் ஆ/1/1/2/4/1
பொது நிருவாக
உள்நாட்டலுவல்கள்
அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2005.10.05

அமைச்சு செயலாளர்கள்
மாகாண சபைகளின் தலைமை செயலாளர்கள
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகளின் தலைவர்கள்

**மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் போது அரச நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்**

1996 ஆம் ஆண்டின் 21 ஆவது இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின்படி னித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் பின்னரும் கடமைகள் தொடர்பாக உங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

(அ) அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதாக உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும் அடிப்படைய மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவற்றை பின்பற்றுவதை மேம்படுத்துவதற்காக நிறைவேற்று மற்றுமு் நிருவாக வழிமுறைகள் மற்றும் செயலாற்று விதிமுறை தொடர்பான விழிப்புடன் இருத்தல்.

(ஆ) அடிப்படை மனித உரிமை மீறுதல் அல்லது மீறுவதற்கு அண்மித்திருத்தல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரித்தல் அல்லது ஆராய்வதற்கும் மற்றும் இங்கு இனிமேல் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அவற்றை இணக்கத்துக்கு கொண்டு வருதல் மற்றும் சமாதானப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஊடாக அவற்றை நீடித்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

(இ) அடிப்படைய உரிமைகளை மேம்படுத்தல், விருத்தி செய்தல், மற்றும் பாதுகாப்பதற்கான சட்டரீதியிலான மற்றும் நிருவாக ரீதியிலான கட்டளைகள் மற்றும் செயலாற்று விதிமுறைகளை தயாரித்தல் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கூறிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது உங்கள் நிறுவனத்துடன் தொடர்பான பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பரிசீலனைகளின் போது அந்த ஆணைக்குழுக்களுக்கு பொறுப்புடன் விடயங்களை முன்வைக்குமாறும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆணைக்குழு முன்வைக்கும் சிபாரிசுகள் உங்களுக்கு கிடைத்தவுடன் அந்த சிபாரிசுகளை நடமுறைப்படுத்த உரிய அனுமதியை அந்த அதிகாரிகளிடமிருந்து பெற்றதல் பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

டி. திசாநாயக்க
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

*(மூல ஆவணத்தின் மொழிபெயர்ப்பு)*